101

# ஜகன்மோகினி

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்மாள்

4-JAN 1941



## 18-வதாண்டுக் கொண்டாட்டம்

டிசம்பர் 26-ந் தேதிக்குள் சந்தா அனுப்புவோருக்குப் பரிசுகள்.

டிசம்பர் கடைசி வரை புது நாவலுக்குக் குறைந்த விலை.

5 வருஷங்கள் சந்தாதாரராயிருப்போருக்கு இனாம் நாவல்கள்.

3 சந்தா சேர்த்துக் கொடுப்போருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

முழு விவரங்களுக்கு

உள்ளே படிக்கவும்.

101

நவம் 1940

சந்தோஷ மலர்
[தொடர்ச்சி]

அணா 2

# ஜகன்மோகினி

| | வருஷ சந்தா | தனிப்பிரதி | ஜீவியசந்தா |
|---|---|---|---|
| உள்நாடு | ரூ. 1-8 | 2 அணா | ரூ. 25. |
| வெளிநாடு | ரூ. 2-0 (3 ஷிலிங்) | 12 காசு | ரூ. 30. |

ஜீவிய சந்தாதாரருக்கு சஞ்சிகையை அனுப்புவதுடன், இனிமேல் நமது ஆசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் வெளியிடப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும். முன்பணமனுப்பவும், வி. பி. கிடையாது.

---

குறைந்த விலை | **அரிய சந்தர்ப்பம்** | கொஞ்சம் பிரதிகள்தான்

அடியிற்கண்ட நாவல்கள் மாத்திரம் சஞ்சிகை ரூபமாகக் கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால், வேண்டிய அன்பர்கள் உடனே முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

| | | சஞ்சிகை விலை. | தனிநாவல் விலை. | | | சஞ்சிகை விலை. | தனிநாவல் விலை. |
|---|---|---|---|---|---|---|---|
| ஜீவியச்சுழல் | ரூ. | 0 10 | 1 4 | ஆனந்தஸாகர் | ரூ. | 0 4 | 0 8 |
| கானல் நீர் | | 0 10 | 1 4 | மாலதி | | 0 4 | 0 8 |
| சந்திரமண்டலம் | | 0 8 | 1 0 | படகோட்டி | | 0 4 | 0 8 |

---

கீழ்க்கண்ட நாவல்களில், சில காபிகளில் பேபர் பழுத்திருப்பதால் (Shop-soiled) அவற்றைப் பாதி விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். தபாற் செலவு வேறு. 5 நாவல்களையும் ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் ரூ. **5** அனுப்பினால் தபாற் செலவு இனாம்.

கொஞ்சம் காபிகளே இருப்பதால் உடனே வாங்கிக்கொள்ளவும்.

| | | பாதி விலை. | | தபாற்செலவு. உள்நாடு | தபாற்செலவு. வெளிநாடு |
|---|---|---|---|---|---|
| வைதேகி | ரூ. | 1 4 | அணா | $4\frac{1}{2}$ | $6\frac{3}{4}$ |
| பத்மசந்திரன் | | 1 4 | | 4 | 6 |
| சாமளநாதன் | | 1 0 | | 3 | $4\frac{1}{2}$ |
| சாரமதி | | 0 14 | | $2\frac{3}{4}$ | $3\frac{3}{4}$ |
| பரிமளகேசவன் | | 0 10 | | 2 | 3 |

---

பல்லாயிரக்கணக்கானவர்
படித்து மகிழ்ந்த
நமது பொன்விழா நாவல்

## ஆத்மசக்தி

முதல் பதிப்பு—ஜனவரி **1940.**
இரண்டாம் பதிப்பு—ஏப்ரல் **1940.**

**11 ஆப்டோன் படங்கள்**
பலவர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன.
தபாற் செலவு உள்பட
உள் நாடு — ரூ. **1-4**
வெளி நாடு— **2** ஷில்லிங்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

**நீங்கள் பல வருடங்களாக**
**எதிர்பார்த்த புதிய பதிப்பு**

## மாதவமணி

**முற்றிலும் புதிதாக மாற்றி**
**பெரிதாக எழுதப்பட்டுள்ளது**
(முதல் பதிப்பு 24 பக்கங்கள் 3 அணா)
இரண்டாம் பதிப்பு 64 பக்கங்கள் 4 அணா
**தபாற்செலவு உள்பட**
உள்நாடு ரூ. 0—4—9 ஸ்டாம்பு
வெளிநாடு-2 போஸ்டல் கூபன்கள்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

4-JAN 194

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

| மலர் 17 | விக்ரம ஹூ ஐப்பசி மீ நவம்பர் 1940 | இதழ் 11 |
|---|---|---|

இராகம் : தரார்தரி. தாளம் : ரூபகம்.

**பல்லவி**

நகுமோமு ஜூபவேமிரா
நனுப்ரோவ நேரமேமிரா (ந)

**அநுபல்லவி**

ஸுகுமாரா ஸுந்தராகாரா
விகசிதமுகலோல ராமா! (ந)

**சரணம்**

பிகுவுலேக போஷிம்சே
பரமதயா நிதி நீவே
வகஜூபுட ஜாலமேல
வாமொரஸங்கு கோதாநாயகா! (ந)

**கருத்து.**

உனது சிரித்த அழகிய முகத்தைக் காட்டி என்னைக் காப்பதற்கு நேரமெதற்கப்பா? ஏ சுகுமாரா! ஸுந்தராகாரா! மலர்ந்த முகத்தையுடைய ஸ்ரீராமா! பிகுவில்லாமல் பக்தர்களைக் காக்கும் பரமதயாநிதி நீயேயல்லவா? எனக்கோர் வழிகாட்டத் தாமதம் எதற்கு? வரமளித்து காப்பாய் கோதாநாயகா!

ஷை கீர்த்தனை "சாமளநாதன்" 232-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது. ஸ்வரத்திற்கு உள்ளே 14-வது பக்கம் பார்க்கவும்.

---

## முக்கியமாகக் கவனிக்கவும்

மணியார்டர் செய்யும்போதும், கடிதங்கள் எழுதும்போதும் தங்கள் சந்தாநம்பரைத் தெரிவிக்கவும். தமிழ்நாடு தவிர மற்ற பிரதேசங்களிலுள்ள நேயர்கள் தங்கள் விலாசத்தை ஆங்கிலத்தில் விவரமாக எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.

—மானேஜர்.

1—11—40.

# க்ஷேமலாபங்கள்

## புதிய ஆண்டு: புதிய நாவல்

“மோகினி”யின் அன்பர்களே!

பரமாத்மாவின் கருணையாலும் உங்கள் பேருதவியாலும், “மோகினி”ச் செல்விக்கு அடுத்த இதழுடன் 17-வது ஆண்டு முடிவுற்று, வருகிற ஜனவரியில் 18-வது ஆண்டு இனிது பிறக்கப் போகின்றதை சந்தோஷத்துடன் தெரிவிப்பதுடன், எப்போதும் போல் உங்களுடைய பேராதரவை அளிக்க வேண்டுகிறேன்.

நிற்க, ‘ஆத்மசக்திக்குப் பின்னர் ஏன் இன்னும் தனிப் புத்தகம் எழுதவில்லை ?’ என்று பல நண்பர்கள் ஊக்கத்துடன் கடிதம் எழுதியும், நேரிலும் கேட்கிறார்கள்.

இதற்குமுன் ஒரு தனிப்புத்தகம் வெளியிட ஆவல் தூண்டினும் தேக அசௌக்கியம் இதுகாறும் ஓய்வு அளிக்காதிருந்ததால் சாத்தியப்படவில்லை. ஆண்டவனருளால் புது வருட இதழுடன் ஒரு தனிப்புத்தகம் வெளியிடவேண்டிய ஏற்பாடுகள் செய்துள்ளேன். அந்த பரந்தாமன் கருணைகூர்ந்து விரைவில் முடித்துத்தர அவனடி பணிகின்றேன். புத்தகத்தின் பெயரும், தீர்மானமான விலையும் அடுத்த இதழில் தெரிவிக்கின்றேன். அன்பர்கள் அந்தப் புத்தகத்தையும் ஆதரிக்கவேண்டுமாய் இப்போதே கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்பர்களுக்கோர் தனிச் சலுகைக் காட்டுவதற்காக ஒரு சௌகரியம் செய்திருக்கிறோம். அதாவது,— புத்தகம் இன்னும் பூராவும் அச்சாகி முடியவில்லையாதலால் அது எத்தனை பக்கங்களாகும் என்பது திட்டமாகச் சொல்லமுடியவில்லை. யுத்தத்தினால் காகிதமும், மையும் எவ்வளவு அதிக விலை விற்கிறதென்பதை நான் பலமுறை தெரிவித்திருக்கிறேன். இந்த நிலைமையில் தனிப் புத்தகம் போட அசாத்திய செலவு ஆகிறது. புத்தகம் முடிந்ததும் 8 அணாவுக்குமேற்பட்ட விலையில் விற்கவேண்டியிருப்பினும் நேயர்களுக்குச் சலுகை காட்டும் முறையில் டிஸம்பர் முடிவுவரை 8 அணாவுக்கே சந்தாதாரர்களுக்குப் பிரத்யேகமாய்க் கொடுக்கப்படும்.

குறிப்பு:—டிஸம்பர் மாதம் முடிவுக்குள் 1941 வருஷத்திய (மோகினியின் 18-வது ஆண்டு) சந்தாத் தொகையுடன் எட்டணா சேர்த்து முன்பணமனுப்புகிறவர்களுக்கு மட்டுந்தான் 8 அணா விலையில் தபால் செலவு இனாமாக அனுப்பப்படும்.

டிஸம்பர் முடிந்தபிறகு அனுப்பும் சந்தாநேயர்களுக்கு புத்தகத்தில் கண்டுள்ள விலைக்குத்தான் கொடுக்கமுடியும் ‘தபால் செலவு வேறு’ என்பதை அன்பர்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நன்றியுள்ள,

வை. மு. கோதைநாயகி.

## நித்தியானந்தரின்

# ரேடியோ டயரி



[வை. மு. ஸ்ரீநிவாஸன், M. A., B. L.]

## நக்ஷத்திரக் கச்சேரி

நித்தியானந்தர் :—வரணும் சர்மாஜி! நேற்றிரவு வந்திருக்கக்கூடாதா? அடடா? எப்பேர்ப்பட்ட கச்சேரி! ஒவ்வொரு உருப்படியும் திகட்டா அமுதாகவன்றோ அமைந்தது! என்ன வித்வதாம்சம்! என்ன இனிமை! என்ன ஆனந்தம்! இன்னும் காதிலேயே இருக்கிறது.

லாவண்யசர்மா :—யாருடைய கச்சேரி அவ்வளவு விசேஷமாக விருந்தது? அரியக்குடியா? அல்லது செம்மங்குடியா?

நி :—அவ்விருவருடைய கச்சேரிகளையும் இப்போது கேட்பதே அரிதாகிவிட்டதே! கண்ட அடாஸ் பாடகர்களும், சர்வ சாதாரண பாடகர்களும் அடிக்கடி பாடுகிறார்கள். பெரிய வித்வான்களுக்கு அவ்வளவு முக்கியத்வம் கொடுப்பதில்லை. இப்போது உலகமே தலைகீழாகவில்லையா!... அது கிடக்கட்டும். நேற்று பாடியவர் பாலக்காடு ராமா பாகவதர். அதியற்புதமாகப் பாடினார்.

## "ஏ. ஒன்" பிரசங்கம்

லா :—இம்மாதிரி கச்சேரிகளையும் விசேஷ நிகழ்ச்சிகளையும் கேட்டுக் களிக்கும் நாள் என்றுதான் வருமோ! ஸ்ரீ வி. ஸி. கோபாலரத்னம் அவர்களின் பேச்சு பேஷா இருந்ததாக சுப்புகுட்டி சொன்னான். நீங்கள் கேட்டீர்களோ இல்லையோ?

நி :—நன்றாயிருக்கு நீர் கேட்பது! "வெண்ணையை வைத்துக் கொண்டு நெய் இருக்கா" என்று கேட்கிறாப்போல இருக்கே! தமிழ் தெரிந்தவர்களின் வீட்டில் ரேடியோ இருந்தால் அவருடைய சுவைநிறைந்த பேச்சைக் கேட்காமலிருக்கமுடியுமா? அன்றைக்கு சுப்புகுட்டியும் நம் மாத்திலேதான் கேட்டான். அந்த பேச்சுக்கு பத்து நிமிஷம் முன்னே வாசலிலே ரொம்ப அவசரமா போயிண்டிருந்தான். "என்னடா அவ்வளவு அவசரம்? புல்தடுக்கி கீழே விழுந்துவிடப்போறயே!" என்று கேட்டேன். மேற்படி ரேடியோ பிரசங்கத்தைக் கேட்கப் போகவேண்டும்; நாழியாகி விட்டது என்று அவசரப்பட்டான். இங்கேயே கேட்கலாமென்று நிறுத்திக் கொண்டேன். "கரும்பு தின்னக் கூலி வேண்டுமா?" உள்ளே வந்தான். "வெல்லப்பானையை ஈ மொய்ப்பது போல" ரேடியோவைச் சுற்றி நம்ம பட்டாளம் எல்லாம் மணி 7 அடிக்கப்போகிறதா என்று காத்துக்கொண்டிருந்தார்கள். "நுசிகண்டபூனை" என்று சொல்வதில்லையா? அதுமாதிரி ஏற்கெனவே கோபாலரத்னத்தின் பேச்சுகளின் சுவையை அறிந்தவர்கள் அல்லவா நம் கோஷ்டியினர்!

லா :—என்ன பழமொழிகளாகவே அடுக்கிக்கொண்டே போகிறீர்! அவர் எதைப்பற்றி பேசினார்? நாடகத்தைப்பற்றியா? தமிழ்ப் படங்களைப் பற்றியா? கோர்ட்டில் ஹாஸ்யத்தைப்பற்றியா?

நி :—தனக்கு பழமொழிகளைக் கண்டால் அவ்வளவு பிடிப்பதில்லை என்று ஆரம்பித்து பழமொழிகளின் பிடிக்குள் அகப்பட்டுக்கொண்டு முழி முழின்னு முழிச்சு நம்ம வயிறை குலுங்கப் பண்ணிவிட்டார். என்ன இயற்கை ததும்பி, ஹாஸ்யம் நிறைந்து இருந்தது தெரியுமா! இதுவரை அவர் அம்மாதிரி பேசியதே இல்லை. "ஏ. ஒன்."

லா :—வேறு எந்த பிரசங்கமும் அவ்வளவு சோபிக்கவில்லையா ?

நி :—எஸ். வி வி. அவர்களின் பேச்சை திருச்சியில் ஒருவர் படித்தார். பாவம் ததும்ப வெகு அழகாக படிக்கப்பட்டதால் "வாழ்க்கைப்பட்டியல்' என்ற மேற்படி பேச்சு பன்மடங்கு பிரகாசித்தது.

## சிறந்த நாடகம்

லா :—மற்றபடி, நவராத்திரியின்போது விசேஷ கச்சேரிகள் நிரம்ப ஒலி பரப்பப்பட்டனவோ!

நி :—கச்சேரிகள் மாத்திரமா ? நாடகம், காலக்ஷேபம், உள்பட பல நிகழ்ச்சிகள் மிகவும் ரவிக்கும் வண்ணம் அமைந்தன. "ஆசியாவின் ஜோதி" என்ற ஆங்கில நாடகம் மிகவும் நன்றாயிருந்தது. நல்ல நடிப்பு, உச்சரிப்பு, கோர்வையான கதை அமைப்பு. புத்தர் பிரானின் சரித்திரம்.

## பலத்த போட்டி

லா :—கச்சேரிகளில் போட்டி எப்படி ?

நி :—போட்டிக்கென்ன குறைவு ? பலமாகத்தான் இருந்தது. அஞ்சல் செய்யும் விஷயத்தில் ஒரு திட்டமான கொள்கை வேண்டுமென்று முன்ன மேயே சொல்லவில்லையா ? ஒரு நிலையத்தில் நல்ல கச்சேரி நடக்கும்போது மற்றொரு நிலையத்தில் போட்டிக் கச்சேரியோ நிகழ்ச்சியோ நடக்கிறது. உதாரணமாக, ஒரே சமயத்தில் மஹாராஜபுரம் விசுவநாதய்யர் பாட்டும், சரஸ்வதிபாயின் "நவராத்திரி மகாத்மியம்" காலக்ஷேபமும்; பெங்களூர் நாகரத்தினம்மாள் பாட்டும், பல்லடம் சஞ்சீவிராவ் புல்லாங்குழலும்; குழிக் கரை பிச்சையப்பாவின் நாகஸ்வரமும், நீலம்மா கடாம்பியின் வீணையும் ஒலி பரப்பினால் எதைக் கேட்பது, எதை விடுவது ?

லா :—பின் என்ன செய்தீர் ?

நி:—செய்வதென்ன விருக்கிறது. இதில் கொஞ்சம், அதில் கொஞ்சம் என்று 'சாம்பில்' பார்ப்பது. திருப்தி எற்படுமா? போட்டியில்லாது இரு நிலையங்களிலும் ஒலிபரப்பப்பட்ட நல்ல கச்சேரிகளை நிம்மதியாகக் கேட்டு நன்கு ரவித்தேன்.

## இதுவரை இம்மாதிரி அமையவில்லை

"இதுவரை இவ்வளவு சிறப்பாக அமையவில்லை" என்று சொல்லும் வண்ணம் சிலருடைய கச்சேரிகள் அமைந்தன. மன்னார்குடி ராஜகோ பாலபிள்ளை, ஜி. என். பாலசுப்ரஹ்மண்யன், சாத்தூர் கிருஷ்ணய்யங்கார், முதலியவர்களின் வாய்ப்பாட்டும், திருவீழிமிழலை சகோதரர்கள், சென்னை வ. பார்த்தசாரதி அவர்களின் நாகஸ்வரமும் கே. எஸ். நாராயணய்யங்காரின் கோட்டுவாத்தியமும், நீலம்மா கடாம்பியின் வீணையும் மேற்சொன்ன வண்ணம் சிறப்புற்று விளங்கின. இளம் பாடகர்களில் மேற்படி தலைப்பின் கீழ் ஸ்ரீ. டி. கே. ஜயராமன், குமாரி ஜே. தர்மாம்பா, குமாரி சூடாமணி, ஸ்ரீமதி அனுராதா, ஸ்ரீமதி சந்திரா முதலியவர்களின் கச்சேரிகளைக் குறிப்பிடலாம்.

## சில குறிப்புகள்

லா:—நவராத்திரி கொண்டாட்டத்தில் விசேஷமாய் அமைந்தவை எவை? தினசரி விருந்தால் அஜீரணமேற்பட்டுவிட்டதா?

நி:—பல பிரபல வித்வான்கள் வழக்கம்போல நன்ருகப் பாடினர்கள். சிலாது எதிர்பார்த்த அளவு அமையவில்லை. சில நிகழ்ச்சிகள் எதிர்பார்த்ததைவிட அழகாக அமைந்தன. உதாரணமாக, திருச்சியிலிருந்து ஒலிபரப்பப்பட்ட நந்தனர் சரித்திரம், ஆயுதபூஜை, விஜயதசமி கொண்டாட்டம் என்ற நிகழ்ச்சிகள் மிகவும் நன்ருயிருந்தன. நவராத்திரிக்குப்பிறகு ஒலிபரப்பிய நாடகங்களுள் "சாந்த் பீபி", "எதிரோலி" என்ற இரு நாடகங்களும் விசேஷமாக ரஸிக்கப்பட்டன. சென்னையில் ஒலி பரப்பப்பட்ட தெருக்கூத்து கூடியவரை நன்ருகவிருந்தது. சென்ற 14-ந் தேதி சென்னையில், "மனைவியின் தியாகம்" என்ருெரு நாடகம் ஒலி பரப்பப்பட்டது. இம்மாதிரி "சித்திரங்கள்" எவைகளைத் தழுவி எழுதப்பட்டன என்பதைத் தெரிவிப்பது மிக்க அவசியம். "கலியாணப்பத்திரம்", "கலியாணத்தை ரிஜிஸ்தர் செய்யும் கோயில் குருக்கள்" என்றெல்லாம் வரும் கதை, நம் சமூகத்தில் கிடையாது. மேல் நாட்டுக் கதைகளேயோ, சமூகத்தையோ தழுவி எழுதப்படும் கதைகள் நமது சமூகத்தினரைப்பற்றித் தப்பபிப்பிராயம் ஏற்படுத்தா வண்ணம் அமைக்கப்படவேண்டியது தழுவி எழுதுபவர்களின் கடமை. சென்ற 19-ந் தேதி திருச்சியில் ஸ்ரீ. சங்கு சுப்பிரமண்யமும், ஸ்ரீ சாம்பமூர்த்தியும் விவாதம் நடத்தியது வெகு ருசிகரமாகத்தானிருந்தது. ஆனல் அதில் முக்கியமான சில இடங்களில் சர்ச்சை நடக்கையில், ராகத்தையும், பாவத்தையும் பாடிக் காட்டியிருந்தால் இன்னும் அழகு பெற்றிருக்கும்.

## விரைவில் முன்னணிக்கு வரப் போட்டி

திருக்கண்ணபுரம் ஸ்ரீனிவாஸய்யங்கார், எஸ். கே. வெங்கடராமய்யர், எல். பரசுராமய்யர். பி. மலயப்பசாஸ்திரி, டி. கே. பிச்சு அய்யங்கார், எஸ். வி. பார்த்தசாரதி, எஸ். நாகநாதய்யர், வி. எஸ். கிருஷ்ணய்யர். ஸ்ரீமதி டி. ஞானம்பாள் முதலியவர்கள் வெகு சீக்கிரத்தில் முன்னணிக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

## சில அபிவிருத்திகள்

லா:—பொதுவாக நிகழ்ச்சி முறைகளில் ஏதேனும் விசேஷ அபிவிருத்தி உண்டா?

நி:—ஏனில்லாமல்? திருச்சியில் சங்கீத அப்பியாசத்தை குழந்தைகளுக்கு சௌகரியமான நேரத்திற்கு மாற்றிவிட்டார்கள். இரண்டாவதாக, ஹிந்தி பாடம் வெகு ஊக்கத்துடனும் சிரத்தையுடனும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. பத்து நிமிடம் போவதே தெரிவதில்லை. சென்னையில் பஜனை கோஷ்டி ஒன்று ஏற்படுத்தி யிருப்பதை வரவேற்கிறேன்.

## சில யோசனைகள்—விரும்பத்தக்க மாறுதல்கள்

1. திருச்சியிலும் இம்மாதிரியே செய்து பிரதி வெள்ளி, சனி, ஏகாதசி முதலிய தினங்களில் காலையிலும் மாலையிலும் பஜனை ஒலி பரப்பினல் மிகவும் நன்ருயிருக்கும். எப்படி தினமும் பல சங்கீதக் கச்சேரிகள் அவசியம் என்று எண்ணி நிகழ்ச்சிகளை அமைக்கிருர்களோ அதேபோல பஜனை சங்கீதம் வாரத்திற்கு இருமுறையாவது அவசியம் என்று தீர்மானித்து, நிகழ்ச்சிகளை அமைக்கும்போது நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

2. திருச்சியில் தினமும் ஒரு நாடகமாவது ஒலி பரப்பவேண்டும். இரவு 7-15 முதல் 7-35 வரை அல்லது 9-0 முதல் 9-20 வைத்துக்கொண்டால் நன்றாயிருக்கும். தினசரி 8 மணி ஒலி பரப்பு நேரத்தில் சிறு நாடகத்திற்காக 20 நிமிஷங்கள் ஒதுக்கிவைப்பது கஷ்டமல்ல.

3. தவிர, தினசரி குறைந்தது ஒரு மணி நேரமாவது இசைத்தட்டு சங்கீதம் ஒலி பரப்பப்படுகிறது. இது காலையிலும், பிற்பகலிலும் அமைக்கப்படுகிறது. மாலை 5 முதல் 6வரை நல்ல சங்கீதம் அமைக்கப்பட்டால் உத்தியோக நிமித்தம் வெளியே சென்று 6 மணிக்குமேல் திரும்பும் ரேடியோ அபிமானிகளெல்லாரும் கேட்கமுடியாது போய்விடுகிறது. உதாரணமாக சென்ற 2-ந் தேதி திருவீழிமிழலை சகோதரர்களின் நாகஸ்வரமும், 23-ந் தேதி திருவெண்காடு சுப்பிரமணியபிள்ளையின் நாகஸ்வரமும் குறிப்பிடலாம். இசைத்தட்டு சங்கீதத்தை மாலை 5 முதல் 6 வரை வைத்துக்கொண்டு, பிரபல நாகஸ்வர வித்வான்களின் கச்சேரிகளை காலையிலும், இரவிலுமாக வைத்துக்கொண்டால் திருப்திகரமாக இருக்கும்.

4. புல்லாங்குழலுக்குப் பக்கவாத்தியமாக பிடில் வாசிப்பதைப்போல, வீணைக்குப் பக்கவாத்தியமாக பிடிலும், பிடிலுக்குப் பக்க வாத்தியமாக ஃகாட்டுவாத்தியமும் வாசித்தால் இனிமையாயிருப்பதுடன் மிகவும் ரஸிக்கத்தக்கதாயிருக்கும்.

லா:—அபிவிருத்திக்குத்தானு இடமில்லை? மனமும் ஊக்கமுந்தான் வேண்டும்.




## ஸ்ரீ துளஸீ ராமாயணம்

[பால காண்டம் (சுருக்கம்) ஸ்ரீ. எஸ். அம்புஜம்மாள் மொழி பெயர்த்தது. கிடைக்குமிடம்: ஹிந்திபிரசாரசபை, தியாகராயநகர் சென்னை.]

இந்தியர்களில், "உனக்கு ராமாயணம் தெரியுமா" என்று யாரைக் கேட்டாலும் தயங்காமல் 'ஓ! பேஷாய்த் தெரியும்' என்று கூசாமல் சொல்லி விடுவார்கள். ஏனெனில் இந்துக்களின் ஜீவநாடி போன்றதாகும் ஸ்ரீராமனின் சரிதை. அதை முற்றிலும் கட்டங்கட்டமாகப் படித்து விஷயமறியாவிடினும் பூடகமாக ராமாயணத்தை எல்லோரும் அறிவார்கள். அம்மாதிரி அறிவதற்கு ஹரிகதைகள், ராமாயணப் பாடல்கள், திண்ணைப் புராணங்கள் நாடகங்கள், புத்தகங்கள் முதலிய பலவிதமான சாதனங்கள் அமைந்திருந்ததால் வெகு எளிதில் ராம சரிதையை சிறிதாவது தெரிந்துகொள்ள முடிந்தது. கூனி பொல்லாதவள், கைகேசி ராக்ஷஸி, பரதன் மகா உத்தமன், லக்ஷ்மணன் ஸ்ரீராமனின் நிழல், ஸீதாதேவி கணவனின் ஜீவநாடி, சுமித்திரைதான் கௌஸல்யையைவிட பாக்கியசாலி, ஹனுமான் பரமபக்தன், ராவணன் கொடிய பாதகன்...என்றெல்லாம் பேசாதவர்களில்லை; ஆனால் முழு புத்தகமும் ஊன்றிப்படித்தவர்கள் வெகு சிலரேதானிருப்பார்கள்.

ஸ்ரீ ராமபிரானின் சரிதையை வால்மீகி, கம்பன் இவ்விருவரும் அநுபவித்து ஸாரத்தை உலகிற்கு அளித்த மகிமையே ஓர் தனிச் சிறப்புற்றதாகும். பின்னும் எத்தனேயோ பக்தர்கள் ராமசரிதையை எழுதியிருக்கிறார்கள். தென்னாட்டில் கம்பராமாயணம் சிறப்புற்று பிரகாசிப்பதேபோல் வடநாட்டில் பக்த துளஸிதாஸரின் ராமாயணம் மிக்க பிரக்யாதிபெற்று விளங்குகிறதை வடநாட்டினர் சொல்லும்போதும், 'ஹிந்தி பாடபுத்தகத்திலுள்ளதைப் படிக்கும்போதும் நாமும் ஹிந்தியை நன்குக் கற்றுக்கொண்டு துளஸிராமாயணத்தைப் படித்து இன்புறுங் காலம் வருமா!' என்று ஏங்கினேன். ஆனல் ஸ்ரீராமன் அதற்கு அனுக்கிரகம் செய்யாவிடினும் எனது ஆப்த சிநேகிதையும், அறிவிற்சிறந்த உத்தமசகோதரியுமாகிய ஸ்ரீமதி அம்புஜம்மாளின் மூலமாக அக்குறையை ஒருவாறு தீர்த்துவைக்க அருள்புரிந்தது எனது பாக்கியமாகும்.

ஸ்ரீமதி அம்புஜம்மாளை அறியாதவர்கள் தமிழ்நாட்டில் இருக்கமுடியாது. அந்தம்மாளின் பொறுமையும், பக்தியும், உத்தமமான அன்பும், பார்க்கப் பார்க்கப் பரவசமுண்டாக்கும். அத்தகையவர்கள், தாம் மட்டும் துளஸிராமாயணத்தைப் படித்து இன்புற்று மகிழ்வதோடு திருப்தியடையாது, தம் தாய்ப்பாஷையில் மொழிபெயர்த்து எல்லோரும் படித்து ஸாரமறிந்து இன்புறும்படியாகச் செய்திருப்பது மிகவும் போற்றத்தக்கதாகும்.

அம்புஜம்மாளின் மொழிபெயர்ப்பின் நடை உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் விதம் அத்தனை அழகாயும் ஸரளமாயும், கோர்வையாயும், பிரமிக்கத்தக்கவிதமாய் அமைந்திருக்கிறது. அவரது நடையில் ஒரு தனிச் சுவை நிறைந்திருக்கிறதென்றால் மிகையாகாது. புத்தகமும் பார்வைக்கு வசீகரமாயும், படிக்கவேண்டுமென்கிற ஆவலைத் தூண்டுவதாயுமிருக்கிறது.

ஒவ்வொரு வீட்டிலும் இந்த மொழிபெயர்ப்பு ராமாயணம் இருக்கவேண்டியது அத்யாவச்யமாகும். ஒவ்வொருவரும் கட்டாயம் வாங்கிப் படித்து இகபர ஸார்த்தகத்தையடையவேண்டும். இதுபோல் மற்ற காண்டங்களையும் ஸ்ரீமதி அம்புஜம்மாளை விரைவில் வெளியிடவேண்டும்படிக்குத் தூண்டி ஊக்கத்தையும் உத்ஸாகத்தையும் அவருக்கு அளிக்க நாம் எல்லோரும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

# வாழ்க்கையே வாழ்க்கை

## 21-வாழ்க்கைச் சித்திரங்கள்

[ஸ்ரீ எஸ். வி. வி. எழுதியது. அல்லயன்ஸ் கம்பெனி மயிலாப்பூர், விலை ரூ. 1. 30-11-40-வரை அணு 8.]

ஸ்ரீமான் எஸ். வி. வி. அவர்களின் கதைகளைப் புதிதாக நேயர்களுக்கு நாம் அறிமுகப்படுத்தவேண்டிய அவசியமில்லை. இலக்கிய உலகில் ஆங்கில பாஷையிலும் தமிழ்ப் பாஷையிலும் அவர் வெகு காலமாய் சாணை தீட்டிய வைரம்போல் பிரகாசிக்கின்றார். இந்நிலைமையில் அவர் கதைகளைப் புகழ்வது "கொல்லத் தெருவில் ஊசி விற்பதுபோலாகும்" எஸ். வி. வி. என்கிற மூன்று எழுத்துக்களே 'வாழ்க்கையே வாழ்க்கை' என்கிற புத்தகத்திற்கு மெருகு கொடுக்கிறதல்லவா! ஆங்கிலத்திலேயே பார்ப்போம். எஸ். ரொம்ப சரி. வி. வெரிகுட்...வி. வெரைட்டி. ரொம்ப சரியான பொருக்குக் கதைகளை விதவிதமாய்க்கொண்டு விளங்குகிறது. இதிலுள்ளதை ஒவ்வொருவரும் படித்து இன்புற்றால், தானே அதன் பெருமை தெரியும். வை.மு.கோ.




1. 'சூடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்' என்றபடி ஆராய்ந்து ஆராய்ந்து பார்த்து எங்கும் இடம் கிடைக்காவிட்டால் முதலில் பார்த்து வேண்டாமென்று விலக்கிய பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ விவாகத்தை முடித்துவிடுவது உலக வழக்கம். அதுபோல் சில தந்திரசாலிகள் உத்தியோக விஷயத்திலும் நடந்துகொள்வது வழக்கமாகிவிட்டது.

2. பணம் குறைந்தால் வறுமையுடன் நிற்கும். குணம் குறைந்தால் சிறுமைதான் சாரும். வறுமைக்கு விமோசனம் காணலாம். சிறுமைக்கு அழிவுதான். பெருங்குணமே பெருந்தனம்.

3. வட இந்தியப் பெண்களில் சிலருடைய தைரியத்தையும் அவர்கள் நடக்கும் நடையையும் பார்த்தால் "அப்பப்பா ! நாமும் பெண்பிள்ளையா ! இவர்களுடன் சரியாக நடக்கவும் தெரியவில்லையே !" என்றுதான் வியப்பு உண்டாகிறது.

4. சிலருக்கு ஆத்திரம் உண்டாகும் வேகத்தில் எழுதும் கடிதம் கொடிய பாணம்போன்றும், கடுந்தீயைப்போன்றும் அமைந்துவிடுகின்றது. இம்மாதிரி கண்மூடித்தனமாக எழுதிவிடுவதில் என்னலாபம் ? அவதூறு வழக்குத் தொடுத்துவிட்ட பிறகல்லவோ அதன் அருமை தெரியும் ?

5. மனிதன் வியாதியை வளரவிடுவதும் ஆத்திரத்தை வளரவிடுவதும் ஒன்றாகும். வியாதி ஆளைக்கொல்கிறது. ஆத்திரம் மனிதன் உயிரைக்கொல்லாமல் மற்ற நல்லவைகள் எல்லாவற்றையும் கொன்றுவிடுகிறது. இரண்டையும் உடனே களைந்து வாழ்க்கை நடத்துகிறவர்கள்தான் சுகமாய் வாழமுடியும்.

6. ஒரு மனிதனின் அல்ப குணத்தை அவன் எழுதும் கடிதத்திலே நன்கறியலாம். கண்ணியம் சம்பாதிப்பது அரிது. அல்பன், ஆத்திரக்குடுக்கை, முன்கோபி, துர்க்குணி என்றெல்லாம் பெயரெடுப்பது வெகு சுலபமல்லவா !

7. பிறர் வீட்டுக் கல்யாணத்தைப்பற்றி நாம் பலவிதமான குறைகளைக் கூறி "எங்களைக் கவனிக்கவில்லை; நன்றாக விசாரித்து உபசரிக்கவில்லை. அப்படி, இப்படி" என்று வாய் கூசாது பேசுவது வெகு சுலபந்தான். ஆனால் அதே கல்யாணத்தை நாம் நடத்தும்போதுதான் அதன் சிரமம் தெரியும். ஆயிரக்கணக்கான மனிதர்களை வரவேற்று உபசரித்து விருந்து வைத்து ஜெயிக்கும்போதுதான் பிறரைக் குறை கூறியதின் குற்றத்தை நாம் அறியமுடிகிறது. "அப்பா ! இவ்வளவு கஷ்டமா ?" என்றும் மூக்கின் மீது விரலை வைத்து நாமே திகைக்கிறோம். நாம் எப்படி உபசரித்தோம்? குற்றம் குறைவராது செய்தோமா என்பதையும் நினைக்கிறோம். இம்முறையில் எத்தனையோ குறைகள் நமக்குக் காணும். பிறகு நமது பதட்டம் சற்று அடங்கும், இது ஒவ்வொரு குடும்பத்திலும் வாழையடிவாழையாய் வரும் அநுபவக்களஞ்சியமாகும். 'இதேபோலத்தான் இதர விஷயங்களும்' என்று சில நண்பர்கள் உணரவேண்டும்.



# வனிதா மண்டலம்

மங்களம்:—என்ன கல்யாணி! நவராத்திரி அலுப்பெல்லாம் முடிந்ததா!

கல் :—அடேயப்பா ! அதை ஏன் கேட்கிறாய் ? நவராத்திரியின் வைபவத்தில் எத்தனை சந்தோஷமும், கொண்டாட்டமும் இருந்ததோ, அதே போல் களைப்பும் இருக்கவேண்டாமா ! எனக்கு நினைக்க நினைக்க ஆச்சரியமாகவே இருக்கு மங்களம்! நாமெல்லாம் சின்னவர்களாயிருந்தபோது இந்த நவராத்திரி இவ்வளவு தடபுடலாய் நடந்ததா.! நீயே சொல்லு. குழந்தைகளுக்குப் பெரிய உத்ஸாகம். அதற்காக பொம்மையை வைப்பதும் ஊர் அழைக்க அனுப்புவதும், வந்தவர்களுக்கு வெத்திலைபாக்குக் கொடுப்பதும் ஏதோ அநேகமாய் குழந்தைகளின் காரியமாய் நடந்துவந்தது. சில வீடுகளில்தான் பக்தி சிரத்தையாய் பூஜை செய்வார்கள். இப்போது பாரு.

மங் :—சுமதியும் பானுமதியும் வருகிறார்களே !...வாருங்கள் ; உட்காருங்கள்...உங்க வீட்டுக் கொலுவு ரொம்ப நன்றாக இருந்தது. அதிலுள்ள கைவேலைகளெல்லாம் யார் செய்தார்கள் ?

சுமதி :—நாங்கள்தான் செய்தோம். இந்த நவராத்திரி மகிமையின் தத்வத்திலேயே கைத்தொழிலுக்கு ஒரு முக்கியத்வம் உண்டல்லவா ! அதனால்தானே ஒன்பது தினத்திற்குப் பிறகு விஜயதசமியன்று ஆயுதபூஜை கொண்டாடுகிறார்கள் பாரு. அதன் தாத்பர்யம் என்ன ? கைத்தொழில் செழித்து விருத்தியாகவேண்டும். அநேகவிதமான பொருள்களைச் செய்து எல்லோரும் பார்க்கவைத்துத் தொழில்விருத்திக்குப் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்ற கருத்துதான், என்று எங்க தாத்தா அடிக்கடி சொல்லுவார். அதனால்தான் நாங்களே கையினால் பொம்மைகள், வீடுகள், மரசாமான்கள், சகலமும் செய்துவைத்தோம்.

மங் :—அனேக வீடுகளில் வெறும் மண் பொம்மைதான். கைவேலைகளுடன் அழகாய்ச் சிங்காரித்திருந்த வீடுகள் சொல்பந்தான். இன்னும் பார்த்தால் நாலு கூடை மண்ணைக்கொட்டி விகாரமாய் வைத்து அது ஒரு மலையாம்; ஒரு வாணலியில் தண்ணீரை வைத்து அதொரு குளமாம். மணலைக்கொட்டி நாலு பொம்மைகளை வைத்துவிட்டால் கொலுவு நிறைந்துவிட்டதாம். இம்மாதிரி செய்வதிலும் பொருத்தமாய் அழகாய் இயற்கையாய் பொம்மைகளைத் தகுந்தாற்போல் அமைத்து தக்க விளக்குகள் போட்டு வைத்திருந்த வீடுகளில் கண்கொள்ளாக்காட்சியாய்த்தான் இருந்தது.

கல் :—எங்க வீட்டுக் கொலுவைப் பரிகாஸம் செய்கிறாயா ! நான் கைவேலையும் செய்யவில்லை, கால்வேலையும் செய்யவில்லையம்மா ! இந்த ஒன்பது நாட்களும் முறையே லக்ஷ்மி, சக்தி, ஸரஸ்வதி ஆகிய மூன்று தேவதைகளையும் பூஜை செய்து தினம் சுமங்கலிகளுக்கு நிறைய மஞ்சள் குங்குமம் கொடுத்து, குழந்தைகளுக்குச் சந்தோஷமாக இந்த மகோத்ஸவத்தைச் செய்வதுதான் முக்கியம் என்பது எனது கருத்து. சௌகரியமும் சாமான்களும் இருந்தால் பிரம்மாண்ட வைபவமாய் வைக்கலாம். முன்பெல்லாம் இம்மாதிரி அலங்காரங்கள் ஏது? படிக்கட்டுகளைக் கட்டி முதல் இரண்டு படிகளில் வீட்டிலுள்ள வெள்ளிப்பாத்திரங்கள் பூராவும் தூக்கி வைத்திருப்பார்கள்; மத்தியில் விக்ரகங்கள் இருக்கும்: கடைசியில் வெங்கலச் சொப்புகளும், மரம், கல்சட்டி முதலிய சொப்புகளும் நிரம்பிவிடும். போதாதற்குப்

பலகாரையை நிரப்பியிருப்பார்கள். இப்போது அவைகள் அபூர்வமாக வல்லவோ ஆகிவிட்டன. எத்தனைவிதமான செட்டு பொம்மைகள் வந்து விட்டன பாரு. தேவி பூஜை என்று பெயர்வைத்த கொலுவில் புலி வேஷம், குத்துச்சண்டை, ஹரிச்சந்திர மயானகாண்டம், சாவித்திரி புலம்பும் கட்டம், நளதமயந்தி, காடி ஆட்டம் இதுபோல் அனேக பொம்மைகளை வைத்திருக்கிறார்கள். அதிலும், கல்யாண செட்டு, மேளம், கச்சேரி, சாப்பாடு, நாட்டியம், பட்டாபிஷேகம் முதலியவைகளாவது அர்த்தமிருக்கிறது. அக்காலத்தில் குழந்தைகள் விளையாட்டாயிருந்தது. இக்காலத்திலோ ஒவ்வொரு வீட்டிலும் கல்யாணத்தைவிட அதிக மும்முரமாய் நடக்கிறது.

பானு:—ஆமாம் கல்யாணி! எத்தனை அழைப்பு இதழ்கள்? போய் வருவதற்கு முடியவே இல்லை. அதிலும் சிலர் நாட்கள் குறிப்பிட்டு விடுகிறார்களா, அந்தக் குறிப்பிட்ட நாட்களில் தமக்குப் போக முடியாமல் அந்த வீட்டிற்கு வெறும் நாளில் போனால் கோவிந்தா! கோவிந்தா! என்றிருக்கிறது. சில வீட்டில் யாருமே நமோதே இல்லை. கதவுகூடப் பூட்டிக் கிடந்தது. தோட்டக்காரனிடமும் வேலைக்காரியிடமும் 'பலானவர்கள்வந்து போனதாகச் சொல்லுங்கள்' என்று சொல்லிவிட்டு வந்தோம். சில வீட்டில் நமோதுக்கு யாரோ இருந்தார்கள். 'இன்று தேதி போடவில்லையே!' என்று ஒரு வீட்டில் கேட்டார்கள். எனக்கு ஒரு பக்கம் சிரிப்பாயும் ஒரு பக்கம் கோபமாயுமிருந்தது.

இந்துமதி:—தேதி போடாத தினத்தில்போவது பிசகுதானே! போகலாமா! அவர்கள் வெளியே போகவேண்டாமா!

பானு:—வாஸ்தவந்தான் இந்துமதி! ஒவ்வொரு மூலையில் ஒவ்வொரு வீடு இருந்தால் அதற்கென்று தனியாகப் போக சௌகரியப்படாத சமயம் என்றாவது போகத்தான் வேண்டியிருக்கும்; போகாவிட்டால் வரவில்லை என்று குறை கூறுவார்கள். அதைவிட என்றாவது போவது நல்லதில்லையா! கொலுவு என்னவோ எடுக்கமாட்டார்கள்; ஆகையால் போனேன். ஒன்றா யிரண்டா போகவேண்டிய இடம்? அதற்குத் தக்கபடி முடிந்த அன்று தானே போகவேண்டும். வாம்மா! கோதாவரீ! உட்காரு.

கோதா:—இதைவிட வேடிக்கை நான் போன வீட்டில் நடந்ததே. தேங்காய் வெத்திலைபாக்கு ஒன்றும் அகப்படவில்லை. எங்கேயோ கிளறித் தேடிப் பிடித்துக்கொண்டு வந்துகொடுத்தார்கள். 'நாளைக்கு மறுநாள்தான் தேதி போட்டிருக்கிறது. நாளைக்குதான் பை ரெடியாகும்' என்று சமாதானம் வேறு சொல்லியபோது எனக்குக் களுக்கென்று சிரிப்பு வந்துவிட்டது. "நாளை மறுநாள் எனக்கு ஒழியாது; அதனால் இன்று வந்தேன்" என்று நானும் சமாதானம் கூறிவந்தேன்.

மங்:—எது எப்படியாவது இருக்கட்டும்மா! இந்த நவராத்திரிப் பண்டிகையைப்போல் ஆனந்தகரமான பண்டிகை வேறு எதுவுமே இல்லை. இந்த சாக்கில் பத்து நாள் ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் குதூகலமாயிருப்பது ஒன்று. வருஷத்திற்கு ஒரு முறை சினேகிதர்கள் எல்லோரும் சந்திப்பதற்கு முக்யமான சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. முன் காலத்தில் குழந்தைகளை அனுப்பிவிட்டாலும் சரியாகிவிடும். இப்போது பெரியவர்கள் வராது போனால் விடுவதில்லை. வருஷத்திற்கு ஒருமுறை இந்த சந்தர்ப்பத்தில் சந்திக்காவிட்டால் யார் வீட்டில் என்ன கல்யாணம் வருகிறது என்று காத்திருக்கவேண்டுமல்லவா?

மூன்று தேவதைகளையும் பூஜை செய்வது, சிநேகிதர்களைச் சந்திப்பது, வெத்திலைபாக்குக் கொடுப்பது, குழந்தைகளை விதவிதமாய்ச் சிங்காரித்துக் களிக்கச்செய்து பார்ப்பது எத்தனை அனுகூலங்கள் இருக்கிறது பாரு.

கோதா:—உண்மையான விஷயம். இந்த அபிப்பிராயத்தைத்தான் நானும் கொள்கிறேன். இன்னொன்று பாரு. குழந்தைகளுக்கு இந்த நவ ராத்திரியில் உண்டாகும் உத்ஸாகம் வேறு எதிலும் கிடையாது. அவர்களின் ஆசையினாலேயே இதன் மூலம் அறிவும் வளருகிறது. "அவா வீட்டில் அப்படி அழகுபடுத்துகிறார்களே, அப்படியே நாமும் செய்யவேண்டும். குழந்தைகளுக்கு நிறைய கொடுக்கவேண்டும்" என்கிற எண்ணம் உண்டாகி நன்மையையே கொடுக்கிறதல்லவா!

சுமதி:—இத்தனை சந்தோஷமும் இருக்கிறது உண்மைதான். ஆனால் அழைக்காத சில கூட்டங்கள் தினம் தினம் தவறாது வந்து அழைத்தவர்களுக்கு இடம் இல்லாமல் இடத்தை அடைத்துக்கொண்டுவிடுகிறார்கள்.

கல்:—ஐயோ ராமா! இடத்தை அடைத்துக்கொள்வதுமட்டுமா! ஒரு கூட்டம் வந்து வெத்திலைபாக்கு வாங்கிக்கொண்டு போய், தமது சகாக்கள் சிலருக்கு "அதோ அந்த வீட்டில் தேங்காய் கொடுக்கிறார்கள் போங்கள்" என்று பிரசாரம் செய்து அனுப்பும் வேடிக்கையை என்னென்பது? அப்படி அழைக்காது வரும் கூட்டத்திற்கு தேங்காய் கொடுக்காது பழம் கொடுத்தாலோ "அந்தம்மாளுக்குத் தேங்காய் குடுத்தீர்களே! எனக்கெங்கே? அந்தம்மாள் வாங்கிக்கொள்ளச் சொன்னாளே" என்று மொண்டி பிடிக்கிறார்கள். இதென்ன விநோதம் பாரு.

மங்:—இதற்காகவே சிலர் கிளம்பி வீடுவீடாகச் சென்று சேகரித்த பாக்கு மஞ்சள் வெத்திலை பழம் முதலியவற்றை விற்றுப் பணமாக்கி விடுகிறார்களே! இதைவிடவா வேடிக்கை வேறு இருக்கிறது? தூக்கமுடியாதுமூட்டை சட்டிக்கொண்டு போகிறார்கள்.

பானு:—ஏதோ சுமங்கலிகள் வந்தால் வெத்திலைபாக்குக் கொடுக்க வேண்டியதுதான். இதற்கென்ன பஞ்சமா என்று கேட்கலாம். அதற்கும் ஒரு எல்லை இல்லையா! அழைத்தவர்களுக்குக்கூட இடமும், வெத்திலை பாக்கும் இல்லாது போய்விட்டால் என்ன செய்வது? கொடுத்ததை வாங்கிக்கொண்டு போகவேண்டும். இந்தமாதிரி சிறிய சமாச்சாரங்கூட நம்மவர்களில் அனேகருக்குத் தெரிவதில்லை.

இந்து:—இதையெல்லாம்விட வேடிக்கை கோயிலில் கடைசீ நாள் வெத்திலைபாக்குக் கொடுக்கிறார்களே, அதற்கு பெண்டுகள், தாயார் பிரஸாதம் வாங்கிக்கொள்ளும் பக்தியில் பொறுமை, நாகரீகம் எல்லாவற்றையும் மறந்து சுண்டலும், தோசையும், வடையும் விநியோகம் வாங்கச் சண்டையிடுவதுபோலவே இதற்கும் சண்டையும் தள்ளலும் கூச்சலும் அடேயப்பா சகிக்கமுடியாது. நசுங்கிவிட்டோம். மரியாதையாயும் பொறுமையாயும் இருந்து வாங்கிக்கொள்ளக்கூடாது? அதுகூடத் தெரிவதில்லை.

கல்:—நவராத்திரி ஒரு வழியாய் முடிந்தது. தீபாவளிக்கு ஜவுளி வாங்கியாயிற்று! என்னென்ன வாங்கினீர்கள்?

மங்:—இந்த தேசத்திற்காக ஒரு சிறிய உபகாரம் செய்யும் முறையில் எல்லாம் சுத்தக் கதர்தான் வாங்கினேன். சுமதி! நீ என்ன வாங்கினாய்?

சும:—இதுகூடக் கேள்வியா! கதரைத்தவிர வேறு வாங்கும் வழக்கமே எங்கள் வீட்டிலில்லையே! பானுமதிதான் புலிவேஷம் போட்டதுபோல் ஒரு சரிகைப்புடவை வாங்கினாள்.

கல் :—காலத்திற்கேற்ற கோலம், என்ன கட்டமோ, என்ன கோடோ! எனக்குப் பிடிக்கவே இல்லை. முன்காலத்து கொட்டாங்கிச்சி பப்ளிக்கும், ஹம்ஸபப்ளிக்கும் இப்போது யோகம் பிறந்துவிட்டது. என் பானு! இந்த தீபாவளிக்காவது கதர் வாங்கக்கூடாதா! அது செய்வதற்குக்கூட நாம் குடுத்துவைக்கவில்லையா!

பானு :—என்னால் கதரைத் தூக்கிக் கட்டமுடியவில்லை. என்னைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் கதர்தான் வாங்கினேன். நானும் கதர் விலக்குதான் வாங்கினேன். கோதாவரி வீட்டில் சகலமும் கதர்தான். நர்மதா வீட்டிலும் எல்லாம் கதர்தான்.

மங் :—இந்த ஒரு விஷயத்திலாவது எல்லோரும் ஆதரவு காட்டினால் போதும். தீபாவளிக்கு வாங்கியாகிவிட்டதே இனிமேல் எதற்கு! என்று அச்ரத்தையாக இருந்துவிடாதீர்கள். நாம் நமது சொந்த காரியங்களிலும் குழந்தைகளிடத்திலும் எத்தனை கவனமாயும் அக்கரையாயுமிருக்கிறோமோ, அதைப்போல் தேச விஷயத்தையும் மறக்காது கவனத்துடன் ஒவ்வொரு துணியும் மேஜை விரிப்பு, கதவுத் திரைமுதல் சகலமும் கதரையே வாங்கி பேராதரவைக் காட்டுங்கள்...இன்று ஒரு சினேகிதை வருவதாகச் சொல்லியிருக்கிறாள். அவளைக் கதர்கடைக்கு அழைத்துச் செல்லவேண்டும். நான் வரட்டுமா!

வை. மு. கோ.




திங்காணம்:—தெனம் ஒங்காத்துக்கு யாரோ வராளே அவ யாரு?

சானு:—அவளா! மீஸிக்கி டிவிஸன் (ம்யூஸிக் ட்யூஷன்) வாத்தியாரம்மா! எம்பேத்திக்கு சொல்லிக் குடுக்கவரா! எத்தெனெ நல்லவ தெரியுமா! அவளுக்கு வீணே, பிடில், ஆர்மோனியம், ப்ளூட்டு, ஜலதரங்கம், ம்பிடுதாங்கம் (ம்ருதங்கம்) கெஞ்சூரா, (கஞ்சீரா) மோரசிங்கு (மோர்ஸிங் இன்னும் என்னென்னமோ வாசிக்கத்தெரியுமாம். துளி கெர்வம், பெருமை ஏதாவது உண்டா? சிம்ப்ளா (ஸிம்பில்) இருக்கா!

துட்டி:—நெறைகொடம் நீர் தளும்புமா! கொறைகொடந்தான் கூத்தாடும். எங்கபக்காத்தாத்துலே ஒரு ஸ்கோல்பள்ளிக்கூட வாத்தியார் இருக்கா! அவ இன்னு கவுந்து பூடரா தெரியுமா! ரெண்டு இங்கிலீஷ் வார்த்தை தஸ் புஸ்ஸுனு சொல்விண்டு மகா மிள்ட்டேரி (மிலிடரி) யா இருக்கா! ப்பற வேட்டுஸன் கூட சொல்றாளாம். அவ நடக்கறதே ஒரு டமாஸா இருக்கு.

எச்சி:—வரவர நாகரீகம் தலெகீழாப் பூடுத்து. எங்காத்துலே என் பேரனுமடையாளும் பேரனும் கப்பன் சாஸ்திரிலே (கப் அன்டு ஸாஸர்)

தான் காப்பி சூப்பி குடிக்கிரு! எச்சிலா தீட்டா ஒரு எழவுமில்லே. அதிகம் சொல்லப்போனு கண்டரீயாம். கட்டுப்பொட்டியாம்னு எம்பேரன் திட்ரான்.

தீங்:—ஏண்டியம்மா! வாத்தியார் நின்னுண்டு...பசங்க ஓடிண்டே... ஒரு பழமொழியுண்டே மறந்துபூட்டாயா! வீட்டுலே பெரியவா சந்தியா சாவித்திரியா! ஜபமா! தபமா! ஒன்னும் பண்ணுமே ஸர்டே (ஷர்ட்டு) ஒடம்பெ வுட்டுக் கழட்டாதே இருந்தா பிள்ளைகள் ஸர்டு ஸூட்டு ஆட்டு எல்லாத்தொடேயும் அலையலரான்க. இதுகளே யாரடீம்மா கேக்காது?

சானு:—நேத்து எங்க பக்கத்தாத்துலே ஒரு கெல்லாணம் நடந்தது. வாத்தியார் மந்திரம் சொல்லி ஓமம் பண்றது கல்யாணபுள்ளேக்கிப் பிடிக்கலையாம். 'இதென்ன நூஸனன்ஸ் (நியூஸன்ஸ்) சட்புட்டுணு பினிஸ்(பினிஷ்) பண்ணுமே இழுக்கருன் டாம் நான்ஸன்ஸ்' என்று திட்டினுன். அத்தன பேரும் மலைச்சுப்பூட்டா! கல்யாணப் பொண்ணே, அலங்காரம் பண்ண வந்தா, வாட்டீஸ் பேசாதேபோங்கோன்னு அதட்டினு. அதென்ன அதிவியமோம்மா! மணெலே ஒக்காண்டிருக்கச்சேயே தாகமாம். டயடா பூடுத்தாம். பேன்ஸல் கர்ஸ்(ஸ்பேன்ஸர் க்ரஷ்)ஒன்னு ஐஸ்போட்டு ரெண்டு பேரும் குடிச்சா. எலக்கட்டரி பேனே எதிரே வெச்சுட்டா! அது சுத்தா சுத்துலே குத்துவிளக்கெல்லாம் அணஞ்சிபோச்சு.

தீங்:—ஐயையோ! மணையிலே இருக்கச்சேயா அபசகுனமாட்டமா அணைஞ்சுபோச்சு. இவா பாஷணுமாச்சு பத்தி எரிஞ்சதுமாச்சு.

சானு:—ஆமாம்! நம்பளேபோலே கர்ணடகங்களுக்கு அபசகுனம். அவாளுக்கென்னவாம் வந்தது. கொத்தோடே எலட்ரி வளக்கு போட்டுட்டா. இத்தெனைக்கும் கெல்லாணப்பிள்ளே காப்புரேஸன் (கார்பொரேஷன்)லேதான் வேலையாம்.

எச்சி:—போருண்டியம்மா! போரும். எக்கின்பாதம் புக் ஸாப் (ஹிக்கின்பாதம்ஸ் புக்ஷாப்)பிலே வேலேயாயிருக்கற ஒரு பெய்யனுக்கு வந்த பவிஷை பாரேன். 4 ஆயிரம் ரூபா வரதக்ஷணையும் சீரும் ஒணமாம். கேட்டயா ராங்கியே! இவனுக்குப் பெண்ணையும் பணத்தையும் பேஸல்லா (ஸ்பெஷல்) யாரோ தூக்கிக் குடுக்கமாட்டாளா!

சானு:—ஏண்டியம்மா குடுக்கமாட்டா! பொங்கள்ளாம் அம்மாமிமாதிரி ஆயிட்டா, எவனுவது கெடச்சாபோரும்னு இனிடேஸன் (இன்விடேஷன்) அனுப்பி அழைச்சு குடுப்பா; அம்மாமிகளையும் குட்டிப் பாட்டிகளையும் யாராவது கட்டிண்டு போனு போராதா!

சூட்டி:—ஐயோ ராமா! கட்டிண்டு போகாபோனு என்ன கவலைப் பட்டுச் சாகிறுளா பாவம்! பள்ளிக்கூடந்தான் இருக்கு தைரியமா படிக்கப் போறதுமட்டுமில்லாதே வாத்தியாரோடே தடிதடியா பயமில்லாமே எஸ்கஸன் (எக்ஸ்கர்ஷன்) போய்வாராளே. என்ன துணிச்சல் பாரேன். ஆம். ஊம்.ணு பிக்நாக்து பாட்டி (பிக்னிக் பார்ட்டி)ன்னு ஓட்ராதுக. யார் கேக்ரது?

திங்கா:—கேக்ரவாயிருந்தா ஒலகம் கெட்டுப் போகுமா!

வை. மு. கோ.



# வாணியின் பிரசாதம்


ஸாஹித்தியகர்த்தா : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

ஸ்வரப்படுத்தியவர் : ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி.


**28-வது மேளகர்த்தா** — **ஹரிகாம்போஜி.**

ஜன்ய ராகம்: — தரார்தரி:

ஆரோஹணம்—ஷாடவம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஸ | ரி | க | ப | த | நி | ஸ் |
| · | சதுர் | அம் தர | | சதுர் | கை | |

அவரோஹணம்—ஷாடவம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஸ் | நி | த | ப | க | ரி | ஸ |
| | கை | சதுர் | | அம் தர | சதுர் | |

இராகம் - தரார்தரி : — சதுரஸ்ரஜாதி - ரூபக தாளம்.

பல்லவி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ; ● கா | பா க ப க ரி ஸா | ஸா ; | ஸா ஸ நி த நி ஸா |
| | ந | கு மோ மு | ஜூ | ப வே மி ரா |
| 2 | , ரி ● கா | த ப க ப க ரி ஸா | ஸ ரி க ரி | ஸா ஸ நி த நி ஸா |
| | ந | கு மோ மு | ஜூ | ப வே மி ரா |
| 1 | , ரி ● கா | பா த நி ஸ் நி த ப | க ப க ரி | ஸா ஸ நி த நி ஸா |
| | ந | கு மோ மு | ஜூ | ப வே மி ரா |
| | , ரி ● ஸ ரி | கா ரி க ப க பா | க ப த ப | தா ப க த ப க ரி |
| | நன் | னுப்ரோ வ | நே | ர மே மி |
| 2 | ஸ ரி ● கா | பா த நி ஸ் நி த ப | க ப க ரி | ஸா ஸ நி த நி ஸா |
| | ரா ந | கு மோ மு | ஜூ | ப வே மி ரா |
| | , ரி ● ஸ ரி | கா ரி க ப க பா | க ப த நி | ஸ்ா ஸ் நி த ப க ரி |
| | நன் | னு ப்ரோ வ | நே | ர மே மி |
| 3 | ஸ ரி ● கா | பா த நி ஸ் நி த ப | க ப க ரி | ஸா ஸ நி த நி ஸா |
| | ரா ந | கு மோ மு | ஜூ | ப வே மி ரா |
| | ஸ ரி க ரி | கா ரி க ப த நீ | ஸ் ரி க் ரி | ஸ்ா ஸ் நி த ப க ரி |
| | ந ன் னு | ப்ரோ வ | நே | ர மே மி |
| | ஸ ரி ● | | | |
| | ரா | | | |

## அநுபல்லவி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ; ● நி த | பா ; பதபக | பா தா | நீஸ்ா ; ஸ்ா |
| | ஸுகு | மா ரா | ஸு ந்த | ராகா ரா |
| 2 | ; ● நி த | பதநிதபதபக | பா தா | நீஸ்ா நிஸ்ரீ |
| | ஸுகு | மா ரா | ஸு ந்த | ராகா ரா |
| 3 | ; ● நி த | பதநிஸ்நிதபக | பா தா | நீஸ்ரி க்ரி ரீ |
| | ஸுகு | மா ரா | ஸு ந்த | ராகா ரா |
| 1 | ; ● நி த | பதநிஸ்ரிஸ்நித | பா தா | நீஸ்ரிக்ரி க்ா |
| | ஸுகு | மா ரா | ஸு ந்த | ராகா ரா |
| | க்ப் க்ா | ரீ ஸ்ரி ஸ்ா நீ | தநிஸ்ா | நீஸ்நிதபகரி |
| | விக | சித மு க | லோ | ல ரா மா |
| 2 | ஸரி ● நி த | பதநிஸ்ரிஸ்நித | பா தா | நீஸ்ரி க்ரிக்ா |
| | ஸுகு | மா ரா | ஸு ந்த | ராகா ரா |
| | க்ப் க்ா | ரீஸ்ரிக்ரிஸ்ரி | க்ரிஸ் நி | தநிஸ்நிதபகரி |
| | விக | சித மு க | லோ | ல ரா மா |
| | ஸரி ● | | | |

## சரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| | : ● பப | பா பா ; பா | பா தா | நீ ரிஸ் நித பா |
| | பி கு | வு வே க | போ | ஷிம் சே |
| | ; ● கக | தபகபகரிஸா | ஸரிகரி | கா பா ; பா |
| | பர | மத யா | நி | தி நீ வே |
| 1 | ; ● நி த | பா ; பதபக | பா தா | நீஸ்ா ; ஸ்ா |
| | வக | ஜு பு ட | ஜா | லமே ல |
| 2 | ; ● நி த | பதநிதபதபக | பா தா | நீஸ்ாநி ஸ்ரீ |
| | வக | ஜு பு ட | ஜா | லமே ல |
| 3 | ; ● நி த | பதநிஸ்நிதபக | பா தா | நீஸ்ரி க்ரி ரீ |
| | வக | ஜு பு ட | ஜா | லமே ல |
| 1 | ; ● நி த | பதநிஸ்ரிஸ்நித | பா தா | நீ ஸ்ரி க்ரி க்ா |
| | வக | ஜு பு ட | ஜா | லமே ல |
| | க்ப் க்ா | ரீ ஸ்ரிஸ்ா நீ | தநிஸ்ா | நீஸ்நிதபகரி |
| | வ ர | மொஸங் கு | கோ | தாநா ய |
| 2 | ஸரி ● நி த | பதநிஸ்ரிஸ்நித | பா தா | நீ ஸ்ரி க்ரி க்ா |
| | க வக | ஜு பு ட | ஜா | லமே ல |
| | க்ப் க்ா | ரீ ஸ்ரிக்ரிஸ்ரி | க்ரிஸ் நி | தநிஸ்நிதபகரி |
| | வ ர | மொஸங் கு | கோ | தா நா ய |
| | ஸரி ● | | | |
| | க | | | |

### முக்தாயிஸ்வரம்

| | | | |
|---|---|---|---|
| ● க ப | த நீ - ப த நி ஸ் ரி | ஸ்ா ,- ஸ் | நி த - ப கா ரி ஸ நி |
| ஸ ரி கா | ப கா ரி க ப நி த | ப தா நி | த ப த நி ஸ் நி ஸ் ா |
| த நி ஸ் நி | , ஸ் ா ரி க்ா ரீ | ஸ் ா நீ | த ரி ஸ் நி த ப ரீ |
| ஸ் ா நீ | தா ப - ஸ் நி த ப க | நீ தா | பா கா ரி - ப க ரி |
| ஸ ரி ● | | | |



# விகட வெடிகள்

"விருச்சிகம்"

ஒருவர் :—ஏன் சார்! சொந்த வீட்டை விட்டுவிட்டு வாடகை வீட்டிற்குக் குடி வந்திருக்கிறீர்கள்?

மற்றவர் :—ஒன்றுமில்லை. கிரகத்தில் ஏதோ தோஷமிருப்பதாயும் அதற்குப்பரிகாரமாக தினம் 100பேராவது அந்த க்ரகத்தில் சாப்பிட்டால் தோஷ நிவர்த்தியாகி சந்தானம், சம்பத்து இரண்டும் விருத்தியாகும் என்று ஒரு ப்ரபல ஜோஸ்யர் கூறினார். அதற்காகத்தான் வீட்டைச் சாப்பாட்டு ஓட்டல்காரருக்கு வாடகைக்கு விட்டேன்.

* * * *

புருஷன் :—அடீ! உன்னிடம் பணத்தைக்கொடுத்துவிட்டேனே பிழைத்தேனே! ராமு வந்து என் பெட்டியைக்கூடக் கிளறினான். காலணாகூட இல்லை என்று கண்டிப்பாய்க் கூறி அனுப்பி விட்டேன். பணத்தைக் கொடு...

மனைவி:—ஐயோ பாவமே! ராமுவின் மனைவி இப்பதானே வந்து அந்த பணத்தைக் கடனாக வாங்கிக்கொண்டு போனாள்.

* * * *

குப்பு :—எங்கே இப்படிக் கிளம்பறே!

சுப்பு :—முத்து வீட்டின் விஷயம் தெரியுமோன்னே! கல்யாணத்தை விசாரித்துவிட்டு வந்தேன்...

குப்பு:—என்ன! சாவு வீட்டுக்குப் போய்வந்து உளறுகிறாயே!

சுப்பு :—உளறலேடா! செத்துப்போன பாட்டியோடே புள்ளையின் பேரு கல்யாணந்தானே...அதனால் கல்யாணத்தை துக்கம் விசாரித்தேன் என்றேன். அர்த்தம் தெரியல்லே?

## கிளியால் தெரிந்த மர்மம்

ஸ்ரீ. ஆர். எஸ். கந்தசாமி, திண்டுக்கல்

சுரேந்திரகிரி அரசன் ஒருநாள் தன் சேவகர்களுடன் வேட்டையாட காட்டுக்குச் சென்றான். பலவித மிருகங்களை வேட்டையாடி அவைகளைக் கண்டு மனம் பூரித்தான். சேவகர்களில் குப்பன் என்பவன் ஒரு கிளியைக் கையில் வைத்துக்கொண்டு தனக்குத் தானே ஏதோ சொல்லிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்தான். குப்பன் இப்படிச் செய்வதைக் கண்டு அரசன் 'இதில் ஏதோ ஓர் மர்மம் இருக்கிறது' என்று யூகித்து, "அடே குப்பா! என்ன கொஞ்சங்கூட மரியாதையின்றி நகைக்கிறாயே! என்ன காரணம்?" என்று அதட்டிக் கேட்டான். குப்பன் திகிலுடன் ஒன்றுங் கூறாது விழித்தான். "அடே! உண்மையைக் கூறுகிறாயா அல்லது இதோ என் கையில் இருக்கும் வாளுக்கு இறையாகிறாயா?" என்று அரசன் கடுங்கோபத்துடன் கேட்டான். குப்பன் நடுங்கிய வண்ணம், "அரசே! நான் சில வருஷங்களுக்குமுன் இதே காட்டில் வழிபறிக்கொள்ளை செய்துவந்தேன். ஒருநாள் ஓர் சிறுவன் குதிரை மீது இவ்வழியே வந்தான். நான் அவனிடம் இருந்த பொருள்களை அபகரித்துக்கொண்டு, அவனை உயிருடன் விட்டால் எனக்கு ஆபத்து வரும் என்று நினைத்து, அவனை மென்னியைப் பிடித்துத் திருகினேன். அவன் உயிரை நீக்கும்போது இம்மரத்தில் இருந்த இந்த கிளியைப் பார்த்து, "கிளியே நீயே கடவுள்! இப்பாதகனின் செயல் உன்னால்தான் என் தாய் தந்தைக்கு தெரியவேண்டும்" என்று சொல்கையில்... அரசன் இடைமறித்து "ஹா! கொலைக்கு அஞ்சாத பாதகா! என் புதல்வன் வாக்கின்படியே இந்தக் கிளியால் இந்த மர்மம் எனக்குத் தெரிந்தது. இதோ, பழிக்குப்பழி!" என்று கூறிக்கொண்டு அவன் தலையை அவனுடலைவிட்டுப் பிரிய வைத்தான். அவன் உயிரை விடும்பொழுது "இது செய்கைக்குத் தகுந்த தண்டனை" என்று கூறினான்.

---

"அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" என்பதுபழமொழி. இரண்டையும் ஒரே சமயம் நிகழ்த்திக் கடவுள் தண்டித்தார். ஆகையால் குழந்தைகளே! பிறருக்கு சொப்பனத்திலும் ஒரு தீங்கும் நினையாதீர்கள்.

# உலகில் உண்டா?

(20) பூண்டு தின்ற வாசனையையும் புரளி செய்யும் சுபாவத்தையும் மறைக்க முடியுமா!

(21) கலக மில்லாத கல்யாணமும் காசு பறிக்காத பொதுசங்கங்களும் உண்டா!

(22) ஓஸிக்கு ஆசைப்படாதவர்களும் பாசியில் சறுக்கி விழாதவர்களும் உண்டா!

(23) வாசனைக்கு மயங்காதவர்களும் வஞ்சனைக்கு அகப்படாதவர்களும் உண்டா!

(24) நாத்தத்திற்கு முகம் சுளிக்காதவர்களும் நாத்தியின் வரவை வெறுக்காத அண்ணியும் உண்டா!

(25) முடுக்கு நடை நடக்காத மாப்பிள்ளையும் முடுக்கிக் கொண்டு போகாத சம்மந்தியும் உண்டா!

(26) தரகனிடம் உண்மையும் தட்டானிடம் சத்தியமும் காண முடியுமா!

(27) மட்டம் போடாத மாணவர்களும் திட்ட சட்டம் போடாத மாமியார்களும் உண்டா!

(28) குண்டுணியின் குணத்தையும் கொள்ளி மிளகாயின் காரத்தையும் மாற்றமுடியுமா!

(29) வேத்து விடாதவர்களும் காத்தை விரும்பாதவர்களும் உண்டா!

(30) விளக்கெண்ணெய் குடிக்க முகம் சுளிக்காதவர்களும் விளக்கைக் கண்டு மகிழாதவர்களும் உண்டா!

(31) கோயில் பூனையிடம் சகுனமும் குழந்தைகளிடம் தீட்டும் பார்ப்பதுண்டா!

(32) கடன்காரன் நெஞ்சும் கக்ஷிக்காரன் நெஞ்சும் கவலை யற்றிருக்க முடியுமா!

(33) பெண்ணாசையை விட்டப் புருஷனும் பொன்னாசையை விட்டப் பெண்ணும் உலகில் உண்டா!

(34) தன் சரக்கைப்பற்றி புகழாத வியாபாரியும் தம் குழந்தையைப்பற்றிக் கொண்டாடாத பெற்றோரும் உலகில் உண்டா!

(35) கர்வம் பிடித்த மனிதர்களையும் சந்தேக மதியுடைய கணவனையும் த்ருப்தி செய்ய முடியுமா!

வை. மு. கோ.

# வெளிநாட்டு அன்பர்களுக்கு ஓர் விண்ணப்பம்

அன்பர்களே!

தமிழ்ப் பத்திரிகைகளில், வெளிநாட்டினருக்காகச் சந்தாவை அதிகமாக்காத பத்திரிகை நமது மோகினி ஒன்றுதான் என்பது நீங்கள் அறிந்த விஷயம். உள் நாட்டில் காலணா தபாற் செலவில் அனுப்பும் பத்திரிகையை வெளிநாட்டிற்கு அனுப்ப முக்காலணா ஆவதால் நமக்குச் செலவு அதிகமாயினும், தமிழ் மக்கள் யாவரும் ஒரே விலையில் நமது பத்திரிகையைப் படிக்க சௌகரியமளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சந்தாவை இதுவரை அதிகரிக்கவில்லை. யுத்தத்தின் காரணமாக பேபரின் விலை ஒன்றுக்கு மூன்று நான்கத்தனை உயர்ந்துவிட்டது. ஒரு சஞ்சிகைக்கு தபாற்செலவு முக்காலணா போனால் மிகுதியுள்ள $1\frac{1}{4}$ அணாவுக்கு மேலாகவே நமக்கு அடக்கவிலை ஆவதால் நஷ்டமேற்படுகிறது. இதைத் தவிர்க்க, யுத்தம் முடிந்து பேபர் பழைய விலைக்கு வருகிறவரையில், வெளிநாட்டுச் சந்தாவில் அரை ரூபாய் அதிகரிக்கவேண்டிய அவசியமேற்பட்டிருப்பதை நண்பர்களுக்கு ஜூன் மாதமே தெரிவித்தோம். ஆகையால் அன்பர்கள் புது வருஷச் சந்தாவுக்காக ரூ. 2 (3 sh. B. P. O.) அனுப்பி, என்றும்போல் "மோகினி"யை ஆதரிக்கக் கோருகிறோம்.

அக்டோபர் மாதசஞ்சிகை வழக்கம்போல மாதமுதலிலேயே, தயாராயிருந்தும் 29 தேதிக்குமுன் மலாய்நாட்டுக் கப்பல் போகாததால் முன்னதாக அனுப்பமுடியவில்லை. யுத்தத்தின் காரணமாகக் காலா காலத்தில் கப்பல்கள் போகாததால் சஞ்சிகை உங்களைச் சேர்வதற்குத் தாமதமாவதைக் கவனிக்கவும்.

வருஷம் முடிவடைவதால் இதுவரை ஏதாவது சஞ்சிகை தவறியிருந்தால் உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## சந்தாநேயர்கள் கவனிக்கவும்

### உள் நாடு

ஒவ்வொரு மாதமும் முதல் தேதியிலேயே நாமெல்லோருக்கும் சஞ்சிகையை அனுப்பிவிடுவதால் யாருக்காவது சேராவிடில் அம் மாத முடிவிற்குள் தெரிவித்தால்தான் மறுபடியும் இனமாக அனுப்ப முடியும். அப்புறம் தெரிவிப்பவர்கள் சஞ்சிகையின் விலைக்காக இரண்டணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

### வெளி நாடு

யுத்த காரணத்தினால் வெளிநாட்டிற்குப் போகும் தபால்கள் தாமதமாவதால், அங்குள்ள நேயர்கள் ஒரு சஞ்சிகை வந்த பிறகும் முன் மாதத்தியது வரவில்லையாயின், உடனே தெரிவித்தால் இனமாக அனுப்புவோம்; இல்லாவிடில் சஞ்சிகையின் விலைக்காக ஒரே போஸ்டல் கூபன் வைத்தனுப்பவேண்டும்.

இந்த சஞ்சிகையை அனுப்பியுள்ள உங்களது விலாசத்தில் ஏதாவது தவறு இருந்தால் உடனே தெரிவியுங்கள்.

விலாசம் மாறுபவர்கள் உடனுக்குடன் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.



1940ஆம் நவம்பர் 9உ சனிக்கிழமை

குதூகல ஆரம்பம்

சென்னை பாரகான் டாக்கீஸிலும்

10 தெலுங்கு பிரதேசங்களிலும்.

ஸ்ரீ. ஒய். வி. ராவ் அவர்களின்

மகத்தான தயாரிப்பு

**விஸ்வமோகினி**

படக்காக்ஷிக்கேற்ற கவர்ச்சியான சம்பவங்களடங்கிய

காதல் கதை

உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவரும் பார்க்கத்தக்கது

ஸ்ரீ. ஒய். வி. ராவ் டைரெக்ட் செய்தது

லலிதாதேவி, ஒய். வி. ராவ், நாகய்யா,

ராஜரத்னம்

முதலியோர் நடித்தது.

*For Booking* :—Sri Jagadish Films, Kilpauk.

*For South only* :—Supreme Pictures, Trichy.

எல்லாம் காலதேவதையின் பரீக்ஷை. பெருமூச்சு தூரத்தியடித்தது. சொட்டும் கண்ணீர் அடங்கவில்லை. குனிந்த தலையும் நிமிரவில்லை. இதயம் வெடித்துவிடும்போலாகிவிட்டது. "எக்காலத்திலும் எந்த சமயத்திலும் மனக்குறையை ஆற்றி ஆறுதலளிக்கும் வள்ளல் அப்பரந்தாமனன்றி வேறு உண்டா? அவனன்றி ஓரணுவு அசையுமா! அத்தகைய கருணைவள்ளல் என் விஷயத்தில் மட்டும் எங்கேபோய் ஒளிந்துகொண்டான்? என் தலையில் எழுதியதொன்று, என் வாழ்க்கையில் காட்டும் விபரீதம் ஒன்றாக ஏன் அந்த மாயாவதாரன் செய்யவேண்டும்? உம். இதுவும் தலையெழுத்து, விதி, கர்மம், பண்ண பாவம்...என்கிற பதங்களைக் கொண்டு திருப்தியாகவேண்டியதுதானா?....மனந்தேறுவதற்கு ஓர் மந்திரம்போல் இந்தப் பதங்களையும் கருத்துக்களையும் அமைத்திருக்கிறார்கள் என்றுதான் தோன்றுகிறது. மூழ்கிவிடப்போகும் கப்பலுக்காவது தப்புவதற்கு ஏதாவதொரு மார்க்கம் அகப்படலாம். என் வாழ்க்கையின் முடிவுக்கு ஒருவிதமான மார்க்கமும் கிடையாதா!

ஐயோ! ஆண்டவனே! என்னை எந்த வழியில்தான் விடப் போகிறாய்? மனம் முறிந்துபோன வேகத்தில் எங்காவது போய் விட்டால் போதும் என்று வண்டியில் ஏறிவிட்டேனே! அனாதையிலும் அனாதையான எனக்குப் போக்கிடம் ஏது? நான் எங்கே போவேன்? யாரிடம் அடைக்கலம் புகுவேன்? இந்த இராக் காலத்தில் தன்னந்தனியே நான் எங்கே போனால்தான் தகும்?

என்ன! தகுமா! இந்த அனாதைக்கட்டைக்குத்தகுந்த இடந்தான் ஒன்றிருக்கிறதே....இதற்குள்ளாகவா அதை மறந்துவிட்டாய் நெஞ்சே! உம். தைரியத்தைக் கைவிடாதே. ரயிலின் அடி தண்டவாளம் உனக்கு மிகவும் சுதந்திரமான இடமில்லையா! சமுத்திரம், ஏரி, ஆறு, குளம், கிணறு முதலிய இடங்கள் உனக்குப் பூர்ண சொந்தமல்லவா! அவற்றை நாடிச்செல்லு. அந்த அநுபவத்திற்குத் துணிந்து எதிர்நோக்கி இரு.

ஏ விலாஸினி! நீ எடுத்த ஜென்மத்திற்கு இதுதான் உனக்குத் தக்க பலன். இதுதான் நீ கண்ட சுகம். நீ அடைந்த ஆனந்தம். உனது பிறவியின் சார்த்தகம்" என்று தனக்குள் நினைக்க நினைக்க துக்கம் தாங்காது வயிற்றிலிருந்து குமுறிக்கொண்டு பீறி வந்தது.

தண்டவாளத்தையும் ரயிலையும் ஒருதரம் அவள் மானஸீகமாக நினைத்தபோது தேகம் நடுநடுங்கி கிடுகிடு என்று ஆடியது. ஆறு சமுத்திரம் முதலிய ஜலத்தை நினைக்கும்போது மூச்சுத் திணறிச் சித்திரவதை செய்தது. பொங்கி வரும் துக்கத்தை அடக்கமுடியாது விம்மி விம்மி அழுது தத்தளித்தாள்.

ரயில்கேட்டு மத்தியில் வந்ததால், வண்டியை நிறுத்தும்படியாகியது. அயோமயமான நிலைமையிலுள்ள அவளுக்கு வண்டி நின்றதோ ரயில்கேட்டு குறுக்கிட்டதோ ஒன்றுமே தெரியவில்லை. பெரிய பூதம்போல் பேரிரைச்சல் போட்டுக்கொண்டே ராக்ஷஸஸ்வரூபத்துடன்வரும்போதுதான் விலாஸினிக்கு மூளையில் சற்றுதெளிவு உண்டாகியது. எஞ்சினைப் பார்த்ததும் அவளை மீறி கூவென்று ஒரு சத்தமிட்டு அலறி இருகண்களையும் மூடிக்கொண்டாள்.

"இந்த பெரும் பூதத்தடியில்தானே நாம் விழவேண்டும்?" என்று நினைக்கும்போது வண்டியுடன் உலகமே தட்டாமாலை சுற்றுவதுபோலிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் கேட்டு திறந்ததும் வண்டிகள் போகத் தொடங்கின.

வண்டியோட்டும் சாயபு இயற்கையிலேயே மிகவும் நல்ல உத்தமன், பெருந்தன்மையான குணமும், ஒழுக்கமும் நிறைந்தவன், விலாஸினி வண்டி பேசும்போதிலிருந்து அவளுடைய மாறுதலையும் நிலைமையையும் கவனித்துக்கொண்டே வந்தவன் அவள் கூவென்று கூச்சலிட்டதைக் கேட்டதும், பிறகு அவள் துடிப்பதைப் பார்த்ததும் அவனுக்கு ஒன்றுமே தோன்ருது ஏதேதோ சந்தேகமும் குழப்பமும் உண்டாகிவிட்டன.

அந்தப் பெண் தன்னைமீறிய விசனத்தில் ஆழ்ந்திருப்பதாக மட்டும் அறிந்துகொண்டான். பிறகு இம்மாதிரி பெரிய கூச்சலிட்டதும் மிகவும் இளகிய மனத்தையுடைய சாயபுவுக்குத் தாங்கவில்லை. ரயில் பாதையைத் தாண்டியதும் மெல்லிய குரலில் பேசத்துடங்கி, "அம்மணீ! நான் கேட்பதை நீங்கள் அதிகப்ரஸங்கித்தனமாக நினைக்கக்கூடாது. வண்டியில் ஏறினது முதல் உங்களை நான் கவனித்து வருகிறேன். தாங்கமாட்டாது புலம்புகிறீர்கள். எஞ்சினைக்கண்டு ஏன் இப்படி அலறுகிறீர்கள்? உங்களுக்கு சொந்தக்காரர்கள் யாரேனும் இறந்துவிட்டார்களா! நீங்கள் இருக்கும் நிலைமையைப் பார்த்தால் தனியே எந்த ஊருக்கு நல்லபடி போய்ச்சேருவீர்கள் என்று எனக்குப் பயமாகத் தோன்றுகிறதே. உங்களுக்குத்

துணை ஒருவருமில்லையா?'' என்று வெகு அன்புடன் கேட்டான்.

அத்தனை துக்க சாகரத்தில் மூழ்கியிருக்கும் விலாஸினிக்கும் சற்று வியப்பாகவிருந்தது. வண்டியோட்டும் ஆளைப்பார்த்தால் அவன் உடையிலிருந்து சாயபு என்பது நன்கு விளங்கிற்று. சாயபு வாயிருந்தும் "உங்கிள்கி நம்பள்கி சொல்ரான் பேஸரான்" என்ற கொச்சை பாஷையில்லாது வெகு சுத்தமானத் தமிழ் பேசுவதோடு தன்னை இத்தனை உன்னிப்பாகக் கவனித்து விசாரிப்பதும் அன்பொழுகக் கேட்பதும் அவளுக்கு உண்மையில் பேராச்சரியமாயிருந்தது. 'இராக் காலத்தில் தன்னந்தனியே வண்டியில் செல்லும்போது அந்த முன்பின் அறியாத வண்டிக்கார சாயபுவிடம் எப்படிப் பேசுவது?' என்ற அச்சமும் பயமும் ஒரு க்ஷணம் உதித்து தியங்கச் செய்தது.

இவளுடைய தியக்கத்தைக் கண்டதும் சாயபு "அம்மணீ! நான் அசல் மகம்மதியன். ஜாதிவிட்டு ஜாதி வந்தவனல்ல. தமிழ் நாட்டிலேயே பரம்பரையா யிருப்பவன். நான் பெரிய சம்சாரி; பிள்ளைகுட்டிக்காரன். இந்த தொழிலிலிருந்து என்னுடைய குடும்பத்தில் 9 ஆத்மாக்கள் பிழைக்கவேண்டும்; பத்தாவது குதிரையும் பிழைக்கவேண்டும்.

நான் பத்து பேருடன் பிறந்தவன். பத்து மக்களைப்பெற்றவன். உலகத்தை நன்கறிந்தவன். இதோ என் வலக்கையைப் பாருங்கள். நான் 10 வகுப்பு வரையில் படித்துவிட்டு ஒரு கம்பெனியில் டைப்பு அடிக்கும் வேலையிலிருந்தேன். விதிவசத்தால் கீழே விழுந்து அடிபட்டு கையே கோணியதோடு ஒருவிரலும் போய்விட்டது. அம்மணீ! ஆண்டவனல் ஆக்கப்பட்ட எந்தத் தொழிலும் கண்ணியமானதுதான். ஒழுங்கான முறையில் தூய இருதயத்துடன் எந்த தொழில் செய்தாலும் அது ஆண்டவனுக்கு அர்ப்பணம் என்ற எண்ணமே எனக்கு உண்டாகிறது. முதலில் கூட்டுத் தொழிலில் லுங்கி வியாபாரம் நடத்தினேன். நம்பிய நண்பனே நமனய் மோசம் செய்துவிட்டான்.

எனக்குக் கை ஸ்வாதீனமில்லாததால் வேறு எந்தத் தொழிலும் தனிமையில் செய்ய முடியவில்லை. பிறகு இந்த வண்டியோட்டும் தொழிலை மேற்கொண்டு 15 வருஷமாகிறது. எனக்கு வயசு 50 ஆகிறது. அல்லாவின் கருணையால் ஏதோ பிழைத்து வருகிறேன். ட்ராம்களும் பஸ்ஸுக்களும், எலக்ட்ரிக்ரயிலும், விருத்தியான பிறகு

இந்த தொழிலிலும் ஜீவனத்திற்குக் கஷ்டமாகி விட்டது.

என் மனைவி மகா உத்தமி. வெகு சாந்தஸ்வரூபி. குடும்பத்தின் வறுமையும், நிலைமையும் தெரிந்தவள். என்னுடைய நிழல் போன்றவள். அவள் ஜிகினா தைக்கும் வேலையில் கை தேர்ந்தவள்; அவளும் அந்த தொழிலைச் செய்வதால் நாங்கள் பசியாது சாப்பிடுகிறோம்... அடடா!...ஏதோ வார்த்தை ஆரம்பித்து என் சரித்திரத்தில் போய் பாய்ந்துவிட்டதே.

இத்தனையும் எதற்குச் சொன்னேன் என்றால் உங்கள் பரிதாபத்தைப் பார்த்தால் எனக்கு மனம் தாங்கவில்லை, அதனால் உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை ஏற்படுவதற்காகக் கூறினேன். நான் சில ஜட்காவண்டிக்காரர்களைப்போல் போக்கிறி சாக்கிறியல்ல. ஆண்டவனுக்குப் பயந்தவன். எந்த நிமிஷம் நாம் என்ன அக்ரமத்தைச் செய்தாலும் முடிவில் அவனுக்குப் பதில் சொல்ல வேண்டாமா! அவன் நம்மை கவனிப்பதுபோல் நாமும் அவனை நம்பி மன நெறியுடன் ஒழுகினால்தான் ஜென்மம் கடைத்தேறும்...அம்மணீ! நீங்கள் சொல்லியபடி ரயில் ஸ்டேஷன் அதோ வந்துவிட்டது. நீங்கள் எந்த ஊருக்குப் போகவேண்டுமோ சொல்லுங்கள். நான் டிக்கட்டு வாங்கிவந்து தருகிறேன்'' என்று கனிந்த குரலில் சொன்னான்.

ஐயோ பாவம்! ரயில்வே ஸ்டேஷனுக்குப்போய் ரயிலடியில் விழுந்து சாகவேண்டுமென்று போகும் பாவிப் பெண் எந்த ஊருக்குப்போவதாகக் கூறமுடியும்? சாயபுவின் நல்ல குணமும், குடும்பத்தின் வரலாறும் தெரிந்த பிறகு சாயபுவிடம் இருந்த பயம் சற்று நீங்கியது. எனினும் அவள் என்னவிதம் பதிலளிக்கமுடியும்? அல்லது தனது உண்மையைக் கூறத்தான் முடியுமா?

சில விநாடிகள் தவித்தாள். ரயில்வே ஸ்டேஷனைப் பார்த்ததும் பின்னும் கபீரென்றது. எல்லாவற்றையும் உள்ளடக்கிக்கொண்டு "சாயபு! நீ யாரோ! நான் யாரோ! உண்மையில் நாம் ஒருவரையொருவர் இன்றுதான் பார்த்தவர்களாகவிருப்பினும் நீ என்னிடம் காட்டும் அனுதாபத்திற்காக நான் மிகவும் நன்றியுடன் வந்தனம் செலுத்துகிறேன். நான் போய்வருகிறேன். நானே டிக்கட்டு வாங்கிப் பழக்கமுண்டு; வாங்கிக்கொள்கிறேன். இந்தா! உனக்கு 8 அணா பேசினேன்; உனது நல்ல குணத்திற்காக ஒரு ரூபாயாய் பெற்றுக்கொள்ளு. சாமான்களை இறக்கி வைத்துவிட்டுப் போப்பா!'

என்று சமாளித்துக்கொண்டு சொன்னாள்.

எந்த வண்டி வந்தாலும் அதன் பின்னாலேயே மூட்டைத்தூக்கும் போர்டர்கள் ஓடிவந்து வளைத்துக்கொள்வதும், மூட்டைகளைத் தூக்கப்போட்டிபோட்டுத் தூக்கிச்செல்வதும் ஒரு பெரிய தொந்தரவு. அந்த தொந்தரவை அறியாத விலாஸினிக்கு இப்போதுதான் அந்த அநுபவம் உண்டாகியதால் முதலில் திணறிப்போய்விட்டாள்.

அடுத்த நிமிடமே "சரி...ரயிலடியில் போட்டுவிட்டுப்போகப் போகும் மூட்டையை யார் தூக்கிச் சென்றால் என்ன? எப்படியாவது போகட்டும். யாராவது எடுத்துக்கொள்ளட்டும்" என்று துணிந்து எண்ணியவாறே, "சாயபு! போகிறேன்" என்று கூறிப் பின் வேகமாக நடந்து ஸ்டேஷனுக்குள் மறைந்தாள்.

இவள் ஒரு இடம், இவளுடைய சாமான்களைத் தூக்கிச் சென்ற போர்டர்கள் ஒரு இடமாக ஸ்டேஷனுக்குள் உள்ள பல ப்ளாட்பாரங்களில் சென்றார்கள். காற்றில் அலையும் தளிர் போல விலாஸினி நடக்கமாட்டாது நடந்து சென்று அங்கு ஒரு பலகையின்மேல் உட்கார்ந்தாள்.

தன் ஆதி சரிதையும், மத்தியில் உண்டாகிய சந்தோஷமும், தற்போது ஏற்பட்டுள்ள சகிக்கமுடியாத துக்கமும், தன் வாழ்நாள் முடியப்போகும் விபரீத பயங்கரமும் மாறி மாறி அவள் மனத்தில் தோன்றி அவளால் சகிக்கமுடியாத சித்திரவதை செய்துவாட்டியது.

பெஞ்சியில் உட்காரவும் முடியவில்லை. ஸ்டேஷனிலுள்ள பிரயாணிகளின் ஆரவாரமும் வியாபாரிகளின் விற்பனைக் குரல்களும் அடிக்கடி ரயில்கள் வரும் இரைச்சலும் அவள் உட்கார்ந்துள்ள பெஞ்சியிலேயே சில பிரயாணிகள் வந்து உட்கார்ந்துவிட்டதும் அவளுக்கு மிக்க அருவருப்பாயும் வேதனையாயுமிருந்ததால் அவ்விடத்தைவிட்டு வேறு இடத்திற்குச் சென்றாள்.

நல்ல அழகும் யௌவனமும் குடிகொண்ட ஓர் இளநங்கை தனித்திருப்பதைக் கண்டுவிட்ட எந்த சோதாப்பயல்களாவது அவ்விடத்திலேயே வட்டமிட்டுச் சுற்றியலையாது போவார்களா!

புஷ்பத்தைச் சுற்றியலையும் வண்டுகளைப்போல் சோதாக் கூட்டங்கள் சுற்றியலைவதும், விசில் அடிப்பதும், "சுந்தராங்கிக்கு இணையுண்டோ!" என்று பாடுவதும், கைகொட்டிச் சிரிப்பதும், திரும்பித் திரும்பிப் பார்ப்பதுமாகவிருப்பதைக் கண்டதும், ஐயோ பாவம்! அம்மடந்தையின் மனத்திற்கு எப்படித்தானிருக்கும்?

ஒண்டியாக ஒரு யுவதி உலகத்தில் எப்படித்தான் வாழ்க்கையை நடத்தமுடியும்? அதிலுள்ள பயங்கரங்கள் எண்ணிலாதவை என்பதை அவளுக்கு விளக்கிக் கூறுவதுபோலிருந்தது. பின்னும் பயமும், வெறுப்பும், நடுக்கலும் உண்டாகியதால் அப்போதே ரயில் அடியில் விழுந்துவிடலாமா என்றும் துணிந்தாள்.

ஆனால், அத்தனை ஜனங்களின் மத்தியில் பட்டப்பகல்போல் விளக்கெரியும் இடத்தில் எவ்விதம் முடியும்? உடனே அகப்பட்டுக் கொள்வோம் என்றும் அவளுக்கு நன்கு தெரியும்; ஆதலால் அதுவும் முடியவில்லை.

நெஞ்சில் 'திக்கு திக்கு' என்று அடித்துக்கொள்வதையும், மார்பு படபடவென்று அடிப்பதையும், சொல்லத் திறமற்ற சங்கடம் செய்வதையும் அவளால் பொறுக்கவே முடியவில்லை. நெருப்பில் விழுந்த புழுவைப்போல் துடிக்கிறாள். "என்னை ஏன் இந்த கடவுள் படைத்தார்? எதற்காக இத்தகைய பரிபவப்படுத்துகிறார்? ஈவிரக்கமற்றக் கல்லா அக்கடவுளின் நெஞ்சு?

தகப்பனோ சிறையிலிருக்கிறார். தாயோ, என்னைதன்னந்தனியே விட்டு மாண்டாள். ஆதாவாகவிருந்த கிழவியும் உலகைவிட்டு மறைந்தாள். அந்தோ! ஒப்புயர்வற்ற உத்தமனை நேசிக்கச் செய்து அவரையும் துறக்கும்படி உன் கல்நெஞ்சம் கட்டளையிட்டுவிட்டது. இனி இப்பாழும் கிருதக உலகில் தன்னந்தனியே பரதேசி யான் ஒரு விநாடி வாழமுடியுமா! இவைகளைத் தெரிந்துதான் என்னை இத்தகைய வதை செய்கிறாயா? ஏ பரம்பொருளே! இத்தனை கோடி ஜீவராசிகளில் என்னைத்தானா நீ சித்திரவதை செய்து ரயில் அடியில் சாகவைத்து வேடிக்கைப் பார்க்க பிரியப்படுகிறாய்?...

என்ன மதியீனம்! என்ன துர்ப்புத்தி, நான் செய்த கர்மாவுக்கு பகவானை நோவதா?...சீச்சீ! மடமனமே!...என்று தன்னையே நொந்துகொண்டு அந்த சோதாக்களின் கண்ணில் படாது மறைந்து செல்வதற்காகத் தன் மனம்போன வழியில் நடந்து இருட்டான இடத்திற்குச் சென்றாள்.

அடுத்த நிமிடம் இறக்கச் சித்தமாயிருக்கும்போதுகூட இருட்டில் தனிமையாயிருக்க நெஞ்சம் பதறியது; உள்ளம் துடித்தது. மதுசூதனனின் பிம்பத்தை நினைக்கும்போது ஒரு க்ஷணம் மெய் மறந்து பரவசமுற்றது. மறுக்ஷணம் உடலே நடுங்கியது. தீயின் மத்தியிலிருப்பவளைப்போல் தேகம் எரிந்தது.

மணி டாங்டாங்கென்று 12 அடித்தது. எங்கும் நிச்சப்தம் குடிகொண்டது. வண்டி வரும்போதும் போகும்போதுந்தான் சப்தம் உண்டாகியது. மற்ற நேரத்தில் நிச்சப்தமே கவ்விக்கொண்டு கும்மென்ற ஓர் எதிரொலியைக் கொடுத்தது.

கூட்ஸ் வண்டி ஒன்று வரும் நேரத்தை அறிவிக்க வேலைக்காரன் நடமாடினன். "இதுதான் சமயம் இனி அரைக்ஷணம்கூட நாம் தாமதிக்கலாகாது" என்று அதீதமான வைராக்யத்தை அடைந்து துணிந்து, வண்டிவரும் பாதையிலுள்ள தண்டவாளத்தின் குறுக்கே படுத்துவிட்டாள். அந்த இடத்தில் இருள் சூழ்ந்திருந்தது. "ஹா! கடவுளே! சிறையிலிருக்கும் என் பிதாவையும், என் ஆத்ம நாதன் மதுசூதனனையும் காப்பாற்று. இப்பாழும் உலகிலிருந்து என்னை விரட்டிவிடு. என் பாபங்களை மன்னித்து எனக்கு உன் னருளைக் கொடுத்துக் காப்பாற்று. அடுத்த பிறவியிலாவது என் காதலனையே நான் மாலையிட்டு இன்பமடையும்படி அருள் பாலிப்பாயா?"...என்று மனத்தில் நினைக்கிருள்.

வண்டி இரைச்சலிட்டுக்கொண்டு கடகடவென்ற சப்தத்துடன் அருகில் வரவர அப்பேதைப் பெண்ணின் நிலைமையை வர்ணிக்க முடியுமா? ஆசாபாசமும் ஒடுங்கியது. மூளையே கலங்கிக் கட்டைபோலாகிவிட்டது. அந்தோ பரிதாபம்! பரிதாபம்!...


# அனாதைப் பெண்

**டாக்கி நாவலின் அழகிய 2-ம் பதிப்பு**

இப்பதிப்பில் "அனாதைப் பெண்" டாக்கியிலிருந்து சந்தர்ப்பத்திற்கேற்றவாறு 36 ஆப்டோன் படங்கள் உயர்ந்த ஆர்ட்காகிதத்தில் பல வர்ணங்களில் அச்சிடப் பட்டிருக்கின்றன.

ஆனால், புத்தகத்தின் விலையை மாத்திரம் அதிகரிக்க வில்லையென்பதை நேயர்கள் கவனிப்பார்களாக!

இந்தப் புஸ்தகம் உங்கள் கைக்குப் பூஷணம்!
மனதுக்கு ஆனந்தம்! யாவர்க்கும் இனியதோர் விருந்து!

**விலை ரூ. 1-4 தான்.**

**நாவலைப் படித்துப் படத்தைப் பாருங்கள்.**

## 28

ஆசாபாசமும் ஒடுங்கியது. மூளையே கலங்கிக் கட்டைபோ லாகிவிட்டது. அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! பக்திப் பெருக்கால் பரவசமுற்று பகவானைத் தொழுது ஆடிப்பாடி உள்ளம் உருகப் பஜனை செய்யும் உத்தமனுக்கு பைசாசத்திலும் கேடு கெட்ட பைசாசம்போன்ற மனைவியும், பிரம்மராக்ஷஸி போன்ற மாமியாரும் வாய்த்துவிட்டால் அவன் உள்ளம் எப்படித்தான் துடிக்காது? அதோடு பூஜைவேளையில் கரடி புகுந்ததுபோல் பல பேர்களின் மத்தியில் மானத்தை வாங்கினால் இன்னும் எப்படித்தா னிருக்கும்?

எவ்வளவு வைராக்யமும், விரக்தியும் இருந்தாலும் மனித சுபா வத்திற்குண்டான அவமானமும் லஜ்ஜையும் உண்டாகி தலை குனி யச்செய்துவிட்டது. மதுசூதனன் பஜனையைச் செய்வானா! அல்லது அந்த பத்திரகாளிகளைச் சமாதானம் செய்வானா! ஒன் றுமே முடியாது சில நிமிடங்கள் தத்தளித்தான்.

“என் தாயே! பரதேவதே! தயவுசெய்து பேசாது சாந்தமாய் போய்விடேன்” என்று கூறி அவளை நமஸ்கரித்துவிடலாமா என் றும் நினைத்தான். அங்குக் குழுமியுள்ள ஜனங்களுக்குமுன் தான் ஆத்திரப்படக்கூடாது என்று சாந்தத்தை யடைந்தான்.

பொதுஜனங்களின் வியப்பும், கோபமும், அருவருப்பும் கூறத் திறமே இல்லை. “இவளென்ன பெண்ணா! அல்லது பிரம ராக்ஷஸியா!” என்று வாய் விட்டும் கூறிவிட்டார்கள்.

வந்த ராக்ஷஸிகள் ஒன்றுக்கும் சளைக்கவோ, அச்சப்படவோ இல்லை. ஆத்திர தேவதைகளாய் நாட்டியமாடியபடியே, அங்கிருந்த இதர பெண்பிள்ளைகளைப் பார்த்துக் காறிஉமிழ்வதுபோல் “தூத்தூ! பேமானி ஜென்மங்களே! பொட்டச்சிகள் என்ற மானமோ, மரி யாதையோ இல்லாது ஆண்பிள்ளைகள் தடிதடியாய் குதிக்கு மிடத்தில் உங்களுக்கென்னடீ வேலை! உங்களுக்கு வீடு வாசல் ஒன்றுமில்லை? உங்கள் கணவன்மார்கள் எல்லாம் கம்மனாட்டி களா? கையாலாகாத முண்டங்களா! உங்களை இப்படி ஆடவிட்டு நாடகம் பார்க்கிறார்களா! அசல் புருஷனுடன் உங்களுக்கென் னடீ வேலை?...எழுந்து போங்கள். கெட்டுப்போன கழுதைகளா!” என்று நிர்த்தனம் செய்தார்கள். இதைக்கண்ட பெண்கள் நடு

நடுங்கிப் போய்விட்டார்கள்.

பூனையைக் கண்ட எலிகளைப்போல் பெண்களில் சிலர் எழுந்து தாறுமாறுமாக ஓடிப்பதுங்கிக்கொண்டார்கள். சிலர் இவர்களுக்குச் சரியாக எதிர்த்துச்சண்டையிட்டுக்கூச்சலிட்டார்கள். ஆண்பிள்ளைகளும் கூக்குரலிட்டுத் திட்டித் தாண்டவமாடத் தொடங்கினார்கள்.

பக்தியின் மேலீட்டால் வீட்டாருக்குத் தெரியாது வந்திருந்த பெண்பிள்ளைகள் தீயை மிதித்தவர்கள்போல் நடுங்கித் தத்தளித்தார்கள். இந்த ராக்ஷஸிகள் ஏற்கெனவே ஏற்பாடு செய்திருந்தபடி அந்த மேற்கூறிய பெண்களின் மாமியார்களும் கணவன்களும் ஆவேசத்துடன் ஓட்டமாக ஓடிவந்து, "பல நாளைய திருடன் ஒரு நாளில் அகப்பட்டுக்கொள்ளாமலா போவான்?...ஒகோ! கோயிலுக்கும், அரசமரப் பிரதக்ஷணத்திற்கும், நவக்ரகப் பிரதக்ஷணத்திற்கும் போவதாகக் கூறிவிட்டு இந்த வேஷக்காரக் கள்வனிடமா வந்து நாட்டியமாடுகிறீர்கள்? புத்திகெட்ட மடையன்! கட்டிய பெண்டாட்டியை வைத்துப் படைக்கக் கையாலாகாத கம்மனாட்டியாகிய நீ, ஊர்ப் பெண்களை எல்லாம் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிக் குடிகெடுக்கும் கபடச்சாமியாராய் வாழ உனக்கு வெட்கமில்லையா! வேஷக்கள்ளனே! மோசக்காரனே!" என்று அவனைத் தாறுமாறுமாகத் திட்டியபடியே அங்குள்ள பஜனை சாமான்கள், பூஜாத்ரவ்யங்கள் எல்லாவற்றையும் வாரி இறைத்து த்வம்ஸம் செய்து தம் மக்கள் மனைவிகளை தடார்புடார் என்று அடித்து தலை மயிரைப் பிடித்து இழுத்துச் சென்றார்கள்.

ஐயோ பாவம்! ஆனந்தமயமான பக்தி மந்திரமாய் விளங்கிய பஜனைக் கூடம் அடுத்த க்ஷணத்தில் யுத்தகளமாய் மாறிவிட்டது என்றால் மதுசூதனனின் மனம் எப்படித்தான் கொதிக்காது? கையிலிருந்த தம்பூராவும் சப்ளாவும் அப்படியே நழுவி விழுந்தன.

இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, எல்லோரிடமும் வணக்கமாகக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டும், சமாதானம் செய்துங்கூட சண்டையும் பெருங்கூச்சலும் அடங்கவே இல்லை. இன்னும் க்ஷண நேரத்தில் பகவானின் படமே எகிறிவிடும்போல் தோன்றியதால் படத்தருகில் சென்று படங்களை இரு கைகளாலும் அணைத்துக் கொண்டபடியே,

"என்னப்பனே! ஜகந்நாதா! ஜகத்ரக்ஷகா! இதென்ன சோதனை? என்னை செய்த சோதனையெல்லாம் போதாதா! இன்

னுமுமா பாக்கி வைத்திருக்கிருய்? உன்மீதாணையாக நான் பரிசுத்த இதயத்துடன் உன்னை பஜிப்பதை நீயுமா அறியமாட்டாய்? ஒரு பெண்ணையும் நான் மனதால் கூடப் பார்த்ததில்லையே! உன் பக்தி ப்ரஸாதத்தைப் பகிர்ந்துகொள்ளும் ஆனந்தத்துடன் வந்துள்ள என் தாய்மார்களுக்கு நீ இப்படியா தண்டனை கொடுப்பது?

கருணாநிதே! உன் கருணைக்கு இது அழகாகுமா! உன் தயாள குணத்திற்கு இது அடுக்குமா! உன்னால் படைக்கப்பட்ட ஆண் பெண்களுக்கு உன்னை மனப்பூர்வமாக பஜித்து இன்புற ஸ்வதந்திரம் கிடையாதோ! அதற்குக்கூடவா நீ அடிமைகளாகச் செய்துவிட்டாய்? என்னப்பனே! வேண்டாம்; வேண்டாம். என் பொருட்டு அந்த உத்தமிகளுக்கு இத்தகைய கடுந் தண்டனையும், சித்திரவதையும் வேண்டாம். என்னைக் காக்காவிடினும் உன் பக்தர்களாகிய அம்மாதரசிகளைக் காப்பாற்று; காப்பாற்று...காப்பாற்று கைவிடாதே...

ராகம் : ப்யாக் - ஆதி தாளம் :

சோதனையோ ராமா! உன் சந்நிதியில் (சோ)
பாதமேகதி என்று பணிந்திடும் பக்தர்களை
வாதனைசெய்வது நீதியோ! முறையோ! (சோ)
பக்தருள்ளம் பதைக்கப் பார்ப்பதுனக்கழகோ!
பக்தருள்ளம் பதைத்தால் பெரும்பழி உனக்கன்றோ!
பக்தருள்ளம் குளிரக் கருணைபுரியும் பாதா!
பக்தருன் நிழலன்றோ! பாரளந்த பரனே! (சோ)

என்ற கவிமலர் கண்ணீர் பெருக மெய்ச்சிலிர்க்க அவன் வாயினின்றும் வெளிப்பட்டது. உண்மையில் பக்தர்களின் உள்ளம் உருகிக் கண்ணீராய் ஓடியது. "ஆஹா! ஆஹா!" என்று சிரக்கம்பம் செய்தார்கள்.

இதற்குள் சில பிரமுகர்களும், பெரியவர்களும் சண்டையை விலக்கிச் சமாதானத்தை நிலவச்செய்ய அரும்பாடுபட்டார்கள். சிலர் மதுசூதனனைத் திட்டிக்கொண்டும், சிலர் பேசாமலும், போனார்கள். வெங்கலக்கடையில் ஆனை புகுந்ததுபோலிருந்த சப்தம் கொஞ்சம் குறைந்ததெனினும் மதுசூதனனின் உள்ளத்தில் இரைச்சலிட்டு ஹதஞ் செய்யும் சங்கடம்மட்டும் நிற்கவில்லை.

இதற்கிடையில், மதுசூதனனின் மனைவியும், மாமியாரும் சற்றும் பயமோ பக்தியோ இல்லாது, அவன் பஜனை செய்யும் முக்யமான

ராமர் படத்தையும், ராதாகிருஷ்ணன் படத்தையும் வெடுக்கென்று எடுத்துக்கொண்டு "இது இருந்தால்தானே இந்த கூத்தடித்துக் கொண்டு சன்யாசிக் கட்டையைப்போலிருக்கிறீர்கள். இது இல்லாவிட்டால் என்ன செய்வீர்கள் பார்க்கலாம்" என்று கூச்ச லிட்டுக்கொண்டே வீட்டிற்கு ஓடிவிட்டார்கள்.

அந்தோ! உயிரையே கவ்விக்கொண்டு ஓடும் எமபட்டர்களைப் போல் மதுசூதனனின் கண்ணுக்கு அந்த ராக்ஷஸிகள் தோன்றினார்கள். "ஐயோ! ஐயோ!" என்று அலற்றியவாறு பின்னால்ஓடினான்; துடித்தான்; கதறினான். "என்னுயிரைவேண்டுமாயினும் கொண்டு போங்கள். என் ஆனந்தமூர்த்திகளைக் கொடுத்துவிடுங்கள்; என் இன்பவள்ளல்களைக் கொடுத்துவிடுங்கள். என்னுயிர் போய்விடும். பூலோக நாரதர் என்றும், வால்மீகி என்றும் புகழப்பட்ட தியாக ராஜருக்கு அண்ணன் சத்ருவாயமைந்ததுபோல் எனக்குக் கட்டிய மனைவி பெரும் பாதகியாய் அமைந்தாளே! ஏ மூதேவிகளே! என் ஸ்ரீதேவியைக் கொடுத்துவிடுங்கள்" என்று கதறிக்கொண்டே தெருவோடு ஓடினான். பக்தியின் பெருக்கில் மானம் அவமானம் கூட அவனுக்குத் தெரியவில்லை.

வயது முதிர்ந்த பெரியவர்கள் அவனைச் சமாதானப்படுத்தி ஹிதோபதேசம் செய்யத் தொடங்கி, "அப்பா! இத்தனை சிறிய வயதில் நீ கேவலம் ஓர் சன்யாசிபோலிருப்பது சரியில்லை. கடமை என்று கல்யாணம் செய்துகொண்டதுபோல் அவளை மகிழ்வித்து ரக்ஷிப்பதும் உன் கடமையில்லையா! கடமையில் நீ தவறு செய்து கொண்டே பகவானை என்னதான் பஜித்தாலும் அது பிரயோசனமில்லை. இதைச்சொன்னால், "விவேகானந்தர் இல்லையா! பரமஹம்ஸர் இல்லையா! மகாத்மா காந்தியில்லையா! அரவிந்தரில்லையா?" என்று கூறுகிறாய். அவர்களின் பாத தூளிக்கும் நாம் மகிமை கொடுத்து பக்தி செய்வது கடமைதான். ஆனால் அந்த பாததூளியை மிதிக்கும் யோக்கியதைகூட நமக்கு இல்லாதிருக்கையில் அவர்களைப்பற்றி உவமை கூறுவது தர்மமில்லை.

அவர்களில் யாராவது தம்தம் கடமைகளைக் கை நழுவவிட்டார்களா என்று யோசித்துப் பாரு. இல்லவே இல்லை. தமது கடமைகளையும் செய்து, உலகத்திற்கும் உத்தமமான தொண்டாற்றும் புண்ணியமூர்த்திகளாக விளங்குவதுபோலவும் இருக்க வேண்டும். மனைவியைத் திருப்தி செய்... அவளைத் தொட்டு தாலி



183042

கட்டிவிட்டாய். இனி அவளைக் கதறவிடாதே. வீட்டிற்குப்போ! மதுசூதனு! இதென்ன சித்தப் பிரமை....வா...வாப்பா! வீட்டிற்கு வா! உன்னால் பிற பெண்களுக்கு என்ன ஆபத்து பார்த்தாயா?" என்று ஏதேதோ சொன்னார்கள்.

பிறகு என்னதான் சொல்வான்? தன்னால் ஊர் பெண்களுக்கு நேர்ந்த விபத்தும் பரிதாபமும் அவன் கண்முன்பு தெரிந்தது. தலையில் கையை வைத்தபடியே நடைச்சவம்போல் பஜனைமடத்திற்கே வந்து குப்புறப்படுத்துக் கொண்டான். கதறினன்; புரண்டான். அழுது அழுது முகமே வீங்கிப்போயிற்று. இத்தனை அல்லல்படுவதற்கா தான் பிறந்தது என்று நினைக்கும்போது அவன் உடம்பு அப்படியே எரிவதுபோல் தோன்றியது.

எது எப்படியிருப்பினும் காலதேவதையின் ஆட்சியில் சுழலும் சக்கரம் ஓய்ந்திருக்குமா! அதன் கடமையில் அது சென்று மாதங்கள் ஒன்றிரண்டாகிப் பல மாதங்களைக் கடத்தி வருடம் மூன்ருகி விட்டது.

ஆனல் மதுசூதனனின் பஜனையும், பூஜையும் என்னவோ நிற்கவே இல்லை. அது பழய இடத்தைவிட்டு மாறியது. நாம் முன்பு தெரிவித்த ஜமீந்தார் தம் சொந்த ஜமீன் ஊருக்கே மதுசூதனனை குடும்பத்துடன் அழைத்துச் சென்று தனி பஜனைகோயிலும் நிர்மாணித்துக் கொடுத்தார்.

மதுசூதனன் பஜனை செய்யும் வேளை தவிர மற்றபோது தமது கிராமத்து வரவு செலவு கணக்கு பார்க்கும் வேலையும் கொடுத்து மாதச் சம்பளமும் கொடுத்து வந்தார். தாய் தகப்பனுரைக் காப்பாற்றும் பொருட்டும், பெரியவர்களின் வற்புறுத்தலுக்காகவும் இந்த நிர்ப்பந்த வேலைக்கு உடன்பட்டு வந்து சேர்ந்தான்.

அன்று பஜனையை வெறுத்து நிர்த்தூளியாக்கிய அவன் மனைவி இன்றும் அதே நிலைமைக்கு ஒரு படிக்கட்டும் தாழாமல் இருக்கிருள். ஆனல் இரண்டு வயதுப் பெண்குழந்தைக்குத் தாயாராகி விட்ட கர்வமும் சேர்ந்து திமிருடன் வாழ்க்கை நடத்துகிருள்.

ஜெமீன் கிராமத்தைச் சேர்ந்த பஜனை கோயிலாகையால் ஜமீன் குடியானவர்கள் பக்தி சிரத்தையுடன் பகவானுக்குப் பழம் கற்பூரம், தேங்காய் முதலிய திரவ்யங்கள் கொண்டு சமர்ப்பிப்பதும் விளக்குக்கு நெய்யும், நல்லெண்ணெயும் கொண்டு கொடுப்பதுமாகப் பஜனையில் கலந்துகொள்ளவும் ஆரம்பித்தார்கள்.

மதுசூதனனின் மனைவியின் அல்பத்தனமும், துர்க்குணமும் அவனுக்கு லவலேசமும் பிடிப்பதில்லை. பகவானுக்குக் கொளுத்தும் கற்பூரம் முதல் தாம்பூலம் முதலிய சகல சாமான்களையும் திருடித் திருடி சில்வானம் விற்று பாபத்தை மூட்டை கட்டும் பெரும் பாதகம் அவனுக்குச் சற்றும் தெரியாது. விளக்கு எரிந்தால் சட்டென்று ஊதி யணைத்துவிடுவாள். பெருமாளுக்கு அதுவேண்டும்; இது வேண்டுமென்று தானே ஜமீந்தார் வீட்டுப் பெண்களிடம் யாசிப்பது. இம்மாதிரி பொருள்களைச் சேர்த்துத் தன் தாயார் வீட்டிற்குக் கொடுத்து வந்தாள்.

நாளடைவில் இந்த அக்கிரமம் மதுசூதனனுக்குத் தெரிந்து விட்டது. அவனால் சகிக்கமுடியாது மனைவியைக் கண்டித்து 'இனி இம்மாதிரி செய்தால் சொல்லாமல் சன்யாசம் வாங்கிக்கொண்டு போய்விடுவேன். பிறகு என்மீது சொல்வதில் பயனில்லை' என்று மிரட்டி அடித்துவிட்டான்.

அவ்வளவுதான். வீட்டில் அனர்த்தம் பிறந்துவிட்டது. அவன் மீதுள்ளகோபத்தில் அந்த உலகமறியாத சிசுவைப்போட்டு அடித்து இம்சை செய்வதும், பாத்திரம் பண்டங்களை தடார்புடார் என்று பந்தடிப்பதும், சதா அழுவதும், வசைமாரி பொழிவதும், உப்பு போட்டால் புளி இல்லை; புளி போட்டால் உப்பில்லை; இரண்டும் அதிகமாகக் கொட்டிவிடுவது. சோற்றைக் களிபோல் செய்வது, காந்த வைப்பது, அரிசியாய் வைப்பது இம்மாதிரி ரோதனைகள் பல விபரீதமாக ஆரம்பமாயின.

ஏற்கெனவே உள்ள மாமியார் மாட்டுப்பெண் சண்டை ஒரு விநாடிகூட ஓய்ந்தபாடில்லாது வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்தது. ஒற்றுமை, சாந்தம், அன்பு முதலியவைகள் தேய்பிறைச் சந்திரனைப்போல் தேய்ந்து வந்தன. அமாவாசைக் கருக்கல் போல் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இருள் சூழ்ந்திருந்தது. பௌர்ணமியின் பிரகாசம் மதுசூதனனின் உள்ளத்தில் பக்திப் பெருக்காய் ஜ்வலித்தது. வானத்தில் மேகக் குழப்பமும், நிர்மலமும் மாறிமாறித் தோன்றுவதுபோல் மதுசூதனன் உள்ளத்தில் குடும்பக் குழப்பமும் பக்தியின் நிர்மலமும் மாறிமாறித் தோன்றின.

விரக்தியின் முதிர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க பக்தியின் பெருக்கால் சிற்சில சமயம் அவனை யறியாது மணங்கமழும் கவிமலரும் உதிர்ந்தது கண்டு அவன் உள்ளம் சந்தோஷமலராய் விகசிதமுற்றது.

அவனுடைய சங்கீதத்தின் மேன்மை தினேதினே விருத்தியாகிப் பலருடைய உள்ளத்தையும் காந்தம்போல் கவர்ந்து இழுத்தது. எத்தனை எதிர்ப்பு முன்பு இருந்ததோ அத்தனைக்கத்தனை இப்போது பக்தக்கூட்டம் நிரம்பியதால் மதுசூதனனின் சஞ்சலம் சிறுகச் சிறுக மாறி ஆனந்தமயமாய் நிரம்பியது. எனினும் இந்த பாசபந்தங்கூட இல்லாது தனித்து பகவானைப் பாடி பஜித்து இன்புறும் காலம் என்று வரும் என்ற ஏக்கமும் ஊடே ஊடே வாட்டியது. அம்மாதிரி நினைக்கும்போது எதிர்பார்த்த ஏக்கத்தின் பெருமூச்சு பிரமாதமாகப் பீறிக்கொண்டு வந்தது. கண்களில் நீர்த்துளிகள் உதிர்ந்தன. உடம்பு வெயர்வை வெள்ளமாய்ப் பொங்கியது.

## 29

எதிர்பார்த்த ஏக்கத்தின் பெருமூச்சு பிரமாதமாகப் பீறிக்கொண்டு வந்தது. கண்களில் நீர்த்துளிகள் உதிர்ந்தன. உடம்பு வெயர்வை வெள்ளமாய்ப் பொங்கியது. எமன்போல் இரைச்சலிட்டுக்கொண்டுவரும் கூட்ஸ் வண்டியின் ஓசையைக் கேட்டதும் உயிர் நீங்கிவிட்டதென்றே கூறலாம்.

விலாஸினியின் உடல் கட்டைபோல் விரைத்தது. பிறகு எத்தனை நாளாயிற்று என்று அவளுக்கே தெரியாது. அவள் கண்ணைத் திறந்து பார்க்கும்போது ஒரு விசாலமான அறையில் படுத்திருந்தது கண்டு அவளுக்கு பிரமிப்பும், கலவரமும் உண்டாயின.

நான் இறந்துவிட்டது உண்மை. மேலுலகத்திலும் இத்தகைய கட்டிடமும், சுவருந்தானு இருக்கும்? முன்பு இறந்தவர்கள் எல்லாம் இங்கிருப்பார்களா!......என் தாய்......என்னரிய தாயார்...என் அண்ணன்...என் வேலைக்காரக் கிழவி...இங்கிருப்பார்களா!...இருப்பார்களா !" என்று வாய்விட்டுப் பெரிதாகக் கத்திவிட்டாள்.

நாற்புறமும் கண்ணீர் பெருக மருளமருள விழித்தாள். இவளருகில் சாந்தமே உருவெடுத்ததுபோல் ஒரு சாயபுவும் அவர் மனைவி பீபியும் வருந்திய முகத்துடன் இவளைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தார்கள். இவள் கூச்சலிடுவதைக் கேட்டதும் கண்ணீர் உதிர்ந்தபடியே அந்த பீபி, விலாசினியை இறுகப் பிடித்து

அணைத்துக்கொண்டு "அம்மா! நீ தெளிந்து எழுந்திருப்பதற்காகவே நாங்கள் மூன்று நாட்களாய் காத்திருக்கிறோம்...இதோ! என் கணவரை உனக்குத் தெரிகிறதா! பாரம்மா!' என்று கூறும்போது அவள் தொண்டையை துக்கம் அழுத்தியது.

விலாஸினி பீபியை விறைக்க விறைக்கப் பார்த்தாள். பிறகு சாயபுவை உற்றுக் கவனித்தாள். "சாயபூ!....வண்டி யோட்டிய சாயபுவா!...சாயபூ!...சாயபூ! நீங்கள்கூட இறந்துவிட்டீர்களா?' என்று பதறியவாறு கேட்டாள்.

இதைக் கேட்ட சாயபுவின் விழிகள் அருவிபோலாகிவிட்டன. "அம்மணீ! நானும் சாகவில்லே; நீங்களும் சாகவில்லே. ஆண்டவன் நம்மை இந்த உலகில்தான் வைத்திருக்கிறார். நீங்கள் இவ்வுலகில் இன்னும் அநேக காலம் இருக்கவேண்டும் என்பதுதான் அல்லாவின் சித்தம்....

விலா:—என்ன!...என்ன!....நான் இறக்கவில்லையா!...என் மீது வண்டி ஏறி என்னைச் சட்னி செய்துவிட்டதே!...நான் எப்படிப் பிழைக்கமுடியும்?...பொய்...பொய் சொல்லாதே! சாயபூ.... நீயுந்தான் இறந்துவிட்டாய். சொல்லு...சொல்லு...உண்மையைச் சொல்லு.

பீபி:—அம்மணீ! வண்டி உங்கள் மீது ஏறி நசுங்கி இருந்தால் நீங்கள் எப்படிப் பேசமுடியும்? உங்களைக் காப்பாற்றும் பொருட்டு அல்லா என் கணவரை தூது அனுப்பி சமயத்தில் காப்பாற்றினர். இனி நீங்கள் பயப்படவேண்டாம்.

விலா:—என்ன!...சாயபு என்னைக் காப்பாற்றிவிட்டாரா! ஐயோ! எனக்கு உபகாரம் செய்வதாக எண்ணிப் பெரும் அபகாரம் செய்துவிட்டீரே! ஐயையோ! நீங்கள் எப்படி அங்கு வந்து முளைத்தீர்கள்?

சாயபு:—அம்மணீ! சற்று சாந்தமடைந்து ஆயாஸம் தீர்த்துக் கொள்ளுங்கள்; பிறகு பேசலாம்...

விலா:—முடியாது...முடியாது. சொல்லும்...சொல்லும்....

சாயபு:—வண்டியில் உங்கள் நிலைமையைக் கண்டு நான் பரிதவித்தேன். நீங்கள் உங்கள் உணர்வற்றுத் தாறுமாறுமாக நடந்து செல்வதையும், மூட்டைகளைத் தூக்கிச் சென்ற போர்டரையும் சாமான்களையும் நீங்கள் சற்றும் கவனிக்காது போனதையும் பார்த்த உடனே எனக்குச் சந்தேகம் உண்டாகியது.

என் சகா ஒருவனிடம் வண்டியை ஒப்புவித்துவிட்டு ப்ளாட்பாரம் டிக்கட்டு ஒன்று வாங்கிக்கொண்டு உள்ளே வந்து, உங்கள் அபிப்ராயந்தான் என்ன? நீங்கள் என்னதான் செய்கிறீர்கள்? என் பதையறிய வெகு ஜாக்ரதையுடன் கவனித்து வந்தேன். நீங்கள் டிக்கட்டும் வாங்காது சாமான்களையும் கவனிக்காதிருந்ததால் எனது சந்தேகம் அதிகரித்தது.

நீங்கள் சோதாக்களுக்குப் பயந்து இருட்டான இடத்துக்குச் சென்றதும் நானும் பின்தொடர்ந்தேன். அப்போதே எனக்கு உங்கள் செய்கையில் பெரும் பயமும் சந்தேகமும் உண்டாயின. நீங்கள் தண்டவாளத்தில் விழுந்தவுடனே நான் காற்றாய் பின்னாலேயே ஓடிவந்து தடுக்க முயன்றேன். என் கால் லயனிலிருக்கும் கம்பியில் தடுக்கி விழுந்துவிட்டேன்.

பின்னர் சமாளித்துக்கொண்டு ஓடிவந்து உங்களை ஒரே பாய்ச்சலில் தூக்கிவந்தேன். எங்கே அதிகாரிகளும் மற்றவர்களும்பார்த்து விடுவார்களோ என்று பயந்தேன். அதற்குத் தகுந்தாற்போல் ஒரு கூலி பார்த்துவிட்டான். அவனிடம் எனக்கு நீங்கள் கொடுத்த ரூபாயைக் கொடுத்துச் சமாதானம் செய்து பின்னர் உங்களை அவன் உதவியினாலேயே என்வண்டியிலேயே ஏற்றி என்வீட்டிற்கே கொண்டுவந்தேன். நீங்கள் தண்டவாளத்தில் விழும்போதே மூர்ச்சையாகிவிட்டீர்கள். பிரக்ஞையே இல்லை. என் மனைவிக்கு ஒரு பச்சிலை மருந்து தெரியும்; அதைக்கொணர்ந்து கொடுத்தாள். அதிலும் தெளியவில்லை. நீங்கள் தெளிந்ததும் சாயபு வீட்டிலிருப்பதை ஒருவேளை எங்கே வெறுப்பீர்களோ என்று என் மனைவி அஞ்சினாள். ஆபத்திற்குப் பாபமில்லை என்றும் சிகிச்சை செய்து தெளிய வைக்க வேண்டியதுதான் முக்கியமென்றும் நான் கூறினேன்.

ஆனால் என் மனைவி மட்டும் அதற்குச் சம்மதிக்காமல் உங்களை ஆஸ்பத்திரியில் விடவேண்டுமென்று சொன்னாள். இதற்குள் ஒரு சாமியார் இந்த ஊரில் வந்திருப்பதை யறிந்து அவரிடம் சேர்த்து விடலாம் என்று நான் கூறினேன். அதை என் மனைவியும் ஆமோதித்தாள். என்னுடைய சிறிய குடிசையில் இடமும் இல்லை; ஆதலால் சாமியாரிடம் ஒப்புவித்தேன். அவரது ஆச்ரமத்தில் இது ஒரு விடுதிதான். அவரும் நானும் சேர்ந்து செய்த சிகிச்சையில் நீங்கள் குணமாகிவந்தீர்கள். அதோ சுவாமிகளும் வந்துவிட்டார்..." என்று கூறியபடியே சாயபுவும் பீபியும் நகர்ந்துகொண்டார்கள்.

விலாஸினிக்கு இந்த வரலாற்றைக் கேட்டதும் ஒருபுறம் கோபமும் ஒருபுறம் தன்னைப் பிடித்த பீடை விடவில்லையே என்கிற ஆத்திரமும் துக்கமும் பொங்கி வந்தன. கடகடவென்று பல்லைக் கடித்தாள்; அழுது புரண்டாள். சுவாமிகளையும் பார்க்கப் பிடிக்காதவளாய் முகத்தை மூடிக்கொண்டாள்.

இதைக்கண்ட சுவாமிகள், புன்னகை புரிந்துகொண்டே, "அம்மா குழந்தாய்! என்மீது கோபமா! அல்லது சாயபுவின்மீது கோபமா! அன்றி சாயபுவால் காப்பாற்றப்பட்டு அவர் வீட்டிலிருந்தோமே என்கிற பயமா?...

என்று முடிப்பதற்குள், விலாஸினி ஆத்திரத்துடன் பேசத் தொடங்கி "சுவாமிகளே! போதும்; போதும். உங்கள் விகல்ப வார்த்தை. சாயபு என்றும், இந்துவென்றும் பிரித்து வித்தியாசத்தைக் கிளப்பிப் பேசி அவர் மனத்தை நோகச் செய்ய நான் அப்படிப்பட்ட அடிமுட்டாள் இல்லை. இந்துக்களும் முஸ்லீம்களும் ஆதிமுதல் எவ்வளவோ மேன்மையான ஐக்கியத்துடன் வாழ்ந்து வந்ததற்கு எத்தனையோ சரித்திர ஆதாரங்களும், பிரத்யக்ஷத் தோற்றங்களும் எனக்குத் தெரியும். நான் படித்தும் பார்த்துமிருக்கிறேன்.

இன்றும் ஸ்ரீரங்கப்பட்டணம், திருச்சினப்பள்ளி உச்சிப்பிள்ளையார்கோயில், நாகூர் முதலிய இடங்களுக்குப் போனல் அந்த ஒற்றுமையின் அருமை தெரியும். துலுக்க நாச்சியார் உறையூரில் கோயில் கொண்டிருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். பூர்வம் பெரிய பெரிய மகான்கள் இந்துக்களும் முஸ்லீம்களும் கோயில்களுக்கு தர்மகாரியம் செய்திருப்பதும் இன்னும் அனேக கோயில்களில் அவைகள் இன்றும் நடப்பதும் பொய்யாகாது.

இந்த மித்திரபேதத்தைக் கிளப்பி என்னைப் பழிக்கவேண்டாம். அவர் செய்தது அவருக்குப் பெருமையாய் இருக்கலாம். எனக்குப் பெரும் தீங்கிழைத்ததுபோலாகிவிட்டது. நான் உலகத்தில் உயிர் வாழ விரும்பினல்தானே நீங்கள் சொல்வது எனக்குப் படும். என்னை ஏன் காப்பாற்றவேண்டும்?"...என்று கடுமையான தொனியில் கூறினள்.

இது கேட்ட சுவாமிகள் கடகடவென்று நகைத்து, "ஓகோ! ஏதேது? இந்து முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றி நீ பிரமாதமாய் லெக்சர் செய்வாய்போலிருக்கிறதே. எனக்கு அது விஷயத்தில் மிக்க சந்தோஷம். இருப்பினும் இத்தனை சிறு வயதில் நீ இப்படிச் சாக

நினைப்பது சரியில்லை. அதோடு உன்னுயிர் உனக்குச் சொந்தமேது? அது ஆண்டவனுடையது. அதை மாய்க்க நினைத்ததை அரசாங்க மறிந்தால் உன்னைக் கைது செய்துவிடுவார்கள் தெரியுமா!

குழந்தாய்! அது கிடக்கட்டும். உனக்குள்ள மனக்குறைகள் எத்தனையோ இருக்கலாம். அதற்கெல்லாம் பரிகாரம் தேடிக் கொள்ளாமல், சாவதற்குத் துணிந்துவிட்டால் லாபம் என்ன? உன் குறையை என்னிடம் தெரிவித்தால் என்னால் ஏதாவது செய்ய முடிந்தால் நான் கட்டாயம் செய்து வைக்கிறேன்'' என்றார்.

விலாஸினிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தன் சரித்திரத்தைச் சொல்லவும் முதலில் வெறுத்தாள்; வெட்கினாள்; குழம்பினாள். ஆனால் சொல்லாமல் சாத்யப்படவில்லை. மடமடவென்று ஆதியோடந்தமாய் அம்மூவரிடமும் கூறி கோவென்றுக் கதறியபடியே "இனி எனக்கு என்ன வழி செய்யப்போகிறீர்கள்? நான் அரை க்ஷணங்கூட இவ்வூரில் இருக்கமாட்டேன். அந்த மகாநுபாவரின் கண்ணில் படமாட்டேன். என் ஒண்டிக்கட்டையின் வாழ்க்கையில் பயங்கரமும் விபரீதமும் தோன்றுது எப்படி நடத்தமுடியும்? என் விதி எப்படி இன்னும் ஆட்டப்போகிறதோ, தெரியவில்லையே!' என்று கதறினாள்.

இந்த விஷயங்களைக் கேட்டதும் ஸ்வாமிகளைத் தூக்கிவாரிப் போட்டது. "ஐயோ! அந்த பெண் இந்த ஸௌந்தரியா!"...என்று ஒரு விநாடி தம்பித்தார். "எப்படிப் பதில் பேசி இவளைத் தேற்றுவது?'' என்று தோன்றுது மனம் குழம்பியது. இவள் வயதில் சிறியவளாயினும் அறிவில் பெரியவளாகவே இருக்கிறாள். இம்மாதிரியான நிலைமையில் இருவரும் வெகு தொலைவில் பிரிந்திருப்பதுதான் நலம். உம்...ஐயோ! பாவம்! அவன் கண்ராவியையும் காண முடியவில்லை. இருவருடைய புலம்பலும் என் காதில்தானா விழ வேண்டும்?' என்று சற்றுக் கலங்கினார். "அம்மா! உனது நோக்க மறிந்தேன். உன் சரித்திரம் என் உள்ளத்தை உருக்குகிறது. நீ பயப்படுகிறபடி எவ்விதமான ஆபத்தும் உன்னை யணுகாதவாறு உன்னைக் காப்பதற்கு நானும் இந்த சாயபுவும் பீபியும் இருக்கிறோம். கடவுளை நம்பி ஏதேனும் ஒரு நல்ல தொழிலைச் செய்துவா. உன் தகப்பனார் விடுதலையாகி வந்ததும் அவருடன் நீ இருக்கலாம். என்ன சொல்கிறாய்? உன்னிஷ்டப்படியே உன்னை நான் வெளியூருக்கு அனுப்பிவிடுகிறேன். உன் வாழ்நாளை நல்ல காரியத்தில் அர்ப்பணம்

செய்து இன்புறு" என்று வாழ்த்தினர்.

விலாஸினியின் புலம்பல் நிற்கவே இல்லை. "நல்ல காரியமா! இன்புறுவதா? அத்தகைய காரியம் எது? சொல்லுங்கள்" என்ருள்.

சாய:—அம்மணீ! என் சகோதரி ஒருத்தியின் வாழ்க்கையிலும் இதுபோன்று பரிதாபம் நேர்ந்து கணவன் இறந்துவிட்டான். அதன் பிறகு அவள் மறுமணத்திற்குச் சம்மதிக்காமல் தன் சொந்த பணத்தைக்கொண்டு ஒரு பள்ளிக்கூடம் நடத்திவருகிருள். எந்த தானத்திலும் சிறந்தது கல்விதானம் என்பார்களல்லவா!

அதிலும் எங்கள் ஜாதியில் படுதா, படுதா என்று கூறிப் பெண்களில் அனேகருக்குக் கல்வியறிவு இல்லாமலேயே பாழாக்கிவிடுகிருர்கள். அவர்களின் இருள் மூடிய கண்களை, கல்விச் சூரியனை உதிக்கச்செய்து, திறந்துவிட்டு அவர்களும் இவ்வுலகிலுள்ள நல்ல நூல்களைப் படித்து அறிவு வளர்ச்சிபெற்று பண்டிதைகளாகச் செய்யவேண்டுமென்பது என் சோதரியின் விருப்பம். அதற்காக அந்த கோஷாப் பெண்களுக்கு மட்டும் ப்ரத்யேகமாய் பாடசாலை வைத்து நடத்திவருகிருள். நான் என் தங்கையிடம் தங்களை அழைத்துச் செல்லுகிறேன். உங்கள் சங்கீதத்திலும் கல்வியிலும் நீங்கள் ஒரு உபாத்தியாயினியாயிருந்துகொண்டு இன்பமாய் வாழ்க்கை நடத்தலாம். அங்கும் ஒரு கோயில் இருக்கிறது. உங்கள் பொழுதுபோக்கிற்கான சாதனங்களைக் கை வேலைகளைக்கொண்டு செய்துகொள்ளலாம். என்ன சொல்லுகிறீர்கள் ?—என்ருர்.

விலாஸினிக்கு இந்த விஷயம் மிகவும் மனத்திற்குப் பிடித்தது அவளையறியாது ஒரு தெம்பும் சந்தோஷமும் முகத்தில் ப்ரகாசித்ததைக் கண்ட மூவரும் மகிழ்ந்தார்கள். விலாஸினியின் சம்மதத்தைப் பெற்ற பிறகு அன்றே அவளை சாயபு தம்பதிகள் தாமே நேரில் அழைத்துச்சென்று சாயபுவின் சகோதரியாகிய மும்தாஜ் பீகத்தினிடம் அவளை ஒப்புவித்து, அவளுக்கு ஓர் வேலையும் வாங்கிக் கொடுத்து தனி விடுதியில் ஒரு வேலைக்காரியின் துணையில் வைத்து விட்டார்கள்.

மும்தாஜ் பீகமும் ஒரு வைராக்கிய பிம்பம். விலாஸினியும் ஒரு விரக்திப் பதுமை. இருவரும் ஒன்றுகூடியதில் இருவருடைய மனமும் தம்மை யறியாது பொங்கிக் களித்தது. இருவரும் தமக்குத் தக்க துணை" என்று மனத்தில் எண்ணினர்கள்.

தேனும் பாலும்போல் அவர்களுடைய மனது ஒற்றுப் போய்

விட்டது. விலாஸினியின் இதயத்தில் ஒருபுறம் துக்கம் புகைந்து கொண்டிருப்பினும் ஒருபுறம் சாந்தியும், தைரியமும் நிலவின. இருவருக்கும் தம்மையறியாத ஆனந்தம் உண்டாகியது. பகவானின் அற்புதமான லீலையை எண்ணி மனம் லயித்துப்போய் வியப்புக் கடலாடியது.

## 30

தம்மையறியாத ஆனந்தம் உண்டாகியது. பகவானின் அற்புதமான லீலையை எண்ணி அதில் மனம் லயித்துப்போய் வியப்புக்கடலாடியது. மெய்ம்மறந்துப் பாடி பஜனை முடிந்தபிறகு எல்லோரும் பிரஸாதம் பெற்று வீடு சென்றனர்கள். மதுசூதனன் மட்டும் அங்கு தம்பித்து உட்கார்ந்திருந்தான்.

அச்சமயம் ஜெமீந்தாரின் காரியஸ்தன் மதுசூதனனின் அருகில் வந்து, "ஐயா! உம்மை ஜெமீந்தார் கையோடு அழைத்துவரச் சொன்னார்" என்றான். உடனே எழுந்து அவனுடன் ஜெமீந்தாரிடம் போய் பயபக்தியுடன் நின்றான். தன் வரவு செலவு கணக்கில் ஏதாவது தப்பிதம்கண்டு அதற்காகக் கண்டிக்கக் கூப்பிட்டாரோ!" என்று சற்று பயம் தோன்றியது.

ஆனால், தான் தன் மனச்சாட்சிக்கு விரோதமின்றி வெகு சரியாய் வேலை செய்திருப்பதால் பயமும் அகன்று தைரியமாகவே நின்றான். ஜெமீந்தாரும், "வாப்பா! உட்காரு. உன்னுடைய பக்திப் பெருக்கும், சங்கீத வன்மையும், சாஹித்ய லக்ஷணமும், ராக சுத்தமும், தாளபந்தாவும், மக்களைப் பரவசப்படுத்துகின்றன.

உன் சங்கீதத்தைக் கேட்டதுமுதல் என் மனைவியும் மக்களும் அதிலேயே பூரித்து லயித்துத் தோய்ந்துபோய் விட்டார்கள். உனக்கு இனி இந்த கணக்கெழுதும் வேலை வேண்டாம். என் பெண்கள் உன் பாட்டுக்களை உன்னிடமே கற்றுக்கொள்ள மிகவும் ஆசைப்படுகிறார்கள். ஆதலால் நீ அவர்களிருவருக்கும் பாட்டுச் சொல்லிக்கொடு. மாதம் 50 ரூபாய் சம்பளம் தருகிறேன். பஜனை கோவிலையும் உனக்கே சொந்தமாக்கிவிடுகிறேன்" என்றார்.

இதைக்கேட்ட மதுசூதனனுக்கு முன்பொருதரம் ஸ்ரீ தியாக ராஜரின் சரித்திரம் நினைவுக்கு வந்ததுபோல், இப்போதும் அந்த மகானின் சரித்திரமே நினைவில் தோன்றியது. தான் ஆத்மார்த்தக மாய் பகவானுக்குச் சொறியும் சந்தோஷமலர் போன்ற கவிகளை கேவலம் பணத்திற்காக விற்று வயிறு வளர்க்கும் கருவியாக்கி விடுவதா என்ற எண்ணம் பளிச்சென்று தோன்றியது.

இதற்கு அவன் உள்ளம் சம்மதிக்கவே இல்லை. இந்த ஒரு காரணம் மட்டுமில்லாமல் இன்னொரு காரணமும் பெரிதாக மனத்தில் எழுந்தது. அதாவது, விலாஸினிக்குப் பிறகு பெண்கள் முகத்தையே கண்ணால் பார்க்காது சன்யாசியாயிருக்கும் தனக்கு பெண்களின் முன்பு உட்கார்ந்து பாட்டு வாத்தியார் வேலை செய்வது அவன் மனத்திற்கு முற்றிலும் வெறுப்பைக் கொடுத்தது. அவனால் அதற்கு அனுகூலமான பதிலே சொல்லமுடியாது போயிற்று.

ஜமீந்தாரின் கோபத்திற்கு ஆளாக நேருமே என்றும் தோன்றியது. ஆனாலும் ஆபத்திற்கும் பழிக்கும் ஆளாவதைவிடக் கோபத்திற்கு ஆளாவது குற்றமில்லை என்று தனக்குத்தானே தீர்மானித்துக்கொண்டான். மெல்ல பேசத்தொடங்கி, "பிரபோ! மன்னிக்க வேண்டும். என் தலையில் பகவான் ஒரு குடும்பத்தையும் கட்டி, என் இதயத்தில் வைராக்கியத்தையும் ஊட்டிச்சோதிக்கிறார். கடமை என்பதற்குக் கட்டுப்பட்டு குடும்ப போஷணைக்காக இந்த உத்தியோகத்தை வகிக்கின்றேனேயன்றி என் மனப்பூர்வமாய் நான் செய்யவில்லை. எனது வாயிலிருந்து வரும் கானம் பகவானுக்கு அர்ப்பணம். அதைச் சொல்லிக்கொடுத்து காசு வாங்கிப் பிழைக்க என் மனம் சற்றும் சம்மதிக்கவில்லை. அப்படி அந்த பாட்டுக்கள் வேண்டுமாயின் பஜனையில் நான் பாடும்போது வந்து கேட்டு கற்றுக் கொண்டு பாடட்டும். என்னை க்ஷமிக்கவேண்டும்' என்று கூறுவதைக் கேட்கும்போதே ஜமீந்தாருக்குக் கோபம் பிரமாதமாய் வந்துவிட்டது.

"டேய்! உன்னை நான் ஏதோ பக்திமான் என்ற மதிப்பு கொண்டு இதுவரையில் ஆதரித்து வந்தேன். நீ சுத்த அல்பன். கபட வேஷக்காரன் என்பதை இப்போதுதானறிந்தேன். ஜமீந்தாரின் வீட்டுக் குழந்தைகளுக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுக்க அவனவன் காத்துக்கொண்டிருப்பான். அந்த பாக்கியம் கிட்டுமா என்று நாய்போல் எதிர்பார்ப்பார்கள். உனக்கு பவிஷு வைத்துக்

கேட்டால் அங்கு வந்து கற்றுக்கொள்ளட்டுமென்று சொல்கிறாய். ஓகோகோ! உனக்கு அத்தனை தைரியமும் துணிச்சலுமா வந்துவிட்டது? அல்பப்பதரே! ஜெமீந்தாரின் முன்பு நீயும் ஒரு சிற்றரசன் என்று பேசுவதாக எண்ணிவிட்டாயா! நீ என் கீழடங்கிய ஓர் ஊழியன் என்பது ஞாபகமிருக்கட்டும். மறுபடியும் கேட்கிறேன். சொல்லிக் கொடுக்கப்போகிறாயா! இல்லையா!'' என்று கடிந்து கொண்டு கேட்டான்.

இதுகேட்ட மதுசூதனனின் உள்ளம் பொங்கியது. கண்கள் சிவந்து வெயர்வைவெள்ளம்போல் பெருகியது....''ப்ரபோ! தாங்கள் ஓர் பெரிய ஜெமீந்தாராயிருக்கலாம். தங்களுக்குமேல் யாருமே இல்லை என்கிற நினைவில் தாங்கள் மூழ்கி இருக்கலாம். ஆனால் நான் அல்பன்தான். இருப்பினும் அப்படி நினைக்கவில்லை. நீங்கள் நினைக்கிறபடி நான் உங்களுக்கு ஆயுள்பரியந்தம் கட்டுப்பட்ட அடிமை இல்லை. நான் ஆண்டவனுக்கு அடிமையேயன்றி உங்களுக்கு அடிமையல்ல. மனிதருக்கு மனிதர் அடிமையல்ல. தொழில் முறையிலும் உத்தியோக முறையிலும் பதவி முறையிலும் வித்தியாஸங்கள் காணலாமேயன்றி பகவானின் சந்நிதானத்தில் எல்லோரும் ஒன்று.

பல மதஸ்தர்கள் பல மாதிரியாக அப்பரம்பொருளைப் பஜனை செய்தாலும், பாடித் தொழுதாலும் எல்லாம்வல்ல பரம்பொருள், பரம்ஜோதி, திவ்யப்ரகாசன், தீனதயாளன் ஒருவனேயாவன். அவ்வொருவனுக்குத்தான் இவ்வுலகமே அடிமை. அண்ட சராசரமும் அவன் பாதத்தின் கீழ் அடங்கிக் கிடப்பதை இனியாவது அறியும். உம்முடைய விருப்பப்படி பாட்டுச் சொல்லிக்கொடுக்க முடியாது'' என்று அழுத்தமான குரலில் கூறினான்.

அவ்வளவுதான். தீ பிடித்துக்கொள்வதற்கு ஒரு துண்டு தணல் போதாதா! ஜமீந்தாரின் கோபம் உச்சஸ்தாயியை எட்டி, அதற்கு மேல் பஞ்சமத்திலும் பேசிவிட்டது. அன்றே கடினமான சட்டம் விதிக்கப்பட்டது. ''பஜனைகோயிலைவிட்டு மதுசூதனன் ஓடிவிட வேண்டும். ஜமீன் எல்லைக்குள் கூட இருக்கக்கூடாது'' என்ற கடின திட்டம் பிறந்தது.

இதற்கா மதுசூதனன் பயந்து சாகிறவன்? அதற்கு நேர் விரோதமாய் மனைவியும், மாமியாரும் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு ''ஐயோ! 50 ரூபாய் வெள்ளரிவிதைபோல் கொடுப்பதாகச் சொல்லியதை மண்ணு போட்டுக்கொண்டதோடு வேலையும்

போய்விட்டதே. இனி எங்கு சோற்றுக்குத் தாளம் போடப் போகிறீர்கள்? சந்திபிச்சை தெரு பிச்சை எடுக்கப்போகிறீர்களா?'' என்று கத்தினர்கள். ஜமீந்தார் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கும்படியும் வேலையைக் கொடுக்கும்படியும் கேட்கச்சொல்லி ரகளை செய்தார்கள். "தெருப் பிச்சை எடுக்கவும் தயார்.. தோட்டி வேலை செய்யவும் தயார். செருக்குப் பிடித்து மமதையுடனிருக்கும் ஜெமீந்தாரின் காலில் விழும் மனிதன் நானல்ல. நான் இதோ என்னப்பன் கருணைமூர்த்தியுடன் கிளம்பிவிட்டேன். நீங்கள் இஷ்டமிருந்தால் வாருங்கள்; இல்லையேல் இங்கேயே இருங்கள்'' என்று கடிந்து கூறிவிட்டு பகவான் படத்தைத் தூக்கிக்கொண்டு 'ஏகாங்கி லோக ரக்ஷகா!' என்று கிளம்பினன்.

அவனை ஆதரித்து அவனுடன் சிலர் கிளம்பினர்கள்; சிலர் தடுத்துப் பார்த்தார்கள்: பலனில்லை. சிலர் ஜெமீந்தாரைத் திட்டினர்கள். சிலர் மதுசூதனனைத் திட்டினர்கள். எது எப்படியாயினும் சரி. யார் எதைச் சொன்னலும் சரி. மதுசூதனனின் காதில் விழவே இல்லை.

தினம் பஜனையில் ஈடுபட்டிருந்த சில பெரியார்கள் கூடப் போகமுடியாததால் மதுசூதனனின் பிரிவுக்கு வருந்தினர்கள். கல்லினுங்கொடிய சித்தமுடைய அவன் மனைவிமட்டும் கூடப் போகாமல் குண்டு தைரியத்துடன் நின்றுவிட்டாள். அதையும் அவன் லக்ஷ்யம் செய்யாது போய்விட்டான்.

புருஷனின் அருமை தெரியாது அடிமையின் மோகத்தில் மூழ்கிக் கிடக்கும் எந்த புத்திஹீனகளுக்கும் சுகம் என்பது உண்டா! "தனக்கு இவ்வுலகில் நிகரிலாத பொருள், புதையல், சொர்க்கபாக்கியம் யாவும் தனது கணவன். அவன் பாததூளியே தன் ஜீவியத்தின் லக்ஷிய நாடி; அவன் தரிசனமே தனது முக்தியின் சாயை; அவனுடைய நேசமே. தனது பிறவியின் சார்த்தகம்'' என்று ஒவ்வொருபெண்ணும் தன்கணவனை நினைத்துத் தொழவேண்டியது போக, அவனுக்குச் சத்ருவாய், எதிரியாய் விளங்கினல் அவர்கள் எந்த உலகத்திலும் சீர்படமாட்டார்களல்லவா!

மதுசூதனன் ஊரைவிட்டுச் செல்லும்படியாகத் தன் பிதா கடின உத்திரவிட்டதையறிந்த அவரது மூத்த மகளாகிய நர்மதா மிகவும் வருத்தப்பட்டுக் கண்ணீரும் உதிர்த்தாள். கேவலம் ஒரு பாட்டுக் கற்றுக்கொடுக்கமாட்டேனென்றதற்காக தனது சுயமரி

யாதை, தயாளம், கண்ணியம் முதலியவைகளைச் சற்றும்கவனியாது இப்படியா செய்வது? அம்மா! நீயாவது அப்பாவுக்குச் சொல்லியிருக்கக்கூடாதா! ஏழைக் குடும்பம், நம்மை நம்பி இந்த ஊருக்கு வந்துள்ளவர்களை நடுச்சந்தியில் விட்டதுபோல் துரத்தியடித்தால் அவர்கள் குடும்பத்தின் சாபம் நம்மைத் தாக்காதா!

இக்காலத்தில் சங்கீதத்தைக் கற்க எத்தனையோவித சாதனங்கள் இருக்கின்றன. இவரைப் பாடச் செய்து முக்கியமான பாட்டுக்களைப் புத்தகமாகப் போட்டு கிராமபோன் ரிகார்டும் எடுத்துக்கொண்டால் நமக்கும் எத்தனையோ உபயோகமாயிருக்கும்; அவருக்கும் உதவியாயிருக்கும். இதையெல்லாம் விட்டுவிட்டு இப்படியாம்மா ஒரு சாதுவை, மகனை ஊரைவிட்டுத் துரத்துவது?" என்று தாயாரைக் கேட்டாள்.

படாடோபத்திற்கும் ஜம்பத்திற்கும், அதிகார தோரணைக்கும் முதல் தாம்பூலம் பெற்ற அந்தம்மாளுக்குத் தன் பெண் கூறும் வார்த்தைகள் முற்றும் நாராசம்போல் காதில் விழுந்தன. பெண்ணின்மீது அளப்பரிய கோபமும் வந்துவிட்டது. "சீச்சீ! மூதேவி! நீ ஒரு உயர்ந்த ஜெமீந்தாரின் வயிற்றில் பிறக்க லாயக்கற்றவள். தரித்திரக் குடுக்கையின் வயிற்றில் பிறந்திருக்கவேண்டும். உன் தகப்பனாரின் கம்பீரமும் பெருமையும் என்ன, அந்த அல்பப் பிச்சைக்காரன்—அவரால் வயிறு வளர்க்கும் நாயி—பேசிய பேச்சென்ன? அந்த அல்பனுக்குப் பரிய உனக்கு வெட்கமில்லை!

கிராமபோன் பிளேட்டும், சங்கீத புத்தகமும் போட்டு வேறு அவனுக்குக் கொட்டவேண்டுமா? சீ!...மானங்கெட்டவளே! நீ ஒரு ஜெமீந்தாரின் மகள் என்பது ஞாபகமிருக்கட்டும்" என்று கடுமையான த்வனியில் திட்டினாள்.

அதற்குமேல் அச்சிறுமி என்ன செய்வாள் பாவம்! இயற்கையிலேயே நல்ல பக்தியும் உத்தம குணமும், சீலமும் நிரம்பப்பெற்ற அந்த நங்கை மிக்க விசனமுற்றுக் கண்ணீர் உதிர்த்தாள். அவளுக்கு விவாகமாகி இரண்டு வருடங்களாகின்றன. அவளுடைய கணவனும் ஒரு ஜெமீந்தார் வம்சத்தைச் சேர்ந்தவன்தான். உயர் படிப்பின் நிமித்தம் கல்யாணமான இரண்டு மாதத்திற்கெல்லாம் சீமைக்குச்சென்றவன் இன்னும் திரும்பி வராததால் நர்மதா தாயார் வீட்டிலேயே இருக்க நேர்ந்தது. சங்கீதத்தில் அபார ஞானமும் பாண்டித்யமும் பெற்றவளாகையால் சங்கீதத்தின் அருமை தெரிந்த

வளாய் அநுதாபத்துடன் விளங்கினள்.

மதுசூதனனின் பஜனை மடத்திற்குத் தாயுடன் அடிக்கடி சென்று பஜனையிலீடுபட்டு ஆனந்திக்கும் அவளுடைய இதயத்தில் இப்போது அந்த கானம் குடிபுகுந்ததுபோலாகியது. மதுசூதனன் தம்பூராவுடன், சப்ளாவும் தட்டிக்கொண்டே பஜனை செய்து பாடிய வாறு ஊரைவிட்டுச் செல்லுங் காட்சியை நர்மதை தன் மாடியறை ஜன்னலால் பார்த்தாள். அவளால் துக்கம் தாங்க முடியவில்லை. கடவுளே, சங்கீதக் கலாநிதியே ஊரைவிட்டுப் போவதுபோல் அவளுக்குத் தோன்றியது. கண்ணீர் பெருக அங்கேயே நின்று பார்த்தாள்.

ராகம் - காபி : ஆதி தாளம்.

பல்லவி

அஞ்சாதே! நெஞ்சமே!
அஞ்சனவண்ணனின் அபயமிருக்கையில் (அ)

அநுபல்லவி

சஞ்சலம் நீங்கிடும் சங்கடம் மறைந்திடும்
பஞ்சமா பாதகமும் பஞ்சுபோல் பறந்திடும் (அ)

சரணம்

மரம் வைத்தவன் தண்ணீர்வார்த்திடும் மகிமையை
மறந்தனையோ! அற்ப மனிதர்கள் சதமோ
நிரந்தரம் காத்திடும் நிர்மலன் பாதம்
சிரம் பணிந்திடில் வினை பரிதி முன்பனியாம். (அ)

என்று பாடிக்கொண்டே மதுசூதனன் விரக்தியுடன் செல்லும் காக்ஷி யார் மனத்தைத்தான் உருக்காது? பேதைப் பெண்ணாகிய நர்மதைக்குச் சகிக்கவே இல்லை. மனத்தைக் கட்டுப்படுத்தவும் முடியவில்லை. தன்னுடைய கண்ணியத்தைக் கூடப் பார்க்காமல் இறங்கி வீதிக்கு ஓடிவந்தாள்.

பக்தியும் ஆவேசமும் கொண்டு கூட்டத்தின் நடுவில் ஓடி மதுசூதனனின் காலில் விழுந்து வணங்கி "ஸ்வாமீ! புனித ச்ரேஷ்டரே! என் தகப்பனாரின் கடின தண்டனைக்கு நான் மிகமிக வருத்தப்படுகிறேன். ஏதோ அதிகாரத் திமிர் படைத்து என் தகப்பனார் செய்த இந்த அபசாரத்திற்குத் தாங்கள் மன்னித்து ஆசீர்வதிக்க வேண்டும். தாங்கள் இவ்வூரைவிட்டுப் போகக்கூடாது. என் தந்தையிடமும் நான் வேண்டிக்கொள்கிறேன். அவர்தான் கோபக்

காரர். தாங்கள் உலகமறிந்த சாந்த விவேகியல்லவா! நீங்களும் இப்படிப் போகலாமா! பஜனையின் பக்தி ப்ரபாவத்தில் லயித்த என்மனம் பதறுகிறது. நானும் உங்களுடன் வருகிறேன்'' என்று கதறினாள்.

இதைக் கண்ட பொதுமக்களுக்குண்டாகிய வியப்பிற்கு எல்லையே இல்லை. “அடடாடா! ஜமீந்தார் உத்திரவிட்ட சட்டமென்ன? அவருடைய அருமை மகள் மன்னிப்புக்கேட்கும் விந்தை என்ன? இதென்ன அற்புதம்!'' என்று திகைத்தார்கள்.

மதுசூதனனுக்கும் வியப்பு உண்டாகியது; எனினும் அவன் அந்தப் பெண்ணைக் கண்ணால் கூடப் பார்க்கவில்லை. ஆகாயத்தைப் பார்த்தபடியே “அம்மணீ! எந்தெந்த காலத்தில் ஆண்டவனின் கட்டளை எப்படி இருக்கிறதோ, அப்படித்தான் யாவும் நடக்கும். பகவான் எனக்கு இம்மாதிரி கட்டளையிட்டிருக்கிறான். நீங்கள் வீட்டிற்குப்போங்கள். தாய்தந்தையருக்கு அடங்கி நடப்பதுதான் உங்களுடைய தர்மமாகும். உங்கள் தந்தையின் உத்திரவை மீறி நானும் நடக்கமாட்டேன்; நீங்களும் நடக்கக்கூடாது. “பகவான் எங்குமிருக்கிறான்; தூணிலுமிருக்கிறான்: துரும்பிலுமிருக்கிறான்'' என்கிற ப்ரக்லாதாழ்வாரின் திருவாக்கை நம்பி இருங்கள். நீங்கள் என்னுடன் வருவதை நான் எப்போதும் ஒப்பமாட்டேன்.

தாயே! இது தருமமல்ல. இது ஸ்திரீ தர்மத்தின் எல்லையைக் கடந்ததாகும். போங்கள். இந்த பஜனையை நீங்கள் வீட்டிலேயே செய்து இன்புறுங்கள். மீராபாய், சக்குபாய், ஆண்டாள் முதலிய எத்தனையோ தெய்விகப் பெண்மணிகள் பகவானை பஜித்து முக்தியடையவில்லையா! நீங்களும் அப்படியே செய்யுங்கள்.

மனத்தைக் கட்டுப்படுத்தச் சக்தியின்றி அதீதமான முறையில் விட்டுவிடுவது பேராபத்தாகும். தாயே! விலகுங்கள். வீட்டிற்குப் போங்கள். என்மீது வீணான அபாண்டப்பழி சுமத்த ஏதுவாகாதீர்கள். போங்கள்'' என்று கண்டிப்பாயும் சாந்தமாயும் கூறினான்.

மதுசூதனன் சபல சித்தமற்று திட சித்தத்துடன் ஆணித்திறமாகப் பேசியதைக் கேட்ட ஜனங்கள் பிரமித்தார்கள். மதுசூதனனின் புனிதத்தன்மை இன்னும் அதிகமாகப் பிரகாசித்தது.

இதற்குள் ஜமீந்தாருக்கு இச்செய்தி எட்டிவிட்டது. ரௌத்திராகாரமான ஆத்திரத்துடன் வெளியில் வந்து, தன் பெண்ணை மயக்கி இழுத்துக்கொண்டுபோகும் துர்ப்புத்தியுடன் மதுசூதனன் நடந்ததாக அவன்மீது ப்ரத்யக்ஷமாகக் குற்றத்தைச் சாட்டி அவனைக்

கைது செய்யவும் துணிந்துவிட்டார்.

ஆனால் நடுவீதியில் நடந்த சம்பவமாகையால் மதுசூதனன் மீது அந்த குற்றம் நிற்கமுடியாது பொதுஜனங்கள் ஜமீந்தார் மீதே பாய்ந்துவிட்டதால் அவர் அதற்குமேல் வாலாட்டமுடியாது மகளை அடித்து மிரட்டி இழுத்துக்கொண்டு போய்விட்டார்.

ஐயோ! பாவம்! மதுசூதனனின் உள்ளம் எப்படித்தான் பதைத்திருக்கும்? ஏற்கெனவே உலகத்தை வெறுத்திருப்பதற்கு இந்த சம்பவம் இன்னும் அநுகூலமாய் உதவியது. மனம் பின்னும் வஜ்ரம்போலாகியது.

## 31

ஏற்கெனவே உலகத்தை வெறுத்திருப்பதற்கு இந்த சம்பவம் இன்னும் அநுகூலமாய் உதவியது. மனம் பின்னும் வஜ்ரம் போலாகியது. கல்லை யசைத்தாலும் அசைக்கலாம்; விலாஸினியின் மனத்தை யசைக்க முடியாதவாறு உறுதியும் ஞானமும் உண்டாகின.

மும்தாஜ்பீகம் மகாபரிசுத்தவதி. நெருப்புக்குச் சமமான கற்பரசிகள் ஒன்று சேர்ந்த இடத்தில் களங்கமோ, மாசோ இருக்க முடியுமா? பள்ளிக்கூடம் வெகு மேன்மையாய் நடந்து வருவதைப் பாராட்டிப் பல பிரமுகர்கள் உதவியளித்து வந்தார்கள். வேதாந்த விசாரணையும் சதா பக்திரஸமான வார்த்தைகளும் தவிர அவ்விரு பாலசன்யாசினிகளிடம் வேறு வார்த்தையே பிறக்கவில்லை.

நெருப்பு அதிக ஜ்வாலையுடனிருப்பினும் விட்டில்பூச்சிகள் விளக்கில் தாமே வந்து விழுவதுபோல் சில முட்டாள்கள் பிரயத்தனம் செய்து தக்க தண்டனையை அடைந்தார்கள். அதாவது,—எவனாவது இவர்களை வஞ்சிக்கவோ, துராக்ருதம் செய்யவோ வந்தால் தாக்ஷிண்யம் பாராது காலையோ, கையையோ உடைத்து நடு வீதியில் போட்டுவிடும் வெகு விசித்திரமானதும், துணிகரமானதுமான கொள்கையை இரு நாரீமணிகளும் மேற்கொண்டார்கள்.

விலாஸினியின் கையால் நல்ல செருப்படி பட்ட டாக்டரை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அவன் அந்த ஆத்திரத்தை

உள்ளடக்கியபடியே அதற்குப் பழிதீர்க்கவும் அவளைக் கெடுக்கவும் சமயம் பார்த்துக்கொண்டே இருந்தான்.

விலாஸினி மறைந்துவிட்டாள்; அவள் இருக்கிறளோ, இறந்தாளோ என்பதுகூடத் தெரியாது வருடங்கள் சென்றுவிட்டதால் தகவல் தெரியாது துடித்தான். பிறகு இந்த பள்ளிக்கூடத்தின் சிலத்தைப்பற்றி ஒரு மகம்மதியரால் கேள்வியுற்றுன். விலாஸினி அங்கிருப்பதையும் எப்படியோ அறிந்து, தான் ஒரு மகம்மதியனைப் போல் வேஷ மணிந்து தன் மகளை அங்கு படிக்கச் சேர்க்கப் போகும் பாவனையில் அங்கு இராக்காலத்தில் வந்து வெகு தந்திரமாய்ப் பேசினன்.

முதலில் ஒன்றும் வித்யாஸம் தெரியவில்லையென்றுலும் விலாஸினிக்கு அவன் கையில் ஆறு விரல்களிருப்பதைப் பார்த்ததும் சற்று சந்தேகமுண்டாகியது. அவன் குரலை மாற்றினல்கூடப் பழய குரலும் ஆளின் அடையாளமும் நினைவிற்கு வந்துவிட்டன. அவனுடைய இடது கன்னத்திலுள்ள காயவடுவை மறைக்கமுடியுமா?

அவனே பிரமிக்கும்படியாய் விலாஸினி திடீரென்று ஒரு சிரிப்பு சிரித்தாள். "பீபி!...இந்த பிரபு யார் தெரியுமா? உண்மை சாயபுவல்ல. சாயபு வேஷம் பூண்ட இந்து. ஒரு பிரபல டாக்டர். ஒரு சமயம் என்னிடம் செறுப்படிப்பட்ட சுத்தவீரர். இப்போதும் இவர் கெட்ட எண்ணத்துடன்தான் வந்திருக்கிருர் என்பதற்கு இவருடைய வேஷமே போதுமான சாக்ஷியாகும். பீபி! நம்ப ஹமீத்கானைக் கூப்பிட்டு நமது மரியாதையைச் செய்து அனுப்பி விடுங்கள்" என்று கூறியவாறு ஒரு மணியை அழுத்தினள்.

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல் அந்த டாக்டருக்கு சப்த நாடியும் அடங்கி கிடுகிடென்று உடல் நடுங்கியது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல் முகத்தில் அசடு வழிகிறது. தன்மீது பொய்யான குற்றம் சாட்டுவதாய் எதிர்த்துப் பேச எண்ணுகிருனேயன்றி வாய் கிளம்பவில்லை.

ஒரு க்ஷணத்திற்குள் ஹமீத்கானும் ஓட்டமாக ஓடிவந்து, டாக்டரின் குல்லாய் மீசை முதலிய வேஷக் கருவிகளைக் களைந்தெறிந்து கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு கும்கும்மென்று நான்கு குத்துக்கள் விட்டான்.

விலாஸினி ஓர் வனதேவதையைப்போல் விரைக்க விரைக்கப் பார்த்தபடியே, "டாக்டரவாள்! பிறஸ்த்ரீகளின் விஷயத்தில் தலை

யிடாதிருக்க ஒருதரம் செய்த தண்டனையில் தங்களுக்குத் திருப்தி யுண்டாகவில்லை பாவம்! சரியானபடி ஞாபகமிருக்கும்படிப் பகுமானம் செய்தால் இனி மனத்தினுல் கூட இம்மாதிரி நினைக்க மாட்டீரல்லவா!...

உம். ஹமீத்கான்! இவரை வெளியே கொண்டுபோய் பழுக்கக் காய்ச்சிய கரண்டியால் இரண்டு பாதங்களிலும் ஆட்டுச் சதையிலும் சரியானபடி மார்க்கு செய்து வெளியே அனுப்பு" என்று ஓர் ராணியைப்போல் கர்ஜனை செய்தாள்.

இதைக்கேட்ட டாக்டரின் மனம் துடித்தது. இதயத்தில் ஓட்டம் நின்றுவிட்டதுபோல் ஒரு தோற்றமுண்டாகி அவனைச் சித்திரவதை செய்தது. "ஐயோ! சூடா போடப்போகிருய்?... விலாஸினீ! வேண்டாம்; வேண்டாம். இத்தகைய கடின தண்டனை விதிக்கவேண்டாம். எனக்குப் புத்தி வந்தது. நான் இனி சொப்பனத்தில்கூட இம்மாதிரி செய்கையை நினைப்பதில்லை. ஸ்திரீகளுக்குரிய சாந்தமும் தயையும் காட்டி என்னை மன்னித்துவிடு. உனக்கு இரக்கமில்லையா! மன்னிக்கமாட்டாயா! விலாஸினீ! விலாஸினீ! என்னிடம் நம்பிக்கையில்லையா! ஐயோ! அவமானம் சகிக்கவில்லையே!" என்று பரிதாபமும் உண்மையும் ததும்பக் கதறினன்.

இதைக்கேட்ட விலாஸினி ஏளனமாக நகைத்துக்கொண்டே "ஓகோ! ஞானேதயமாகிவிட்டதா! பேஷ்! பாம்பை நம்பினுலும் நம்பலாம். உம்மையா நான் நம்புவேன்! உம். நடத்திச் செல்" என்று சட்டமிட்டாள்.

இரு வேலைக்காரர்கள் அழைத்துப்போய்விட்டார்கள். பிறகு ஒரு மணி நேரம் சென்று அவர்கள் வந்து சூடுபோட்டு நடுத்தெருவில் உருட்டிவிட்டதாய் தெரிவித்தார்கள். இரு சன்னியாசினிகளும் ஒரு பெருமூச்சு விட்டார்கள்.

விலா:—உம்...விதி. தலைவிதி. நம் பொருள்களைக் கொள்ளையடிப்பதற்கு வரும் கள்வனுயினும், நம்மைக் கொலை செய்ய வரும் கொலையாளியாயினும், அவனை மன்னிக்கலாம். சாகவும் நாம் துணியலாம். நம்முடைய உயிரினும் மேலான கற்பைக் குலைக்க வரும் சண்டாளனைக் கட்டாயம்தண்டித்துத்தான் துரத்தவேண்டும். என்ன செய்வது? இத்தகைய துர்ப்புத்தி எப்போதுதான் மக்களிடையே ஒழியுமோ!

மும் :—உம். ஒழிவதாவது, ஒய்வதாவது? உலகம் இவ்வளவு தான். இப்படியே பட்டுப்பட்டுத் தேறுபவர்களும் உண்டு. அப்படியே மூர்க்கத்தனமாய் திரிபவர்களும் உண்டு. உலகத்தில் பெரும் பாகமான அக்கிரமம் இந்த மூர்க்கத்தனத்தினுல்தான் உண்டாகிறது. அனேக கொலைகள், களவுகள், பெண்கள் புருஷனை அவமதிப்பதும், புருஷன் மனைவியை அலக்ஷியம் செய்வதும், குடும்பம் விடிவு விமோசனமில்லாதுபோவதற்கும் மூலகாரணம் இது. இதற்கு அநுகுணமான சகாக்கள் குடி, குதிரைப்பந்தயம், சூதாடல், சீட்டாட்டம் முதலியவைகளும் சேர்ந்துவிட்டால் பிறகு கேட்க வேண்டுமா ?

விலா :—வாஸ்தவம் பீபீ! அகாரணமாய் என் பிதாவின் தலையில் விடிந்த பழியும் இதன் மூலந்தான் ஏற்பட்டது. மூர்க்கக் குணமும், ஒழுங்கீனமும் ஒழிந்துவிட்டால் மக்களிடையே எத்தனை சாந்தமும் சமரசமும் நிலவியிருக்கும்—என்று பேசிக்கொண்டிருக்கையில் தபாற்காரன் தபால்களும் பத்திரிகைகளும் அவரவர்கள் கையில் கொடுத்துச் சென்ருன்.

தம்தம் கடிதங்களை இருவரும் படிக்கத் தொடங்கினர்கள். விலாஸினியின் பெயருக்கு கவர்ன்மெண்டு கடிதம் ஒன்றிருப்பது கண்டு வியப்புற்று அதைப் படிக்கவாரம்பித்தாள்.

"அன்பார்ந்த அம்மணி!

உங்கள் பிதாவுக்கு உடம்பு அதிகமாயிருக்கிறது. உங்களைப்பார்க்க மிகவும் ஆசைப்படுகிருர். அவருடைய தண்டனை காலத்தின் அளவு இன்னும் முடியவில்லையெனினும் அவர் வெகு யோக்யமாயும், நம்பிக்கையாயும் நடந்துகொண்டு ஆபீஸ் வேலையும் செய்து வந்ததால் தண்டனை கால அளவைக் குறைத்துவிட்டோம். அதோடு அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டிருப்பதால் அவரை விடுதலைசெய்துவிடக் கவர்ன்மெண்டு உத்திரவிட்டிருக்கிறது.

அவர் இப்போது ஜெயிலைச் சார்ந்த ஆஸ்பத்திரியிலிருக்கிருர். 7-ந் தேதியன்று அவரை வந்து அழைத்துச் செல்வதாயினும் சரி ; அல்லது எங்கு அனுப்புவதென்பதைக் குறித்துக் கடிதம் எழுதினுலும் நாங்கள் அனுப்பி விடுகிருேம். உடனே பதில்."

என்றதைப் படித்ததும் விலாஸினிக்குத் தாங்க முடியாத துக்கம்

பிரிக்கொண்டு வந்தது. அப்படியே மேஜையின் மீது குப்புறப் படுத்து விம்மி விம்மிப் புலப்புகிருள். மும்தாஜ் பீகமும் இவளும் ஜாதியில் வேறுபட்டவர்களாயினும் மன ஒற்றுமையில் ஒரு தாயின் வயிற்றுச் சகோதரிகளைப்போல் அத்தனை ப்ரேமையுடன் இருப்ப வர்கள். இருவருடைய விடுதிகளும் பக்கத்தில் பக்கத்திலேயே இருப் பதால் தம்தம்விடுதியில் சாப்பாட்டுக்கும் வேலைக்கும் மத்தியிலுள்ள நேரத்தைப் பள்ளிக்கூடத்தின் ஆபீஸ் அறையில்தான் இருவரும் கழிப்பார்கள். வித்யாஸமற்ற மனத்துடன் பரிசுத்தமான வாழ்க்கை நடத்திவந்தார்கள்.

பீகமும் இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தாள். "அம்மா! விலாஸினீ! கலங்காதே! கண்ணீர் விடாதே. இன்றே நாம் இருவரும் நமது ஹமீத்கானின் துணையுடன் சென்று அவரைப்பார்த்து அழைத்து வருவோம். அதைர்யப்படாதே" என்று தேற்றினுள்.

விலா:—பீகம்! எங்கேயோ கண் காணுதவிடத்திலாவது ஒரு ஆத்மா எனக்கென்று உரிமையுடன் இருப்பதாக நான் எண்ணி உள்ளம் பூரித்திருந்தேனே! அதுவும் என் துரதிருஷ்டத்தினுல் பாழாகிவிடும்போலிருக்கிறதே...பீகம்! இந்த கடைசீ காலத்தில் சந்தித்துக் கலங்கவா விதியிருந்தது? ஐயோ! என்னுல் சகிக்க முடிய வில்லையே பீகம்!....

மும்தா:—விலாஸினீ! "எல்லாம் ஆண்டவன் செயல். எல்லாம் நன்மைக்கே" என்ற நம்பிக்கையை நீ இழக்காதே. நாம் எத்தனை தான் தைரியமாயும் பாதுகாப்புடனும் இருந்தாலும் நமக்கென்று அக்கரையுடன் கவனிக்கும் துணையைக் கடவுள் அனுப்பியிருக்கிறுர் என்று எண்ணு. உன் பிதாவுக்கு யாதொரு ஆபத்தும் நேராது என்று என் மனம் உறுதியாய் நம்புகிறது. நீ வீணுய்க் கவலைப் படாதே. நீ இன்றே கிளம்பி வருவதாய் பதில் தந்தி யடித்துவிடு. நாம் இப்போதே பிரயாணமாகிவிடுவோம்—என்று வெகு ப்ரீதி யுடனும் ஸ்வதந்திரத்துடனும் கூறி விலாஸினியைத் தேற்றினுள்.

உடனே மும்தாஜ் பீகமே தந்தியடித்தாள். பிறகு இருவரும் ஹமீத்கான்சாயபுவின் துணையுடன் பிரயாணமானுர்கள். ரயில்வே ஸ்டேஷனையும், ரயிலையும் பார்க்கும்போது விலாஸினிக்குப் பழைய நினைவு முற்றும் குபீரென்று வந்து நெஞ்சைக் கலக்கியது.

ஆஸ்பத்திரியை அடையும்போது விலாஸினியின் மனம் திக்கு திக்கு என்று நூறு மைல் வேகத்தில் போகும் மோட்டார்காரைப்

போல் அடித்துக்கொண்டது. தான் வந்திருப்பதை அதிகாரிகளுக்குத் தெரிவித்து அவர்கள் ஆதரவுடன் தகப்பனுர் இருக்கும் இடத்திற்குச் சென்ருள்.

படுக்கையில் படுத்து "ஹா! ஹா!" என்று புலம்பிக்கொண்டிருந்தவர் விலாஸினியின் வரவை யறிந்ததும் ஆவேசம் கொண்டவர்போல் எழுந்து உட்கார்ந்து இருகண்களும் மழைபொழிய இரு கைகளையும் நீட்டியவாறு "வா....வா...என் கண்மணீ! வா...என் ஆத்மஜோதி வா!....என் செல்வக் குழந்தாய் வா....விலாஸினீ! வா வா!" என்று பெரியதாகக் குரல் பாய்ச்சிக் கத்தினுர்.

புத்திரவாத்ஸல்யத்தின் வேகம் அவர் நரம்புக்கு நரம்பு ஏறி தேகமே படபடத்து ஆடியது. மும்தாஜ்பீகத்தின் கண்ணீர் பெருகியது. விலாஸினி, 'அப்பா!' என்று ஒரே கத்து கத்தினுள். தந்தையின் கைகளுக்குள் ஐக்கியமாகி ஒரு சிறு குழந்தையைப்போலானுள். "என்னே இன்பக் காக்ஷி! என்னே ஆனந்தம்! என்னே அன்பு! என்னே சாந்தம்!"

# 32

"என்னே இன்பக் காட்சி! என்னே ஆனந்தம்! என்னே அன்பு! என்னே சாந்தம்! அடடா! இதல்லவோ பேரின்பநிலை! இதல்லவோ நித்தியானந்தம்!" என்று மதுசூதனனின் உள்ளம் பூரித்து பிரமித்தது. ஊரைவிட்டுப் பாதசாரியாகவே நடந்து கால்போன வழியெல்லாம் சென்றுகொண்டிருக்கையில் ஒரு பக்தர் இவனுடைய பஜனையின் பிரபாவத்தைப் பார்த்து மிக்க சந்தோஷங் கொண்டு தம் வீட்டில் ஒரு வாரம் தங்கி உத்ஸவம் செய்துவிட்டுப் போகவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தனிகர் உண்மையான பக்தியுடன் கூறியதால் அவர் விருப்பப்படியே அங்கு தங்கி நித்யோத்ஸவம்போல் தினம் வெகு ஆனந்தமாய் பஜனை நடந்துவந்தது. அவ்வூரிலுள்ள ஜனங்கள் மெய்மறந்து பக்தியிலீடுபட்டார்கள்.

சன்யாசம் வாங்கிக்கொண்டு காவியுடை உடுக்காத குறையொன்றைத்தவிர வேறு வித்தியாஸமில்லாத சன்யாசியாகிவிட்

டான். இதற்குள் அவனுடைய பெற்றோர்களும், மற்றோரும் எத்தனை அழைத்தும் அவன் செவியில் விழவே இல்லை. கண்டிப்பாய் மறுத்துவிட்டான். மனைவி முதலில் விரைத்துக்கொண்டு நின்றுவிட்டாளேயன்றிப் பிறகு அவள் தாயார் வீட்டிலும் மாமியார் வீட்டிலும் சீர்படாமல் அலக்ஷியமாய் நடத்தப்பட்டு தாங்க மாட்டாத விசனத்திற்குள்ளாகிக் குழந்தையுடன் தவிக்கலானாள்.

எனினும் மண்டைக்கொழுப்பும், அசட்டுத் தைரியமும், வெடுக்குவெடுக்கென்று பேசும் துடுக்கான நாக்கும் மட்டும் அடங்கவில்லை. 'புருஷனை வேண்டுமென்று அடித்துத் துரத்திவிட்டு வாழாவெட்டியாய் உட்கார்ந்திருக்கிறாள். தண்டபிண்டம் கொட்ட யார் முன்வருவார்கள்?' என்றெல்லாம் தினம் அர்ச்சனை பலத்தது.

யாராகட்டும், தன்னுடைய கணவனின் பாதத்தடியிலிருப்பவர்களுக்குத் தனித்த மதிப்பும் கண்ணியமும் எக்காலத்திலும் இருந்தே தீரும். கணவன் அவளை லக்ஷ்யம் செய்யாது வைத்திருப்பினும் இழிவான பேருக்கும், அபவாதத்திற்கும் ஆளாகாமலிருப்பார்கள். வேண்டுமென்று யாரேனும் மூட்டைக்கட்டித் தூற்றவந்தாலும் அச்சமயம் கணவன் காட்டிக்கொடுக்காது சண்டையிட்டுக் காப்பாற்ற முன்வருவான். அப்போதும் பேசாமல் வேடிக்கைப் பார்க்கும் கிராதகர்களும் சிலர் இல்லாமலில்லை. அப்படியிருப்பவர்களைத்தான் உலகம் தூற்றுமேயன்றி வாழ்த்தாது.

வேண்டுமென்று கணவனை வெறுத்து விலக்கிய பாதகியை யார்தான் கொண்டாடுவார்கள்! சிரிப்பாணிபட்டப் பிழைப்பாகியது. குழந்தையும் சரியான போஷாப்பின்றி இளைத்துத் துரும்பாகிவிட்டது. ஸ்வீகாரம் வாங்கிக்கொண்டு தான் பட்டதுன்பம் போதும். மனைவியால் படும் ஹிம்சை போதும். மருமகனால் அடைந்த பலன் போதும் என்று தோன்றி மனது வெறுத்துவிட்டதால் பிள்ளையுடன் தானும் போய்விடலாமா என்று திருவேங்கடம் எண்ணினான்.

ஜெமீந்தாரின் கோபத்திற்கு இவனுடைய குடும்பமே ஆளாகியதால் மருமகனுக்கிருந்த வேலையும் போய்விட்டது. ஜெமீந்தாருடைய சொந்த மில்லில் இவர்களுக்கு வேண்டியவர்கள், உறவினர்கள் முதலிய யாருமே இருக்கக்கூடாதென்று எடுத்துவிட்டார். இதனால் திருவேங்கடத்தின் குடும்பத்தில் பெரிய கலவரமும் சண்டையும் உண்டாயின. இந்த புகைச்சலுடன் சில மாதங்கள் கழிந்தன.

ஜெமீந்தாரின் ஆக்ரமிப்பினால் மில்லிலுள்ள தொழிலாளர்களிடையே பலத்த கலவரமும் சண்டையும் உண்டாகி விபரீதமாக முடிந்து தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துவிட்டார்கள். லக்ஷக்கணக்கில் பணத்தைக் கொட்டியுள்ள மில்லில் வேலைநிறுத்தம் உண்டாகியதால் பெருத்த நஷ்டமும், கஷ்டமும் உடனே மூண்டுவிட்டன. இதைக்கண்ட நர்மதாவுக்கு உள்ளம் பதைத்தது. ஒரு பாபமும் அறியாத உத்தமரை மனம் நோகச் செய்து விரட்டிய தன் சாபந்தான் இம்மாதிரியாகிவிட்டது என்று தீர்மானமாய் எண்ணிக் கண்ணீர்விட்டாள். அவள் இவ் விஷயமாக அதிகம் பேசினால் அவள்மீதே சந்தேகங்கொண்டு விகல்பத்தைச் சிருஷ்டித்து அபாண்டமாய்ப் பேசி மனத்தைக் கலங்கச் செய்ததால் அவ்வுத்தமப் பெண் வெளியில் கூறவும்மாட்டாது தவித்தாள்.

கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல் இந்த தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு மூலகாரணம் மதுசூதனன்தான் இருக்கவேண்டும். கபடசன்யாசிபோல் வேஷம்போட்டுக்கொண்டு தன்னைப் பழிக்குப்பழிவாங்குவதற்காகத் தொழிலாளர்களைக் கிளறி உள்ளுக்குள் கலகத்தை விளைவித்து இம்மாதிரி செய்துவிட்டான் என்று ஒரு எண்ணம் ஜமீந்தாரின் மனத்தை முற்றுகையிட்டது.

அதற்கனுகூலமாய் முன்பு ஒரு தினம் பஜனை மடத்தில் தம் மனைவிகளை அடித்து இழுத்துக்கொண்டுபோன பிரமுகர்களும், மதுசூதனனின் விரோதிகளும் ஒன்று சேர்ந்தார்கள். இந்த புண்ணியவான்களெல்லாரும் ஒத்தாசை செய்ததன் பலன் ஜமீந்தார் வெகு சுலபத்தில் இந்த குற்றத்தை ஜோடித்து மதுசூதனனைக் கைதியாக்க விடாமுயற்சியுடன் பிரவேசித்து வாரண்டும் வாங்கிவிட்டார்.

இதில் சேர்ந்திருப்பவர்கள் சிலர் மில்லில் வேலையாயிருப்பவர்களாகையால் இக்காரியத்திற்கு யாதொரு தடையும் உண்டாகவில்லை. இந்த சூழ்ச்சிகள் முற்றும் நர்மதாவுக்குத் தெரியாதெனினும் ஏதோ சதியாலோசனை நடப்பதுமட்டும் நன்கு தெரிந்தது. பெத்த தாயாயிருந்தால் என்ன, தந்தையாயிருந்தால் என்ன ? சரியான மார்க்கத்தைவிட்டுப் பிசகி நடந்தால் மனம் சகிக்குமா ?

பின்னும் ஒரு வாரத்திற்குள் மதுசூதனன் கைதியாகிவிட்டான் என்கிற செய்தி காட்டுத் தீயைப்போல் ஊரெங்கும் பரவியது. அதைக்கேட்டு விசனித்தவர்களும், கண்ணீர் உதிர்த்தவர்களும், சந்தோஷப்பட்டவர்களும் எண்ணிலடங்காது.

காட்டில் பறக்கும் ஸ்வதந்திரம் நிறைந்த கிளியைக் கூண்டில் போட்டு அடைத்ததுபோல் நர்மதையை அடைத்து வாயிக்கு வந்த வாறெல்லாம் தாயும் தந்தையும் திட்டினர்கள். "சீமையிலிருந்து கணவன் வரப்போவதாகத் தந்திகிடைத்திருக்கையில் நீ இம்மாதிரி ஓர் போக்கிரிப் பதரின் காலில் விழுந்து நடுத்தெருவில் கதறுவதைக் கேட்டால் அவன் உன்னை சீந்துவானு! உன்னுடைய நிலைமைக்கும் கண்ணியத்திற்கும் ஹானி தேடவா இம்மாதிரி செய்கிருய்?" என்று கடிந்தார்கள்.

பேதைப் பெண் என்ன செய்வாள் பாவம்! பதைக்கப் பதைக் கத் தவித்தாள். "நான் மதுசூதனனை கடவுளுக்குச் சமமாயும் புனிதாத்மாவாயும் நினைத்து பக்தி செய்வதை என் தாய் தந்தையர்கள் அறியச் செய்யமாட்டாயா! நான் விகல்பமாக அம்மஹாநுபாவனைக் கனவிலும் நினைப்பதில்லையே! இந்த பரிசுத்தம் உனக்குமா தெரியாது? என் பெற்றோர்களே என்னை வித்யாஸமாய் நினைத்துவிட்டால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? தாயே! பராசக்தி! என் கணவருக்கு என்மீது என்ன கோபமோ! ஒரு கடிதங்கூட எழுதுவதில்லை. அவர் வருவதற்கு முன்பே இம்மாதிரி வீண் அபாண்டம் காதில் விழாதபடி என்னைக் காப்பாற்று. கை விடாதே" என்று பகவானை வேண்டினுள். கணவன் வரப்போகும் சந்தோஷத்தில் அவள் உள்ளம் பூரித்தது. அந்நாளை எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தாள். தன்னுடைய விடுதியை விதவிதமாய் அலங்காரஞ் செய்து படங்களை மாட்டிக் கணவனுக்கு இஷ்டமானபடி புஷ்பத் தொட்டிகளை தன் விடுதிக்குப் பக்கத்தில் அழகாக வைத்து கதவு விரிப்புகளை விரித்து ஒழுங்குபடுத்தினுள்.

பேரிடி இடித்ததுபோல், மதுசூதனனைத் தன் பிதா அகாரணமாய்க் குற்றஞ்சாட்டிச் சிறையிலடைத்துவிட்டதைக் கேட்ட நர்மதையின் நெஞ்சு பகீரென்றது. ஏசுநாதரை சிலுவையிலறைந்ததைக் கேட்டுப் பக்தர்களின் உள்ளம் துடித்ததுபோல் நர்மதையின் இதயத்தில் சகிக்கவியலாத சங்கடமும், துடிப்பும், திகிலும், பயமும் உண்டாகிவிட்டன.

நர்மதைக்கு உண்மையில் ஒரு புண்ணியஸ்வரூபனைச் சிறையிலிட்டுவிட்டதாயும் இதற்குப் பிரதியாக பகவான் இன்னும் என்னென்ன தண்டனையைத் தன் பிதாவுக்குக் கொடுப்பாரோ என்கிற பயமும் அவளை வாட்டியது. ஜமீந்தாரைத் திட்டும் ஜனங்களே

அதிகமாயிற்று.

ஏதோ விபரீதத்திற்குத்தான் தன் பிதாவின் போக்கு இத்தகைய கடுமையாய்ப் போகிறது என்றதை நினைக்கும்போது குடல் நடுங்கியது. தன் கணவன் நாளைக்காலை வருவதாகத் தந்தி கிடைத்த சந்தோஷங்கூட அவள் மனத்தில் அதிக எழுச்சியைத் தரவில்லை. இந்த பாதகத்தினால் என்ன விபத்து விளையுமோ! என்ன ஆபத்து நேருமோ! என்கிற திகிலே அவளைப் பிடித்துக்கொண்டது.

மறு தினம் காலை 7 மணிக்கு வண்டி வருகிறது. ஸ்டேஷனுக்குப் போக எல்லோரும் ஆயத்தமாய்க் கிளம்பினார்கள். ஸ்டேஷனில் வண்டி வரும்போதே ஜமீந்தார் ஆரவாரத்துடன் மாலையும் கையுமாகக் காத்திருந்தார். வண்டியும் வந்தது.

முதல் வகுப்பிலிருந்து மாப்பிள்ளை புன்சிரிப்புடன் இறங்கினார். நர்மதையின் உள்ளத்தில் என்றுமில்லாத ஆனந்தமும் உத்ஸாகமும் பொங்கிப் பூரித்தன. அவள் இமைகொட்டாது தன் மன்மத சுகுமாரனை நோக்கி இன்புற்று நின்றாள். வண்டியிலிருந்த ஒரு நடுத்தர வயதுடைய யுவதி வண்டியிலிருந்தபடியே ஒரு வயது ஆண்குழந்தையை மாப்பிள்ளையாகிய மாசிலாமணியினிடம் கொடுத்துப்பின் தானும் இறங்கினாள்.

இவள் யாரோ என்று எல்லோரும் திகைத்தார்கள். மாசிலாமணியின் தாய்தந்தையரும் வந்திருந்தார்கள். மாசிலாமணி சற்றும் அஞ்சாது நர்மதையை நோக்கி நகைத்துக்கொண்டே கூட இறங்கியவள் முகத்தைப் பார்த்தான். அந்தப் பெண் நர்மதையின் பள்ளிக்கூட வாத்தியாராயிருந்தவளாதலால் அவளைப் பார்த்ததும் நர்மதைக்குக் கூறத்திறமற்ற உணர்ச்சி உண்டாகி, "என்ன டீச்சர்! சௌக்கியமா?" என்று தானே முன்கூட்டி விசாரித்தாள்.

அதற்குள் நர்மதையின் கணவன், "குருசிஷ்ய பரம்பரை இனி வேண்டாம். நர்மதா! இந்தம்மாள் உனக்கு ஏற்கெனவே தெரிந்தவர்கள். இவர்களும் நான் சீமைக்குப் போனபோது கூடவந்தார்கள். இவர்களை நான் ரிஜிஸ்தர் விவாகம் செய்துகொண்டேன். இனி நீயும் இவர்களும்...என்று கூறுவதைக் கேட்ட நர்மதைக்கு மேலே கேட்பதற்குள் மூர்ச்சை போட்டுவிட்டு வெட்டிச்சாய்த்த மரம்போல் தபீரென்று கீழே விழுந்துவிட்டாள்.

மாசிலாமணி கூறிய வார்த்தைகள் அங்குள்ள அனைவருடைய காதிலும் விழுந்ததுதான் தாமதம்...தீயை மிதித்தவர்கள்போல்

துள்ளினார்கள். "என்ன! என்ன! ரிஜிஸ்தர் விவாகமா! ஐயையோ! அநியாயமே...நீ இந்த விபரீதமான காரியத்தைச் செய்ததுமல்லாமல் இத்தனை தைரியமாய் எங்கள் முன்பு அழைத்து வரவும் துணிந்து விட்டாயே! அநியாயமே! இந்த அக்கிரமத்தைக் கண்மறையச் செய்வதற்குத்தான் நீ பாழாய்ப்போன சீமைக்குப் போனாயா? நாங்கள் வரும்போது எங்கள் உள்ளம் சந்தோஷமலராய் புஷ்பித்து மதுவைச் சொறிந்தது. இப்போது உன் செய்கையாகிய நெருப்பால் அம்மலர் கருகிச் சாம்பராகிவிட்டதே! மகா பாவி! நீ இம்மாதிரி ஒரு காரியம் செய்திருப்பதாய் ஒரு தகவல் தெரிந்திருக்குமாயின் உன் முகத்திலேயே நாங்கள் விழிக்கவந்திருக்கமாட்டோமே! தங்கக்கிளியைப் போன்றக் கட்டழகியைவிட்டு உன் புத்தி ஏன்டா இம்மாதிரி கெட்டது!" என்று அவனுடைய பெற்றோர்கள் வயிறெரிந்து திட்டினார்கள். ஜெமீந்தாரும் அவர் பரிவாரமும் வாயையே திறக்காது நர்மதையை எடுத்து வண்டியில் போட்டுக் கொண்டு வீடு வந்து சேர்ந்துவிட்டார்கள்.

மாசிலாமணிக்குள்ள குண்டு தைரியம் ஒரு சிறிதும் குறையவில்லை. நான் வருவதாக எழுதினேனேயன்றி உங்களை வரச்சொல்லி நான் எழுதவில்லையே! என் மனம் இச்சித்தபடி நான் நடக்க எனக்கு உரிமையுண்டு. நான் உங்களுடன் வீட்டிற்கு வரப்போவதில்லை. நான் தனி பங்களா வாடகைக்குப் பேசி இருக்கிறேன். அங்குதான் நான் போகிறேன். வீண் ரகளைவேண்டாம். வீட்டிற்குப் போங்கள். "கமான் மைடியர் ரோஸ்! வண்டியில் ஏறு" என்று கொஞ்சலாய் அழைத்தான்.

அடுத்த நிமிடமே குழந்தை சகிதம் காரில் ஜம்மென்று போய் விட்டார்கள். பெற்றோர் வயிறெரிந்தபடி வீட்டிற்குச் சென்றார்கள். விதி யாரைவிட்டது. 'துராக்ருதத்திற்குத் துன்பப்படுவதுதான் பலன்.' என்பது முதலில் யாருக்குத் தெரியும்? நெருப்பின்மீது புழுவென நர்மதையின் இதயம் துடித்தது.

* * * *

மதுசூதனன் உள்ளம் உருகப் பஜனை செய்துகொண்டிருக்கையில் வாரண்டு வந்து பிடித்துச் சென்றதும் ஜமீந்தாருக்கு சாம்ராஜ்ய பதவியே கிடைத்ததுபோலாயிற்று. இச்செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் மதுசூதனனின் புகைப்படத்துடன் வெளியாயிற்று.

விலாஸினி தன் பிதாவுடன் ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலை

பெற்று வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். விலாஸினியின் துக்கத்தைப் பின்னும் சோதிக்காமல் அவளுடைய பிதாவுக்குப் பரிபூர்ணமான குணமடைந்து தெம்பையும், சந்தோஷத்தையுங் கொடுத்தது.

பிதாவின் பொழுதுபோக்கிற்காக பத்திரிகைகள், புத்தகங்கள் முதலியன விலாஸினி தினம் படித்துக் காட்டுவது வழக்கம். மும் தாஜ் பீகமும் அவர்களுடைய மகம்மதிய க்ரந்தங்களைப் படித்து மொழிபெயர்த்துக் கூறுவாள். இவ்விதமாக ஆனந்தமாய் பொழுது கழிந்துகொண்டிருக்கையில் ஒரு தினம் பத்திரிகையை வழக்கம் போல் விலாஸினி பிரிக்கையில் அதில் பெரிய கொட்டையெழுத்தில் பின்வருமாறு எழுதி மத்தியில் மதுசூதனன் தம்பூராவும், சப்ளாவும் வைத்துக்கொண்டு பஜனைசெய்யும் மாதிரியான படமும் காணப்பட்டது.

## பாலசன்யாசியாய், பக்திமானுய் விளங்கிய மதுசூதனன் கைதியானுர்.

என்ற தலையங்கத்தைப் படித்தவுடனே அவளைத் தூக்கி அப்படியே அக்னி ஆற்றில் எறிந்ததுபோலிருந்தது. ஒன்றுமே தோன்றவில்லை. மேலே படிக்கக் கண்ணே தெரியாது அப்படியே சாய்ந்து விழுந்துவிட்டாள்.

இவளுடைய சரித்திரம் பூராவும் மும்தாஜ்பீகத்திற்கும் தெரியுமாதலால் பீகம் இந்தப் புகைப்படத்தைப் பார்த்ததும் புரிந்துகொண்டாள். எத்தனை பழய விஷயங்களை மறந்து வைராக்யமாயிருந்தாலும் அவன் படத்தையும், கைதி என்கிற பதத்தையும் ஒருங்கே பார்க்கும்போதும் அவள் உள்ளம் சகிக்குமா! கட்டுக் கடங்குமா!

ஒருவராவது வாய்விட்டுப் பேசவில்லை. கண்கள் மடைதிறந்தது போல் நீரைப் பொழிகின்றன. விலாஸினியே சற்றுநேரம் கழித்து சிறிது தெளிவுபெற்று, "மும்தாஜ்பீகம்! நீங்களே இதைப் படியுங்கள்" என்று கூறி அப்படியே படுத்துவிட்டாள். பீகம் படிக்கத் தொடங்கினுள்.

"வெகு பக்தியுடன் பஜனை செய்துகொண்டிருந்த ஸ்ரீ மதுசூதனன், பாலசன்யாசி என்று எல்லோராலும் கொண்டாடப்பட்டு வந்தார். ஆனுல் ஏற்கெனவே வஸந்தபுரி ஜமீந்தாருக்கும் அவருக்கும் உண்டான மனஸ்

தாபத்தால் அந்த பாலசன்யாசியை ஊரைவிட்டுத் துரத்தினார்களாம். அவர் ஜமீந்தாரின் மகளை துராக்ருதமாய் கூட இழுத்துச் செல்ல எத்தனித்த குற்றத்தையும் ஜமீந்தார் பொறுத்து அந்த சன்யாசியை அதிகமாகத் தண்டிக்காது துரத்திவிட்டாராம். பாலசன்யாசி அந்த க்ரோதத்தை மனத்தில் வைத்துப் பழிக்குப் பழிதீர்ப்பதற்காக ஜமீந்தாரின் மில்லில் வேலைசெய்யும் ஆட்களைக் கிளறி கலகத்தை உண்டாக்கி வேலை நிறுத்தம் செய்யும் படிக்குச் செய்து லக்ஷக்கணக்கில் நஷ்டத்தை உண்டாக்கிவிட்டாராம். அது தக்க ஆதாரங்களுடன் ருஜுவாகிவிட்டதால் கைதுசெய்துவிட்டார்கள்.

கைதுசெய்யும்போது அவர் பரம பக்தியுடன் பாடிக்கொண்டிருந்தார். அந்த வாரண்டைப் பார்த்ததும் கொஞ்சங்கூட உள்ளங்கலங்கவே இல்லை. அப்போது அவருடைய தோற்றம் ஸ்ரீராமதாஸரின் சரித்திரத்தை ஞாபகமூட்டியது. புன்சிரிப்பும், சாந்தமும் நிறைந்த முகத்துடன் 'ராமா! இதுவும் உன் அனுக்ரகமா! இருக்கட்டும். எல்லாம் உன் செயல். எதுவரினும் வரட்டும். நான் ஒரு பாபமும் அறியாத நிரபராதி என்பதை நீயாவது அறிந்தால்போதும்' என்று கண்ணீர் வழியத்தோத்திரம் செய்தார்.

அவரை நமது பத்திரிகை நிருபர் பேட்டி கண்டு 'ஸ்வாமீ! இந்த அநியாயத்திற்குப் பிரதியாக நீங்கள் வழக்காடப்போவதில்லையா! தக்க வக்கீல்களைக்கொண்டு உங்கள் நிரபராதித்தனத்தை விளக்கவேண்டாமா?'' என்று கேட்டதற்கு அந்த மகான் சிறிதும் கலங்காமல், ''ஐயா! நியாயம் வழங்கும் வள்ளல் என்னப்பனிருக்கிறான். அவன்தான் நியாயத்தைத் தீர்ப்புகூறவேண்டுமேயன்றி மற்றவர்களை நான் நியமிக்கத் தயாராயில்லை. என் மனம் இப்போது முன்னிலும் அதிகரித்த ஆனந்தத்தையும் நிர்மலத்தையும் அடைகிறது. ஏனெனில் இவ்வுலக பாசத்தை அடியோடு மறந்து என்னப்பன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஜனித்த ஜன்மஸ்தானத்தில் ஆனந்தமாய், நிச்சிந்தையாய் தபம்செய்து இன்புறுவேன்.

கருணையங்கடலான ஸ்ரீராமன் எனக்கு இந்த பதவியைக் கொடுத்ததற்கு நான் மிகவும் மனம் பூரிக்கின்றேன். இதில் எனக்குச் சிறிதும் சங்கடமோ, அவமானமோ இல்லை. என்னை இன்னும் பக்குவமடையச் செய்வதற்காக அந்த ஜெமீந்தார் புண்ணியங் கட்டிக்கொண்டதாகவே நான் நினைக்கிறேன். தங்கத்தை நெருப்பிலிட்டுக் காய்ச்சிச் சுத்தியால் அடித்து நன்கு தேய்த்தால் தானே அதன் ஸ்வரூபத்துடன் பளபளவென்று பிரகாசிக்கும். அதேபோல் மனிதனையும் நல்ல சுத்தமாகச் செய்வதற்கு இத்தகைய சோதனைகள்தான் சாதனமானவை" என்று ஓர் தத்வோபதேசம் செய்வதுபோல் செய்ததைக் கேட்டு அங்குள்ள அத்தனை பேரும்—போலீஸ்காரர்கள் உள்பட—பிரமித்து மெய்சிலிர்த்து அந்த உத்தமனை வியந்துகொண்டாடினார்கள். அவரைச் சிறைக்குக் கொண்டுபோய்விட்டார்கள். கடவுளின் சித்தம் எப்படியோ!"

என்று இருந்ததைப் படிக்கக் கேட்டதும் விலாஸினிக்கு உலகமே சுழன்றது. அவளுடைய தகப்பனாரின் மனமும் உருகியது. மூன்று உள்ளங்களும் மூன்று விதம் துடித்தன. எங்கும் நிச்சப்தம் குடிகொண்டது. வானமும் தன் துக்கத்தைத் தெரிவிப்பதுபோல மழை பெய்தது. காற்றும் கடுமையாக வீசியது. பேரிரைச்சலுடன் மரக்கிளைகள் ஆடின.

83047

## கஸ்தூரீ திலகம்

வாணியின் வரப்பிரசாதமாகிய சங்கீதத்தினால் பக்தர்கள் முக்தி அடைந்தனர். கானத்தினால் உலகத்தில் பரவசப்படாதவர்களில்லை. அத்தகைய கானத்தையே ஔஷதமாக உபயோகப்படுத்தி நோயையும் குணமாக்க ஆத்மநாதன் விடாமுயற்சி எடுத்துக்கொள்கிறான். இதற்கு அவன் காதலியே அனுகூலமாகிறாள். பொறாமைப்பிடித்தவர்கள் எளனஞ்செய்து, பலவித ஆபத்துக்களை உண்டாக்குகிறார்கள். ஆனால், வெற்றி யாருக்கு?...படித்துக்களியுங்கள்.

விலை ரூ. 1-4 சந்தாநேயர்களுக்கு ரூ. 1.

| |
|---|
| 14-வது ஆண்டிலிருந்து இதுவரை சந்தா நேயரா ? |

## 1940 டிசம்பர் 31உ வரையில்தான் !

அதன்பிறகு கிடையாதென்பதைக் கவனிக்கவும்.
"சாந்தகுமாரி" ஆரம்பம் முதல் சந்தாதாரராய்ச் சேர்ந்து,
தொடர்ச்சியாக ஆதரித்து, புது வருஷச் சந்தாவை
**31—12—40 தேதிக்குள் அனுப்புகிறவர்களுக்கு**

## தனிப்பரிசு ரூ 2 விலையுள்ள நாவல்

**அப்படியாயின்**

18-வது ஆண்டுச் சந்தாவை அனுப்புகையில், உங்களது சந்தாநம்பரைக் குறித்து, நமது நாவல்களில் முழு விலை ரூ. 2 (சந்தா நேயர்களுக்குக் குறைந்த விலையல்ல.) பெறுமான நாவல் அல்லது நாவல்களின் பெயரை எழுதி இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ரூ 2-க்குமேற்பட்ட விலையுள்ள நாவல்கள் வேண்டுமாயின், அதிகமாகும் பணத்தை அனுப்பவேண்டும். இனாம் நாவல்களின் தபாற்செலவுக்காக உள்நாட்டினர் அணா ஆறு, வெளிநாட்டினர் அணா எட்டும் சேர்த்து அனுப்பவும்.

குறிப்பு :—14, 15, 16, 17-வதாண்டுகளில் இனாம் நாவல் பெற்றவர்கள் மறுபடியும் 18-வதாண்டுக்கும் பெறமுடியாதென்பதைக் கவனிக்கவும்.

---

## 18-வது ஆண்டுப் பரிசுகள் விவரம்

**முதல் பரிசு ரூ. 20**

**2-வது பரிசு ரூ. 15**

**3-வது பரிசு ரூ. 10**

**3 பரிசுகள் ரூ. 5 விகிதம்**

புது வருஷச் சந்தாவை டிசம்பர் மாதம் 26-ந் தேதிக்குள் அனுப்பும் சந்தாநேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு 6 பிரைஸ் சீட்டுகளை எடுத்து அவற்றிற்கு இதிற் கண்ட பரிசுகள் நமது நாவல்களாகக் கொடுக்கப்படும்.

**3** சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நேயர்கட்கு, 18-வது ஆண்டின் சஞ்சிகையை இனாமாக அனுப்புவதுடன் அவர்களும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

## சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ, அத்தனை எட்டணா விலையுள்ள நாவல்களை இனாமாகக் கொடுப்பதுடன், உங்களுடைய நம்பர்களும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணா நாவலுக்கு ஒரு அணா வீதம் (வெளிநாடு $1\frac{1}{2}$ அணா) தபாற்செலவுக்காக சேர்த்தனுப்பவும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், **26**, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

"JAGANMOHINI" Vol. XVII No. 11. Regd. No. M. 2210.




உங்கள்

அழகிய கூந்தலை

பரிபாலித்து வாருங்கள்

டாடா

கம்பெனியாரின்

தேங்காயெண்ணெய்

ஷாம்பூ

உபயோகியுங்கள்

மற்றும் டாடா கூந்தல் தயாரிப்புகளாவன: பரிமள கூந்தல் தேங்காயெண்ணெய், ஜேய்தயாரிப்புகள், லைம் ஸூம் க்ளிஸரைனும், டாடா பிரில்லியன்டைன் அனேகமாக எல்லா பிரபலக்கடைகளிலும்கிடைக்கும். எப்போதும் கிடைக்குமிடம்.

டாம்கோ விற்பனை இலாகா.,

19-A, வாணியர் தெரு, சென்னை.



A TATA PRODUCT

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.,

பம்பாய் ஹவுஸ், ப்ரூஸ் தெரு, பம்பாய்.

தயவுசெய்து உங்கள் கூந்தல் தயாரிப்புகளின் ஸாம்பிள்கள் கொஞ்சம் எனக்கு இலவசமாக அனுப்பவும். தபாற்செலவிற்காக ஒரு அணு ஸ்டாம்பு இத்துடன் அனுப்புகிறேன்.

பெயர்.............................................................

விலாசம்.........................................................

.........................................................கீ. செ. JM. 2.


PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.